## மாதவிடாய் :-

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபர்த்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்) தீமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை. ரூ. 5-0-0. பார்வதி கர்ப்பத்தடைக்கு அபாய மில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத் தடைக்கு ரூ. 3-0-0. நிலையான கர்ப்பத் தடைக்கு ரூ. 4-8-0. (தபால் செலவு ரூ. 0-14-0)

## விரைவாதம் :-

விரைவாதம், குடல்வாயு, பைலேரியா முதலியவற்றிற்கு, பி. எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது. இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3-0-0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0. (தபால் செலவு ரூ. 0-14-0)

## வயிற்றுக் கோளாறுகள் :-

அதிகமான ஏப்பம், அஜீர்ணம், வயிற்றுவலி, வாய்வு, புண், கட்டி, குடல் வலி, முதலியன "தீபன்" சாப்பிட்ட ஒருநாளில் தீருவதோடு நிரந்தரமாக சொஸ்தமாகும் என்பது காரண்டி. விலை ரூ. 3-0-0.

தபாற் செலவு ரூ. 0-14-0.

## கூஞ்சா தைலம் :-

வழுக்கை, மயிர் கொட்டுதல் போன்ற வியாதிகளை நிவர்த்திப்பதுடன் மயக்கத்தையும் போக்குகிறது, தலை மயிர் சம்பந்தமான எவ்வித நோயையும் கண்டிக்கவல்ல சிறந்த கேச விருத்தி டானிக்.

ஒரு பாட்டில் ரூ. 2-0-0 தபாற் செலவு ரூ. 0-14-0 வேறு.



கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

**KAVIRAJ R. N. CHAKRAVARTHI (K. M.)**

24, Debendra Ghose Road, CALCUTTA, 25

மதராஸ்:—அப்பா & கோ., 286, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு, மதராஸ்-1.

பம்பாய்:—இன்டோ ஈரோபியன் கெமிகல் கம்பெனி "ஆனந்தபவன்" பிரின்ஸஸ் தெரு, பம்பாய்.

டெல்லி:—ஜம்னுதாஸ் & கோ., சந்தினி சௌக், டெல்லி.

ஸிலோன்:—ஹெக்டார், மாதெர் & கோ., 19—21. கிராண்ட்பாஸ், ரோடு, கொழும்பு.

# பொருளடக்கம்

விக்ருதி மலர் 10 — புரட்டாசி இதழ் 2

விமோசனம். 13
மோஹனும்பாள் ரங்கநாதன்

புருஷன் 16

படித்துறையில் 21
சௌரி

என் கடன் 25
ஸ்ரீதரம் குருஸ்வாமி

பட்டீசுர-சக்தி முற்றம் 28
எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

புற்று நோய் 34
ஸி. வி. ராமகிருஷ்ணன்

மணல் மேடு 39
மாரார்

விடியுமா ? 45
மாயாவி

வெளியூர்க் கடிதம் 53
சாரி

ஆடிப்பண்டிகை 58
அம்பர்

ஜெய் ஸோம்நாத் (தொடர் கதை) 67
கே. எம். முன்ஷி

பட்டுக் கொடி 83
வை. சுப்ரமண்யன்

பெண்களுக்கு மட்டும் 89
ஷிபாலி சௌத்ரி—சாரி

நல்முத்துமாலை 94
கோமதி சுப்ரமணியம்

அமரகவி 100
கே. எஸ். நாகராஜன்

குறிப்பு :—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.




Agent:— T. T. KRISHNAMACHARI & Co.
12A, Lingha Chetty Street, — G. T. MADRAS.

# காவேரி

விக்ருதி மலர் 10

''சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—''பாரதியார்

புரட்டாசி இதழ் 2


# விமோசனம்


**மோஹனாம்பாள் ரங்கநாதன்**


**பொ**ழுது விடிவதற்குச் சற்று முன் தூக்கம் கலைந்து விட்டதானால் உடம்பில் ஒருவிதச்சோர்வு உண்டாகிறது. பழைய நினைவுகள் அப்போது படத்திரை போல மனசின்முன் எழுகின்றன, தேகம் முழுதும் தளர்ந்துவிடுகிறது.

“ஏனம்மா, மோகனம், இன்னும் எழுந்திருக்க மனசு வரவில்லையா உனக்கு?” என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தாள் யமுனாபாய். “இன்றைக்குத்தானே வெள்ளிக்கிழமை! நாளைக் காலையில் இப்படி ஆயாசத்துடன் படுத்திருந்தால் அர்த்தமுண்டு. ஒரு வேளை நேற்றே வெள்ளிக்கிழமை கொண்டாடியிருப்பீர்கள். நான் என்னத்தைக் கண்டேன்? அதுவும் ஒருவிதத்தில் சரிதான். நேற்றல்லவா ஏகாதசி!” என்றாள்.

யமுனாவின் ரசக்குறைவான பேச்சு என் காதிற்கு அந்தச் சமயம் எப்போதையும் விட அருவருப்பாயிருந்தது, இருந்தாலும் எதை நான் வெளிக்காட்டிக் கொள்ள முடியும்? “எங்களுக்கு ஏகாதசி முந்தாநாள். ஏகாதசி என்றால் எப்படி விசேஷம்?” என்று பதிலுக்குக் கேட்டேன்.

“இது தெரியாதா உனக்கு? சாந்தி முகூர்த்தத்திற்கு நாள் பார்க்கிறவர்கள் முக்கால்வாசி ஏகாதசியாகத்தான் பார்த்து வைக்கிறார்கள்!” என்று சொல்லிச் சிரித்தாள்.

“ருக்மாங்கத சரித்திரம் படித்திருந்தார்களானால் தெரியும்!......இந்தா, நவநீதம்! பிரேமா எழுந்துவிட்டாள். அவளை முதலில் குளிப்பாட்டு. வென்னீர் சுட்டுவிட்டதா என்று அம்மாளைக்கேள்” என்று சொல்லிக்கொண்டே எழுந்தேன்.

பிரேமாவின் நகைகளைக் கழற்றிப் பெட்டியில் வைத்தேன். ஏதோ தீர்மானத்துக்கு வந்தவள்போல் என் மனசு நிம்மதியாக இருந்தது. என் நகைகளையும் கழற்றினேன். குழந்தை எண்ணெய் தேய்த்துக் குளித்தானபிறகு அவள் நகைகளை எடுத்து மறுபடியும் அவளுக்குப் பூட்டினேன். என் நகைகளை நான் தொடவில்லை.

பதினாலு வருஷங்கள் கழிந்துவிட்டன. அடியும் நுனியும் தள்ளினால் ஒரு வாழ்க்கையே பெரும்பாலும் தீர்ந்தது போலத்தான். ஒவ்வொரு நாளாக எண்ணிப் பார்த்தால் எத்தனை நாள்! ஒரு நாழிகை வீணாகக்கழிந்து விட்டால்கூட அதை ஈடு செய்வது அசாத்தியம் என்கிறார்கள். பதினாலு வருஷத்தை ஈடுசெய்ய யாரால் முடியும்? யௌவனமும் உற்சாகமும் நிறைந்த என் வாழ்நாளின் மத்திய பாகம் பாலைவனம் ஆகிவிட்டதே! இதற்குப் பொறுப்பாளி யார்? உண்டு, இல்லை, என்று ஒரு வழியாக இதை இன்றைக்குத் தீர்த்துவிட்டுத்தான் மறுகாரியம்!

இந்த நிலைமையை ஒருகணம் கூடச் சகிக்க முடியாது என்று முதலில் நினைத்திருந்த நான் இத்தனை நாளையும் எப்படிக் கடத்தினேன்? என் மனசு இவ்வளவு தூரம் வறண்டு போகும்படியாகவும் நேர்ந்துவிட்டதே! கடவுளுக்குந்தான் இது சம்மதமா?

என் மனசில் இப்படி விஷத்தை விதைத்தது யாராயிருந்தால் என்ன? குற்றவாளி

கள் குற்றம் செய்யும்போது, அதை நம்மிடம் தெரிவிப்பவர்கள் மாத்திரம் நமக்கு விரோதிகளா? உண்மையில் நமக்கு உபகாரமே செய்கிறார்கள். அதைத்தெரிந்து கொள்ளவில்லையென்றால், நாம் ஏமாந்தது மாத்திரம் அல்ல, ஏமாந்ததையே உணராத முழுமுட்டாள்கள். நமக்கு ஒருவர் ஒருவிதத்தில் நஷ்டத்தையும் உண்டாக்கி, நம்மிடமிருந்து சாமர்த்தியமாகத் தாம் செய்த தீமையையும் மறைத்துவிடுவதென்றால், அதைவிட அசட்டுப்பட்டம் நமக்கு ஏது? அப்பேர்ப்பட்டவர்களோடு மறுவார்த்தை நாம் பேசலாமா?

ஐயோ, இப்படிப் பிறரை அண்டிப் பிழைக்கும்படி தலையில் எழுதிவைத்திருக்கிறதே! இந்த நிலைமைக்கு யாரைப் போய்ச் சொல்கிறது?

பிரேமா இப்போது எப்படியோ, அப்படிச் சகுந்தலா அப்போது குழந்தை. ஒரு வயசு ஒன்றரை வயசு இருக்கும். குடித்தனம் வெகுசீராக நடந்து வந்தது. ஒரு கம்பெனியில் அக்கௌண்டண்ட் வேலை 'அவருக்கு'. எண்பதோ தொண்ணூறோ தான் சம்பளம். ஆனால் பண்டங்கள் மலிந்திருந்த நாள் அல்லவா அது? அதிகம் மிச்சம் வைக்காமல் தாராளமாகவே செலவு செய்தோம். ஆப்பிலும் ஆரஞ்சும் வாசனைத் தைலமும் புஷ்பமுமாக இருந்தது வீடு முழுவதும். தாம் பார்த்துவரும் வேலைக்கு எவ்வளவு வேண்டுமோ அதற்கும் மேலான படிப்பும் தகுதியும் உடையவர் என்ற கௌரவம் அவருக்கு இருந்தது. ஆகையால் எதிர்காலத்தைப்பற்றி இன்னும் இனிமையான கனவுகளே கண்டு வந்தோம். சினேகிதர்களோடு வெளியில் செல்வதைவிட என்னோடு நாலு இடம் போய் வருவதில் அவருக்குப் பெருமை. நானும் எந்த விஷயத்தில் அவர் மனசு கோணும்படி நடந்துகொண்டேன்? அப்படியிருக்கத் திடீரென்று அவர் மனசு மாறிப்போனதற்கு என்ன காரணம்?

முதலில் ஒன்றும் விகல்பமாகவே படவில்லை எனக்கு. என் மனசில் கபடு சூது இருந்தால்தானே பிறர் பேச்சில் சந்தேகம் தோன்றும்!

"மோகனா!"

"ஏன்?" என்று உடனே கேட்டேன். அவர் பதில் சொல்லத் தயங்கினார்.

"ஒரு சினேகிதனுக்கு அவசரமாக ஐந்நூறு ரூபாய் தேவை. என்னையே நம்பியிருக்கிறான். நானும் தருவதாகச் சொல்லிவிட்டேன். என்ன செய்யலாம், சொல்லு."

"பாங்கில் நமக்கு எவ்வளவு இருக்கிறது?" என்றேன்.

"இருநூற்றுச்சொச்சம் இருந்தது. புடவைக்காக அறுபது எடுத்ததுபோக, நூற்றைம்பதுதான் தேறும். அதையும் பார்த்துவிட்டேன்."



"பின்னே எப்படித் தரப்போகிறீர்கள்? ஐந்நூறில் பாதிகூட ஆகவில்லையே."

"ஒரு தொழிலை ஆரம்பிக்க அவனுக்கு இந்தப் பணம் அவசியம். அவனுக்கு ஒத்தாசை செய்யக்கூடியவர்கள் வேறு யாரும் கிடையாது. அதோடு, நம்முடைய கையிலிருந்து பணம் வந்தால் காரியம் உடனே கைகூடும் என்று வேறு அவன் நம்புகிறான்."

"என்னிடம் சொன்னதற்கு நான் ஒன்று சொல்கிறேன், அந்தப்படி செய்கிறீர்களா?"

"முடிந்தால் செய்கிறேன்."

"அப்படிச் சொன்னால் போதாது. சொல்லிவிட்டுப் பிறகு வாய்இழக்க மாட்டேன்!"

"சரி, அவசியம் செய்கிறேன். எனக்கு ஒருவழியும் தோன்றாததால் தானே உன்னிடம் மனசைத் திறந்தேன் இன்றைக்கு."

"சிநேகிதரோ நம்பிக்கையானவர் என்கிறீர்கள். உங்களால் முன்னுக்கு வர வேண்டியவர் என்கிறீர்கள். அப்படியானால் பணம் நான் தருகிறேன். எத்தனை நாளில் அது திரும்பிவரும்?"

"ஒரு வருஷத்துக்குமேல் ஆகாது. அதுவே ரொம்ப அதிகப்படி...அது கிடக்கட்டும். எனக்குத் தெரியாமல்கூடப் பணம் வைத்திருக்கிறாயா?... இல்லையே? பின்னே யாரைக்கேட்டு வாங்கப்போகிறாய், உனக்குத் தெரிந்தவர்களில்?"

"பணம் நான் தருவதாகச் சொன்னேனே தவிர, பக்கத்தில் வாங்கித் தருவதாகச் சொல்லவில்லையே. இதோ, இரட்டை வடம் சங்கிலி. அதோடு, நாலுஜதை வளையலில் இரண்டு ஜதை தருகிறேன். இருபது பவுனுக்குமேல் நிச்சயம் தேறும். யோசனை செய்யாமல் கொண்டுவைத்து அவருக்குப் பணத்தைக் கொடுங்கள். அவர் திருப்பித் தந்ததும் மீட்டுக்கொள்கிறோம். என்ன பிரமாதம்!"

"உன் நகைகளைத் தொட எனக்குப் பாத்தியதை உண்டா? ஏன் சிரிக்கிறாய்?"

"என்னைத் தொடப் பாத்தியம் இருக்கும்போது என் நகைகளைத்தானா நீங்கள் தொடக்கூடாது? அதுதான் சிரித்தேன்! அதிருக்கட்டும்; சீட்டாட்டத்திலேயோ குதிரைப் பந்தயத்திலேயோ நீங்கள் இந்தப் பணத்தைக் கொண்டுபோய்ச் செலவழிக்கப் போவதில்லை. நம்மால் ஒரு குடும்பத்தில் விளக்கேற்றிவைக்கச் சாத்தியம் ஆகும்போது நாம் கையை விரித்துவிடலாமா? நாம் ஒருவருக்குச் செய்தால் நமக்கும் ஒருவர் செய்வார். தயங்காமல் மேற்கொண்டு காரியத்தைப் பாருங்கள்" என்றேன்-

[அடுத்த இதழில் முடியும்]



# "புருஷன்"

## (இதை ஆண்கள் அவசியம் படிக்கவேண்டும்)

['ஸ்திரீ' என்ற தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ரா.ஸ்ரீ. எழுதிய கட்டுரைக்கு எதிர்வாதமாகப் பல கட்டுரைகள் வந்துள்ளன. அவைகள் அனைத்தையும் பிரசுரிப்பதென்பது முடியாத காரியம். முக்கியமான சிலவற்றை மட்டும்,அதிலும் அவற்றிலுள்ள முக்கிய பகுதிகளை இங்கே பிரசுரித்துள்ளோம், இதை நமது வாசகர்கள் ரஸித்துப் படிப்பார்கள் என்பது திண்ணம்.] (ஆசிரியர்)

ஸ்ரீமதி இரத்தினம்பாள்:—

"ஸ்திரீ" என்னும் கட்டுரையில் பெண்களைப்பற்றி எழுதியிருக்கும் புராணங்கள் பொழுதுபோக்கிற்கு உகந்ததாக இருக்கலாம். ஆனால் ஒரு துல்லியமான மனத்தோடு உண்மையை உணர்ந்து எழுதியதாகத் தோன்றவில்லை. மேற்படி கட்டுரையில் உள்ள விஷயதானம் முழுவதும் புருஷர்களுக்கும் பொருந்தும்.

சாதாரணமாக "ஆஸ்திக்கு ஒரு பிள்ளையும் ஆசைக்கு ஒரு பெண்ணும்" என்று ஒரு பழமொழி உண்டு. இந்தப் பழமொழியிலேயே இந்த ஆணின் அகம்பாவத்தைப் பாருங்கள். ஆஸ்திக்கு அவன், ஆசைக்கு மட்டுமே அவள். பெண் என்றால் ஏன் அவ்வளவு கேவலம். இப்படிப் பிறக்குமுன்பே ஸ்திரீகளுக்கு எவ்வித உரிமையுமில்லாமல் அடிமையாக்கி வைக்கும் ஆண், அவர்களை, "ஸ்திரீதான் ஆயுள் முழுவதும் அடிமைப் படுத்துகிறாள்" என்று புகார் செய்வது ஆண்களின் சக்தியற்ற தன்மையையே எடுத்துக்காட்டுகிறது.

ஏன் கலியாணம்தான் ஆகட்டுமே! வாஸ்தவம். ஸ்திரீ தன் 14 வயதிலிருந்தே ஒரு ஆணை அடைய முயற்சி செய்கிறாள், ஆண் தன் 22 வயதிலிருந்து ஒரு பெண்ணை அடைய முயற்சி செய்கிறான். வயது மட்டும் வித்தியாசமேதவிர காரியத்தில் ஒன்றும் வித்தியாசமில்லையே. போதாக் குறைக்கு விவாகத்திற்குமுன் பெண்ணுக்கு என்ன வயது என்று விசாரித்துக்கொள்ளுகிறான். 20 வயது என்றால் 'ஐயோ! ஏன் இவ்வளவு நாட்களாக விவாகம் செய்யவில்லை' என்று கேட்கிறான். ஏன் பெண்களின்மேல் உள்ள பரிவாலா? இல்லவே இல்லை. ஆணுக்கு ஸகஜமாகவே வயது வந்த பெண் என்றால் ஒரு கெட்ட சந்தேகம். தவிரவும் ஐயோ! 14 வயதிலிருந்து 20 வயது வரை உள்ள ஆறு வருஷகாலம் ஆண்களின் அடிமைப் பதவியிலிருந்து தப்பிவிட்டாளே என்ற வருத்தம்தான்.

சரி, ஸ்னோ, பவுடர், ஹேர் ஆயில், பப், ஹைஹீல்ட் ஷூ முதலியவைகள் பெண்கள் மட்டும்தான் உபயோகிக்கிறார்களா? புருஷர்கள் மட்டும் இவைகளை உபயோகிப்பதில்லை என்று உறுதியாய்க் கூறமுடியுமா? சாதாரணமாகக் கல்லூரி செல்லும் மாணவன், அதுவும் தமிழ் மாகாணத்தில் படிக்கும் ஒரு கல்லூரி மாணவன் ஸூட், ஹாட், தினம் ஒரு கலர் பூட்ஸ், கோட்டு, தினமும் முகக்ஷவரம் இவைகளை ஏன் ஸ்வாமி கைக்கொள்ள வேண்டும்? தவிர தலைக்குப் பிரிலியண்டைன் இல்லாவிட்டால் கிராப்பு படியாது போலும். போதாக் குறைக்குச் சிகரட்டு ஒரு அத்தியாவசியமான பொருள். இந்த அலங்காரங்களுடன் தெருவில் எந்த அழகி தன்னை ஏறிட்டுப் பார்க்கிறாள்? யார் அழகில் என்ன குற்றம்? என்ற ஆராய்ச்சியில் தவம் கிடப்பதுபோல நின்றுகொண்டிருப்பதில் ஆணும் ஒரு ஸ்திரீயைப் போலத் தன்னை ஒரு கணகாட்சிப் பொருளாகச் செய்து கொள்வதாகத் தோன்றவில்லையோ? சிகரட்டு எதற்கு? ஒருவேளை புகைபோட்டுப் பெண்களை மயக்கிவிடலாமென்ற எண்ணமோ? அதற்காகப் பகட்டாகப் பெண்கள் ஆடைகள் அணியவே கூடாதா? பள்ளியில் படிக்கவும் கூடாதா? பெண்களின் மூளை விருத்தியில்கூட உங்களுக்கு இஷ்டமில்லையா, ஏன்? எங்கே படித்துவிட்டு மூளையின் சக்தியால் ஆணின் அடிமை வலையிலிருந்து தப்பி விடுவாளோ என்ற கெட்ட எண்ணம்தானே? பயம் வேண்டாம். அப்படி ஸ்திரீகள் செய்துவிட மாட்டார்கள். ஆகையால் தமக்குத் தேவையில்லாத சாமான்களை உபயோகிப்பதில் பெண்களிடம் உள்ள குறை ஆண்களிடமும் தானிருக்கிறது என்ற உண்மையை மறந்துவிடக் கூடாது.

காரியாலயத்திலிருந்து திரும்பி வந்ததும் தினமும் இல்லைப்பாட்டுத்தான் என்கிறார். வாஸ்தவம் அது யார் பொறுப்பு? அந்தக்குறை பெண்களால்தானோ? புருஷனைக் கஷ்டப்படுத்த வேண்டும் என்று வீட்டிலிருக்கும் சாமான்களைத் தெருக் குப்பைத்தொட்டியில்

கொட்டிவிட்டு, அது இல்லை இது இல்லை என்று இல்லைப்பாட்டுப் பாடுவதாக உத்தேசமா? இருக்கட்டும். அப்படி ஒரு சாமான் இல்லை, இல்லை என்றுதான் முட்டிக்கொள்கிறுளே. அதை மறுதினமாவது வாங்கி வருகிறுர்களா? இப்போது அந்த "இல்லைப்பாட்டு" அவர்களைச் சேர்ந்தது. சரி அந்தச் சாமான் தானில்லையே. மறுநாள் சமையலில் அது இல்லாவிட்டால் (உப்பு என்று வைத்துக்கொள்வோம்) பார்க்கவேண்டுமே ஆசைக்கணவனின் ருத்ர மூர்த்தி ஸ்வரூபத்தை! மனைவி கர்ப்பமாயிருந்தால் கர்ப்பம் கலங்கியே விடும். "சே, சமைத்திருக்கிறுயே சமையல். உப்புப்போடக்கூடச் சுரணையில்லை? உப்புப் போட்டுத்தான் சாப்பிடுகிறுயா அல்லது என்ன போட்டு சாப்பிடுகிறுய்?" என்று எரிந்துவிழுகிறுர். ஆம், நல்லகேள்விதான். அந்த உப்பை, வாங்கிவா வாங்கிவா என்று மூன்று நாட்களாக முட்டிக்கொண்டும் வாங்கி வராத கணவன்மார்கள் மட்டும் தம் சுரணைக்குச் சர்க்கரை போட்டுச் சாப்பிடுகிறுர்களோ என்னவோ தெரியவில்லை. அதோடு இல்லை. அன்று அந்த அரைச் சாப்பாட்டோடு கோபத்தில் விர் என்று ஆபீஸ் போய்விடவேண்டியது. பிறகு நான்கு நாள் மனைவியுடன் பேச்சு வார்த்தை சரிவரக் கிடையாது. வீட்டிற்கு வந்தால் தன்னைத்தவிர வீட்டில் எந்த ஆத்மாவும் இல்லாததுபோல் நடந்துகொள்வது. உர் என்று உட்கார்ந்திருப்பது. மனைவி எது கொடுத்தாலும் வேண்டாம். வேளைக்குச் சாப்பிடமாட்டார். இன்னும் இதுபோல் எவ்வளவோ கோபலீலைகள் நடைபெறும். இந்த நான்கு நாளோ அல்லது அதிகமோ புருஷர்கள் மனைவியை அடிமையிலும் கேவலமான வாழ்வு வாழவைக்கிறுர்கள் என்பதை எப்போதாவது உணர்வார்களா அல்லது உணர்கிறுர்களா? உணர்ந்தால் மறுமுறை அப்படி நடந்துகொள்வார்களா? ஆண்களின் அகம்பாவத்தில் அந்த யோசனைக்கு இடமே கிடையாது. ஒரு சாமான் இல்லை என்றுல் "எப்பொழுதும் இல்லைப் பாட்டுத்தான்" என்பது. அந்தச் சாமானில்லாமல் ஒரு காரியம் செய்துவிட்டாலோ மனித ஜன்மத்திலிருந்து மாறிவிடுவது. சே, புருஷர்களின் தன்மைதான் என்னவோ?

அதிலும் ஒரு வேடிக்கை. இதே புருஷன் கலியாணமான சில வருஷங்கள்வரை தேவையில்லாத, மனைவி கேட்காத வஸ்துக்களை எல்லாம் வாங்கி நிரப்புவதில் சமர்த்தர். சில வருஷங்களுக்குப்பின் உப்பு இல்லை என்று மனைவி சொன்னுல்மட்டும் "பணமும் இல்லை" என்றுதான் சொல்லவேண்டுமாம். கடன்தான் வாங்கவேண்டுமாம். ஆனுல் புது மோஹத்தில் வாங்கிய சாமான்களுக்கு மட்டும் எந்த மஹாராஜா கடன் கொடுத்தாரோ, அது அந்தப் புருஷனுக்குத்தான் தெரியும். இப்போது அந்த ராஜா இறந்துவிட்டான் அல்லது மேல்கொண்டு கடன்தர மறுக்கிறுன், அல்லது இப்போது கணவனுடைய சம்பளத்தில் "டீப்ரமோஷன்" (Depromotion). அப்படித்தானே ஸ்வாமி! இப்படிப் புது மோகத்தில் அவளுக்குத் தான் அடிமைத் தனத்தைப் பாடம் சொல்லிக்கொடுக்கவும் வேண்டாம். பின்பு நியாயமான காரணங்களில், கையாலாகாதுபோனுல், யோசனையில்லாமல் ஆண்கள் பெண்களின் அடிமை என்று மனம் நொந்து டாம் டாம் அடிக்கவும் வேண்டாம்.

காரியாலயம் போய்வரும் புருஷர்களை மட்டும் எடுத்துச் சித்திரித்துவிட்டார் கட்டுரையாளர். ஆனுல் வீட்டிலேயே உட்கார்ந்துகொண்டு வேளா வேளைக்குச் சாப்பிட்டுத் தூங்கும் புருஷர்களை என்னவென்று சொல்வது? அவர்கள் மட்டும் எதைச் சாதித்துவிடுகிறுர்கள்? வேளைக்குச் சாப்பாடு தவறினுல் சமையல்கூடச் செய்யமுடியாமல் மஹா வேலையோ உனக்கு என்று குதிக்கிறுர். ஆனுல் இதே புருஷர், ஸ்திரீ வீட்டுக்கு விலக்காகும்போது இவர்கள் கைவரிசையும் வாய் வரிசையும் எங்கே போகிறது? வேலைதானில்லையே. நிதானமாகச் சமைத்துப் போடட்டுமே. ஒரு காலன் சீமையெண்ணெய் ஆனுல் கூட அடுப்பு பற்றுவதற்கே கண்டிப்பாய் மறுத்துவிடுகிறது. பின்பு ஆத்திரமும் பசியும் அடங்க ஹோட்டல் சாப்பாடு வயிற்றை நிரப்புகிறது. ஒருநாள்கூடச் செய்யமுடியாத இந்த வேலையில் மனைவி மட்டும் ஏதோ சந்தர்ப்பத்தால் ஒரு சிறு தாமதம் செய்துவிட்டால் மிக எளிதாகக் கோபித்துக் கொள்ளவும் வையவும் முன் வந்துவிடுகிறுர்கள். பெண், அவர்கள் கோபம் வசவு எல்லாவற்றையும் எதிர்வாதாடாமல் பொறுமையாய்க் கேட்டுக் கொள்வதுடன் மனதில் பயத்துடன் தன் அடிமை வாழ்வை எண்ணி மறுமுறையும் தவருமலிருக்க முயல வேண்டும்.

இப்போது யாரோ ஒருவர் சொன்னதுபோல, போக்கு வரவு ஸ்வதந்திரத்தைப்பற்றி ஆராய்வோம். ஒரு ஸ்திரீ, ஸினிமா, டிராமா அல்லது பொழுது போக்காகக் கடைவீதிக்குப் போக ஆசைப்பட்டால் புருஷன் உத்தரவோ இன்னும் சில வீடுகளில் புருஷத் துணையோ இல்லாமல் போகக்கூடாது என்பது ஒரு அடக்குமுறைச் சட்டம். உண்மையில் இந்த ஏற்பாட்டை யூகமுள்ள ஸ்திரீகள் வரவேற்கத்தான் செய்கிறுர்கள். ஆனுல் அதில் அடங்கியிருக்கும் தாத்பரியத்தைத்தான் ஆராய வேண்டும். அதாவது அந்த விஷயத்திலும் பெண்கள் ஆண்களுக்கு அடிமை என்பதே அடிப்படை. தப்பித்தவறி ஒரு ஸ்திரீ புருஷனிடம் தெரியப்படுத்தாமல் வீட்டிவில்லாத ஒரு சாமான் வாங்கிவர, கடைவீதிக்கோ அல்லது

ஸ்நேகிதர்களைப் பார்த்துவர அவர்கள் வீட்டிற்கோ சென்றுவிட்டால் இது கணவனுக்குத் தெரிந்தவுடன் ஏளனமான பேச்சு, கோபம், வார்த்தைகள் இவைகள் எல்லைமீறிப் போய் விடுவதும் உண்டு. தனக்குச் சிரமமில்லாமல் மனைவி ஒரு சாமானை வாங்கி வந்தாளே என்ற நன்றி விசுவாசமில்லா விட்டாலும், குற்றம் குறை சொல்லவும் மனம் முறிந்து போகும் அளவில் வார்த்தைகளைக் கொட்டி ஸ்திரீயை மனம் புழுங்கச் செய்யவும் மட்டும் முன்வந்து விடுகிறார்கள், இப்படிப்பட்ட கணவனிடம் மனைவி அடிமையா அல்லது மனைவியிடம் கணவன் அடிமையா என்பதை யார் விளக்குவது? எல்லாவற்றிற்கும் உடலையும் மனத்தையும் ஒடுக்கித்தான் ஸ்திரீ ஆயுள் முழுவதும் வீட்டில் சேவகம் புரிந்து வளைய வருகிறாள். அவளுக்கு எங்கே புகழும் நல்ல பெயரும் கிடைக்கப் போகிறது?

ஆனால் நாகரிகம் என்று சொல்லிக்கொள்ளும் தற்கால உலகில் சில பெண்கள் தலைகால் தெரியாமல் தத்தாரியாக அலையலாம். அதை ஒரு அடிப்படை என்றோ ஆதாரமென்றோ எடுத்துக்கொண்டு பொதுவாக ஸ்திரீகள் எல்லோரையுமே அந்த ஸ்தானத்தில் வைத்து, "ஸ்திரீகள் ஆண்களை ஆயுள்பரியந்தம் அடிமைப் படுத்துகிறார்கள்" என்று புகார் செய்வது உசிதமாகத் தோன்றவில்லை.

ஸ்திரீகள் வருஷம் ஒன்றோ அல்லது இரண்டு வருஷத்திற்கு ஒரு முறையோ குழந்தைகள் என்ற பரிசை ஆண்களுக்குக் கொடுத்து அதனால் ஆண்களின் அடிமைத்தனத்தை அதிகப் படுத்துகிறார்களாம். என்ன வெட்கக்கேடான பேச்சு? ஐயோ! வேண்டாம் ஸ்வாமி. அந்தப் புனிதமான வேலையை முடிந்தால் இனி தாங்களே ஏற்றுக்கொள்ளுங்கள் பிரபு! பின்பு அதைத் தங்கள் பரிசாகவே ஸ்திரீகளிடம் தங்கள் கட்டளைகளையும் தெரிவித்து விடுங்கள். ஸ்திரீகள் அவர்கள் அடிமைத்தனத்தில் அதையும் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்வார்கள் ஸ்வாமி. ஒரு குழந்தை விடிய விடியக்கத்தி, அதைத் தாயார் உடலும் கையும் அசந்து போகும்படி கண் விழித்துத் தாலாட்டுப்பாடி ஓய்ந்துபோய், அப்பாடா என்று தன் நினைவில்லாமல் கண்ணயர்ந்தாலும் குழந்தை மறுபடியும் சிணுங்க ஆரம்பித்தவுடன் அதைச் சமாதானப் படுத்தவோ தூங்க வைக்கவோ துப்பு இல்லாமல் உடனே சிறிதும் சிரமமின்றி "அடி......அடியே..........உன்னைத்தான்...... எழுந்திரு, குழந்தை கத்துகிறது பார், தூளியை ஆட்டு" என்று நெஞ்சில் ஈரமில்லாமல் இருந்த இடத்தை விட்டு அசையாமல் உத்தரவிடுவதில் மட்டும் ஆண்கள் சமர்த்தர்கள். பெண் மட்டும்தான் பெண்ணாய்ப் பிறந்த விதியை நினைத்து அடிமை வாழ்வை எண்ணி மறுபடியும் அவள்தான் குழந்தையைச் சமாதானம் செய்யவேண்டும். இந்த லக்ஷணத்தில் குழந்தையால் பெண்கள் ஏதோ ஆண்களை அடிமைப் படுத்த முற்படுகிறார்கள் என்ற அர்த்தமில்லாத முறையீட்டுக்கு ஆதாரம் ஏதாவது உண்டா?

சிறிது நாள் முன்பு ஆங்கில நாவல் ஒன்று படித்தேன். அது புகழ்பெற்ற நாவலாசிரியர் ஸர் வால்டர்ஸ்காட் அவர்கள் எழுதியது. அதில் ஒரு இடத்தில் சொல்லுகிறார்? "பெண்கள் ஆண்களின் ஓய்ந்த நேரத்தில் அவர்களைச் சந்தோஷப் படுத்தும் ஒரு விளையாட்டுக் கருவியே" என்று. ( Women are but toys simply to amuse our lighter hours ) இதிலிருந்து யார் அடிமை வாழ்வு வாழ்கிறார்களென்று தெரிகிறதா? மற்றொரு நாவலாசிரியர். "ஒரு புருஷன் ஒரு முறை சிறு வயதில் தவறுதலாய் ஒரு பெண்ணைக் கெடுத்திருந்தாலும் அதன் பின்பு வேறொரு பெண்ணை அந்தரங்கத்தோடு புனிதமாக விவாகம் செய்து கொள்ள ஆசைப்பட்டால் அதனால் பாதகமில்லை" என்று, ( A youthful error does not necessarily incapacitate a man from aspiring for an honourable marriage ), எப்படி புருஷ நியாயம்? இவைகளிலிருந்து "ஸ்காட்" காலம் முதல் பெண்கள்தான் அடிமை என்பதற்கு வேறு அத்தாக்ஷி என்ன வேண்டும்?

இப்படியாகப் பெண்கள் தங்கள் அடிமைத்தனத்தையும் அவர்களிடம் அகப்பட்டு விழி பிதுங்கி நிற்கும் பரிதாபத்தையும் எண்ணி, "ஈசுவரா! எங்களை ஏன் இந்த வாழ்வு வாழப் படைத்தாய். உனக்குக்கூட எங்கள் மீது இரக்கமில்லையா" என்று பிரலாபிப்பதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்?

பொதுவாகவே எந்தப் புத்தகத்திலும் பெண்கள் ஆண்களின் அடிமையாகத்தான் இருக்கத் தகுதி உள்ளவர்கள் என்ற அர்த்தம் தொனிக்கும்படி, மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ எழுதி வருவதை அநேகர் கவனித்திருக்கலாம், பெண்களைக் கேலிசெய்வதே ஆண்களின் பொழுதுபோக்கு. அவர்களை நிரந்தரமாக அடிமைப்படுத்துவதே ஆண்களின் விளையாட்டின் (ஏன் பிறந்த பிறவியின்) எல்லை என்று கூடச் சொல்லலாம், ஆனால் ஆண்கள் தாங்களாகவே தங்கள் அடிமைத்தனத்தைப் பிரயோஜனப் படுத்திக்கொள்ள முன் வந்தால் அதற்குப் பெண் என்ன செய்வாள்? அது அவள் குற்றமா?

முடிவாகச் சொல்லப்போனால் பெண் இனம் புருஷனிடம் அடிமை வாழ்வைத்தான் விரும்புகிறது. உதாரணமாக, சிலமாதங்கள் முன் அமெரிக்காவில் கூடிய மாதர் மஹாநாட்டில்

கூட (நாகரிகம் முதிர்ந்த தேசம், ஞாபகமிருக்கட்டும்.) பெண்கள் ஆண்களுக்குச் சரிசிகராக ஸ்வதந்திரம் அனுபவிக்க இஷ்டமில்லை என்றும், ஸ்திரீகள் புருஷர்களுக்கு அடங்கி அவர்கள் திருப்திப்படி நடப்பதிலேதான் பெண்கள் சந்தோஷம் அடைவதுடன் பெண்களின் உன்னதத் தன்மை பிரதிபலிக்கும் என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது புருஷர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இந்தத் தீர்மானத்தை எந்த யூகமுள்ள ஸ்திரீயும், அதுவும் இந்திய ஸ்திரீ கண்டிப்பாய் ஆதரித்து வரவேற்பாள். உண்மையில் பெண்கள் ஆண்களின் முன்னேற்றத்திலும், புகழிலும், கீர்த்தியிலும் அவர்கள் சந்தோஷத்திலும்தான் நாட்டம் கொண்டிருக்கிறார்களே யொழிய அவர்களை எவ்விதத்திலும் அடிமைப் படுத்தவோ கஷ்டப்படுத்தவோ எள்ளளவும்முயலுவதில்லை என்பதை அறியவேண்டும்.

ஸ்ரீமதி லோசனா பட்டாபிராமன் :—

ஆண் என்பவன் ஸ்திரீகளை அடக்கி ஆள முயலும் ஓர் பிரகிருதி. அவன் தனவந்தனாயிருந்தாலும் சரி, ஏழையானாலும் சரி. பெண் என்றால் அவனுக்கு இயற்கையிலேயே இளக்காரம் உண்டாய்விடுகிறது.

ஆண்களுக்கு விவாகமாகி மனைவி வந்துவிட்டாலோ கேட்கவேண்டியதில்லை. அவள் தன்னுடைய அடிமை என்பது ஆணின் மனப்பான்மை. பெண்ணானவள் எவ்வளவோ சாமர்த்தியமாய்க் குடும்பக் கஷ்டங்களை நிர்வகித்து வந்தாலும், அவனுக்கென்னவோ தன்னாலேதான் சூரியன் உதிக்கிறது என்ற எண்ணம். பெண்ணானவள் அதிகாலையிருந்தே வீட்டுவேலைகளைக் கவனிக்கவேண்டும். இவனோ எட்டு மணிக்குப் படுக்கையில் இப்படியும் அப்படியும் புரண்டுகொண்டு, எழுந்திருக்கலாமா வேண்டாமா என்று யோசிப்பான். காப்பி சாப்பிட்டானதும் தான் அவனுக்கு மணி எட்டரைக்குமேல் ஆகிவிட்டது என்பது விளங்கும். உடனே சத்தம் போட ஆரம்பிப்பான். 'ஏண்டி, என்னை முன்னாலேயே எழுப்பவில்லை, எனக்கு இன்று ஆபீஸ் உண்டு என்று உனக்குத் தெரியாதா, ஏன் நான் மானேஜரிடம் இடிபடணும்னு எண்ணமா?' என்பான்.

"ஐயோ, நேற்றே கோபித்துக்கொண்டாரே இன்றைக்குச் சீக்கிரம் எழுப்புவோம்" என்று மறுநாள் அவனைச் சீக்கிரமாக எழுப்பினால் அப்போதும் கலாட்டாதான். "உனக்கு மூளையில்லை, மனுஷனைச்சற்று நிம்மதியாய் விடமாட்டேனென்கிறாயே! உனக்கென்ன மத்தியானமெல்லாம் வீட்டில் தூங்குகிறாய். காலையில் நான் சற்றே கண்ணயர்ந்தால் அது உனக்கு கண்ணை உறுத்துகிறதா" என்று சீறுவான்.

மொத்தத்தில் ஆண்களைப் பாம்பு என்று தாண்டவும் முடியாது, பழுதை என்று மிதிக்கவும் முடியாது.

ஆண்களுக்கு ஸ்திர புத்தியே இருப்பதில்லை. சந்தோஷமாய் இருக்கும் சமயத்தில் பெண்களைத் தலையில் வைத்துக் கூத்தாடுவார்கள், மறு நிமிஷம் 'தொப்' பென்று அதல பாதாளத்தில் தள்ளிவிடுவார்கள்.

பெண்ணுக்குத் தானாக எந்த காரியத்தையும் செய்ய உரிமை கிடையாது. கடைத்தெருவுக்குப் போகவேண்டுமா, புருஷன் உத்தரவு இருந்தால்தான் நகரலாம். பச்சைமிளகாய் வாங்க வேண்டுமா புருஷன் மனமிரங்கினால்தான் உண்டு. ஆனால், இவனோ இரவு பன்னிரண்டு மணி வரையில், நண்பர்கள் வீட்டில் சீட்டாடிக்கொண்டோ, அல்லது சினிமாக் கொட்டகையில் சினேகிதர்களோடு 'நைட் ஷோ' வில் காலத்தைப் போக்கிக்கொண்டோ இருக்கலாம். ஏதடா, வீட்டில் ஒரு மனுஷி தனியாயிருக்கிறாளே என்ற சிந்தனையே எழாது.

"ஏன்னா, ரேஷன் அரிசி வாங்கவேண்டுமே, இன்னிக்காவது மறக்காமல் வாங்கிக்கொண்டு வரேளா" என்று மனைவி கூறுவாள்.

"இன்றைக்கு என்னால் முடியாது, நாளைக்குப் பார்க்கலாம்" என்பான் கணவன். மறுநாள் கேட்டாலோ, "நேற்றே கேட்டுத் தொலைப்பதுதானே இன்றைக்குத் தம்பிடிகூட என்னிடம் கிடையாது" என்று வீட்டையே அமளி துமளி ஆக்குவான். "நேற்றே சொன்னேனே, நீங்கள்தானே இன்றைக்கு ஆகட்டும் என்றீர்கள்," என்றால் அதற்குப் பதில் ஒரு உறுமல்தான். இதுதான் ஆண்களின் ஞாயம்.

சில சமயங்களில் முன்னெச்சரிக்கையின்றி நாலு சிநேகிதர்களை அழைத்துவருவான் ஆண். வந்ததும் வராததுமாய், "ஏய், திக்காய் நாலு கப் காப்பி கொண்டுவா" என்று ஆர்டர் பறக்கும். வீட்டிலோ காப்பிப்பொடி மருந்துக்கும் இராது. என்ன செய்வது? மனைவி மெதுவாய், காப்பிவைக்கவேண்டிய இடத்தில் மோரைவைத்துச் சமாளிக்கப் பார்க்கிறாள். இந்தச்சூசனையை அவனுக்குப்புரிந்துகொள்ளத் திறனுண்டு என்று நினைக்கிறீர்களா? ஊஹூம் துளிகூட கிடையாது. நாலுபேர் இருக்கிறார்களே என்று சிறிதேனும் யோசனை பண்ணமாட்டான். "ஏண்டி, நான் உன்னைக் காப்பி கொண்டுவரச் சொன்னேனா, மோர் கொண்டுவரச் சொன்னேனா" என்று மானத்தை வாங்கிவிடுவான். கடைசியில் பக்கத்து வீட்டில் கடன் வாங்கியாவது காப்பி போட்டுக் கொடுத்தால்தான் அன்று அவள் பிழைத்தாள். இல்லாவிட்டால், கணவனின் கோபத்திற்கும் அந்த

நாலு நண்பர்களுடைய (அவர்களும் ஆண்கள் தானே) ஏச்சுக்கும் ஆளாகவேண்டியதுதான்.

ஒரு நாள் வீட்டில் வற்றல் குழம்பு செய்து வைத்திருப்பாள் மனைவி. கூட அப்பளம் சுட்டு ஒரு துவையல் அரைத்து வைத்திருப்பாள். அன்று கணவனுக்கு நல்ல பசி. சாப்பிட உட்கார்ந்ததும் வற்றல் குழம்பையும் அப்பளத்தையும் பார்த்தவுடன் அவனுக்குப் பற்றிக்கொண்டு வரும். "என்னடி தரித்திரம் வேண்டிக்கிடக்கிறது? சம்பாதிக்கிறவன் நானா? நீயா? யாருக்காகச் சேர்த்துவைக்கிறாயோ தெரியவில்லையே! ஏதடா, புருஷன் சாப்பிடணுமே என்ற நினைவு இருக்கா, உனக்கு" என்று எரிந்து விழுவான். மறுநாள் இதற்காக முருங்கைக்காய் சாம்பார், உருளைக்கிழங்கு வறுவல், டோமாடோ ரஸம், முட்டைக்கோஸ் கறி முதலியவைகளைப் பண்ணினால், அன்றைக்கும் பலன் வசவும் திட்டும்தான். "என்ன இது? இங்கு பணம் என்ன செடி கொடியில் காய்க்கிறது என்ற எண்ணமா என்ன? ஊம், உன்னைச் சொல்வதில் குற்றமென்ன? கஷ்டப்பட்டு சம்பாதிப்பது நான்தானே. உனக்கு அதிலுள்ள சிரமம் எப்படித் தெரியும்?" என்று கத்துவான். இதற்குக் காரணம் வேறொன்றுமில்லை. ஹோட்டல் டிபன் அன்று பலமாய் இருந்ததுதான்.

"நீங்களே, இனிமேல் தினம் என்ன சமையல் பண்ணுவது என்று சொல்லிடுங்கோ" என்று மனைவி கேட்டால், "ஏன் அதைவிட உனக்கென்ன காரியம்" என்று அதற்கும் இணங்க மாட்டான்.

மொத்தத்தில் ஆண்களால் பெண்களுக்கு எவ்விதமான உதவியும் கிடைக்காது. குழந்தை அழுதுகொண்டிருந்தால், அதைச்சற்றுஎடுத்து வைத்துச் சமாதானப்படுத்துவோம் என்று அவனுக்குத் தோன்றாது. "ஏய், இங்கே வந்து இதை எடுத்துக்கொள்" என்று குழந்தையைச் சுட்டிக் காண்பிப்பான். உள்ளே என்ன வேலை இருந்தபோதிலும், அதை அப்படியே போட்டுவிட்டு மனைவி ஓடி வரவேண்டும், இல்லாவிட்டால் வீடு இரண்டு படும்.

ஆண்களுக்குச் சில விஷயங்களில் பொறுமையே இருப்பதில்லை. அதிலும், மனைவியின் உறவினர்கள் யாராவது நாலு நாட்களுக்கு விருந்தினராய் வந்துவிட்டால். போதும்! வந்தது ஆபத்து! காரணமில்லாமல் கோபித்துக்கொள்ள ஆரம்பிப்பான். "ஏன் இந்தக் கண்ணாடி இங்கே இருக்கிறது? என்னுடைய சீப்பு எங்கே காணோம்?" என்று அனாவசியமாய்ச் சத்தம் போடுவான். பார்க்கப்போனால் கண்ணாடி பழைய இடத்தில்தான் இருக்கும். சீப்பு அவன் கோட் பாக்கெட்டிலேயே இருக்கும்., ஆனால் இந்தச் சீற்றத்திற்குக் காரணம் விருந்தாளிகளான மனைவியின் உறவினர்.

ஆனால் இதே அவனுடைய உறவினர்களாயிருந்தால் வீடு ஓரே அமர்க்களப்படும். அவர்களுக்கு வீட்டில் ராஜோபசாரம். அவர்களை அழைத்துக்கொண்டு சினிமா என்ன, சர்க்கஸ் என்ன கண்காட்சி என்ன என்று சுற்றுவான். இதுவும் ஆண்களின் ஒரு விசேஷ குணம்.

அதோ என் கணவர் கூப்பிடுகிற சத்தம் கேட்கிறது. எப்படியும் இந்தக் கட்டுரையை அவருடைய கண்களில் படாமல் பத்திரிகைக்கு அனுப்பவேண்டும். இல்லாவிட்டால்.........

அவரும் ஆண் வர்க்கத்தைச் சேர்ந்தவர் தானே!

* * *

[குறிப்பிடத்தக்க மற்றும் சில கட்டுரைகள் வந்துள்ளன. அவைகளைப் பிரசுரம் செய்ய இயலாததற்கு வருந்துகிறோம். அக்கட்டுரையாளர்களின் பெயர்களை மட்டும் இங்கே தருகிறோம்:-

ஸ்ரீமதி அலமேலு சிவராமன், பம்பாய்.
,, ஜி. எஸ். கமலாதேவி, பொன்மலை.
,, மிஸஸ். வி. வி. ராமகிருஷ்ணன், பங்களூர்.
,, சசிகலா, நியூடெல்ஹி.
,, வி. சாவித்ரி விச்வநாதன், பனாரிஸ்.
,, ஆர். ஜயா, நியூடெல்ஹி.
,, கமலா 'ஸ்திரி" என்ற கட்டுரையாளரின் மனைவி, பாட்னா.
,, எல், ஜி. பதி, திருநெல்வேலி.
,, மிஸஸ். டி. எஸ். நாகமணி, மேட்டூர் அணை.
,, ஹரிணி, சென்னை.
,, கோமதி சுப்பிரமணியம், திருச்சி.
,, வி. ஆர். புவனா, பம்பாய்.
,, மிஸஸ். லக்ஷ்மி நாகராஜன், திருவல்லிக்கேணி.]

(ஆசிரியர்)



# படித்துறையில்

சௌரி

"அம்மா! வாயேன் போகலாம்"

ஆறு வயதுபெண் ராஜி, பத்மாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு நச்சரித்தாள். அவள் அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

"எல்லாரும் போயாச்சு. உனக்குத்தான் இளம்ப மனசு வரவில்லே. எழுந்திரேன் அம்மா!" என்று அதட்டினான் மூத்தபிள்ளை ராஜப்பா. அவனுக்கு வயது ஒன்பதுதான். பொல்லாத்தனமும், பிடிவாதமும் அந்தக் குழந்தைகளுக்கு நிறைய இருந்தன.

ஏதோ யோசனையிலாழ்ந்திருந்த பத்மா இந்த அதட்டலைக் கேட்டதும் தன் நிலைக்கு வந்தாள். "போகலாமேடா, ராஜப்பா! வெயில் தணியவில்லையே. சாயந்திரம் போய்ச் சாப்பிட்டாத்தான் நன்னாயிருக்கும். இப்போ அங்கே ஒருவரும் வந்திருக்கமாட்டா."

ராஜப்பாவிற்குச் சமாதானம் ஏற்படவில்லை. அவனது ஆசை யுள்ளம் துடித்துக்கொண்டிருந்தது. "எல்லாம் எங்களுக்குத் தேவலை. நீ எழுந்துவாயேன். எதிராத்து கோபு, மணியெல்லாம் அப்பவே போயிட்டான்கள். ஏ, ராஜி! குரங்குமாதிரி உக்காந்திருக்கியே, கத்தி அழுடி! அப்போதான் அம்மா கிளம்புவாள்." என்று கண்ணைக் கசக்கினான். தூண்டுதலே தேவையில்லாத ராஜிக்கு அது தாற்றுக் குச்சி செலுத்தினதுபோல இருந்தது, அழ ஆரம்பித்துவிட்டாள். பத்மாவிற்குச் சிரிப்பும், கோபமுமாக வந்தது. அவர்களுடைய பிடிவாதத்தையும், விசித்திர ஒற்றுமையையும் பார்த்து, தன் வேதனையைக் கூட மறந்து சிரித்தாள். "பிசாசுகள்...... வெயில் தணியறத்துக்கு முந்தி படித்துறைக்குப் போய் என்ன செய்யறதாம். உங்கள் பிடிவாதம் பாழ்க்க. இதிலே மட்டும் ஒத்துமை" என்று கடிந்துகொண்டே சோற்று மூட்டையுடன் கிளம்பினாள்.

* * *

பாமணியாறு பெருகிக் கொண்டிருந்தது. பெரிய குளம் கிராமத்துப் படித்துறை அழகாகவும், அகலமாகவும் இருந்தது. கரையிலுள்ள மண்டபத்தில் பெருக்கி, மெழுகிக் கோலமிட்டிருந்தார்கள். சிறு பிள்ளைகளும், பெண்களும் கதிரவன் தலைசாய ஆரம்பித்ததுமே அங்கே விளையாட வந்துவிட்டார்கள். விழுதுகள் விட்டுப் பரவி வளர்ந்திருக்கும் அங்குள்ள ஆலமரத்தடியில் விளையாட அக்குழந்தைகளுக்கு மிக ஆர்வம். அன்று பதினெட்டாம்பெருக்கு. குழந்தைகளின் கும்மாளத்திற்குக் கேட்கவா வேண்டும்?

பத்மா சாத மூட்டையை மண்டபத்தில் சற்று மறைவான இடமாகப் பார்த்து வைத்தாள். "கொஞ்ச நேரம் விளையாடிவிட்டு வாங்கோ. சண்டை போடாமல் விளையாடணும்." என்று எச்சரித்து இரண்டு பேரையும் அனுப்பினாள். தனியாக உட்கார்ந்திருந்த பத்மாவிற்கு எங்கெல்லாமோ எண்ணம் அலைந்தது. நதியைப் பார்த்துக்கொண்டு தன் உள்ளத்து வழியில் ஒருத்தியாக அலைந்து கொண்டிருந்தாள்.

"வறுமையின் வறட்சி தாங்காமல் தவித்து பெருமூச்சுவிடும் பெரும் குடும்பிகளைப்போல, கோடையில் வறண்டு அனல் காற்று வீசிக் கொண்டிருந்தபோது இப்பாமணியாறு 'ஐயோ பாவம்!' என்றிருந்தது. இப்போது திடீர் சொத்துக் கிடைத்தவன் திமிர் நடை போடுகிற மாதிரி பெருக்கெடுத்து ஓடுகிறது, எல்லோருக்கும் ஒரு 'காலம்' இருக்கத்தான் இருக்கிறது.

"நானும் பத்து வயது வரை எவ்வளவோ சிறப்பாக வாழ்ந்தாயிற்று. அப்பொழுதெல்லாம் அப்பாவிற்கு நான் ஒருத்திதான் செல்லக் குழந்தை. பூர்வீகச் சொத்தும் கொஞ்சம் இருந்தது. கூட ஒரு பெரிய பண்ணையில் காரியம் பார்த்து வந்தார். ஊரில் எல்லாருக்கும் எங்களிடத்தில் தனி மதிப்பு. எப்போதும் கைகட்டி நாலு ஆட்கள் காத்திருக்க, செழிப்பும் சிறப்புமாக வாழ்ந்தால் யாருக்குத்தான் பெருமையிருக்காது? ஆனால், நல்லதும், கெட்டதும் நீண்டு நிலைத்திருக்காது என்பது சரியாயிற்று, என் பத்தாவது வயது முடிவதற்குள்ளேயே அம்மா பரலோகம் போய்ச் சேர்ந்தாள். ஊராரும், உற்றாரும் சேர்ந்து என் அப்பாவை உலகத்தாரைப்போல வாழவைத்தார்கள். ஒரு வருஷத்திற்குள்ளேயே சித்தி வந்ததை அப்போது பெருமையாகவே எண்ணி ஆனந்தப்பட்டேன். வருகிறவள் நல்லவளாக இருக்க வேண்டுமென்றுதான் என் அப்பாவும் எல்லாப் பொருத்தமும் பார்த்துக் கலியாணம் பண்ணிக்கொண்டார். வந்த சித்தியும் நல்ல பெயர் எடுக்கவேண்டுமென்றுதான் வந்திருப்பாள். அவள் காலடி வைத்த வேளையோ, அல்லது என் அப்பாவின் போதாத காலமோ, இல்லாவிட்டால் என் தலைச்சுழிதானோ, வேறு எதுவோ எனக்குத் தெரியாது, கஷ்டகாலம் ஆரம்பித்துவிட்டது. வீண் சண்டைகளும், அநியாயச் செலவுகளும் அடிக்கடி அப்பாவிற்கு ஏற்பட்டுக் கொண்டிருந்தன, வேலையும் போயிற்று. சொத்தும் கரைந்து கொண்டிருந்தது. அப்பா உள்ளம் வெதும்பி வேதனைப்பட ஆரம்பித்தார். சித்தி ஆங்காரப்பட்டு அலை மோத ஆரம்பித்தாள். நான் அழுது கொண்டிருந்தேன்.

"என் பருவம் ஆண் துணையின்றி வாழமுடியாத பிராயத்திற்கு வந்தது. என் கலியாணத்திற்கு அப்பா எத்தனையோ ஆசைத்திட்டங்கள் போட்டு வைத்திருந்தார். கை சளைத்துப் போனபோது அதையெல்லாம் நினைக்கவே அவருக்கு வெட்கமாயிருந்தது. கடைசியில் ஏழை உபாத்தியாயருக்குப் பத்தினியாக வந்து சேர்ந்தேன். கிராமப்பள்ளிக்கூடத்தில் என்ன வரும்படி கிடைத்துவிடும்? தினம் நாலு மைல் அலைந்து ஏதோ பட்டினிச்சாவு இல்லாமல் குடும்பத்தை நடத்துகிறாரே அதுதான் பெரிய சாதனை. மணிமணியாக இரண்டு குழந்தை

கள் பிறந்திருக்கிறார்கள். எங்களுக்கு எவ்வளவோ மகிழ்ச்சிதான். ஆனால் இவைகளே பெரிய பெரிய பணக்காரர் வீட்டில் பிறந்தால் பாலும் பழமுமாகச் செழுமையாக வளரலாம். இங்கேதான் சோறு கிடைக்கிறதே பெரும் விருந்தாக இருக்கிறதே!.....,"

"அம்மா! அம்மா!! இங்கே பாரேன்,"

பத்மாவதி திடுக்கிட்டுத் திரும்பினாள். ராஜி தன் தோழியின் முதுகில் உட்கார்ந்துகொண்டு காட்சியளித்தாள்.

"சீ, பைத்தியம். என்னடி விளையாட்டு இது?" பத்மா கொஞ்சலாகக் கண்டித்தாள்.

"உப்பு மூட்டை அம்மா, உப்பு மூட்டை! ஏரோப்ளேன் பாண்டி விளையாடினோம். நான் ஜயிச்சேன். இவள் தோத்துப் போயிட்டாள். அதுதான் உப்பு மூட்டை தூக்கறாள்." "போறுண்டி, ராஜம்! கீழே இறங்கு."

குழந்தைகள் இரண்டும் பத்மாவிடம் ஓடி வந்தன. இரண்டையும் அணைத்து முத்தமிட்டாள். "அம்மா! ராஜத்தாத்திலே எல்லா சாதமும் பண்ணியிருக்காளாம். பஜ்ஜி, குணுக்கு எல்லாம் பண்ணியிருக்காளாம். பெரிய பாத்திரத்திலே கொண்டுவரப் போறாளாம். நீ பஜ்ஜியெல்லாம் கொண்டுவந்திருக்கியோ?"

பத்மாவிற்குச் சங்கடமாக இருந்தது. என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. வாயில் வந்ததை அடக்காமல் சொல்லிவைத்தாள். "அவாத்திலே நிறையப் பணமிருக்கு. எல்லாம் நிறையப் பண்ணுவா. நாம் ஏழைதானேடி கண்ணு!"

ராஜிக்கு அந்தப் புரியாத—புரியக்கூடாத பதில், பஜ்ஜி குணுக்கு கொண்டுவராததை மட்டும் உணர்த்திவிட்டு மறைந்தது.

"போ, அம்மா! பஜ்ஜி இல்லாட்டால் நான் அந்த சாதத்தை சாப்பிடமாட்டேன்." ராஜி கண்ணைக் கசக்க ஆரம்பித்துவிட்டாள். பத்மாவிற்கு ஏன் அப்படிச் சொன்னோமென்றிருந்தது. "போடி, அசடு! விளையாட்டுக்குச் சொன்னேன். பஜ்ஜியெல்லாம் தரேன். நீ போய் விளையாடு, போ!" என்று தாற்காலிகமாகத் தேறுதல் சொல்லிவைத்தாள். ராஜி குதித்துக்கொண்டு தோழியுடன் ஓடிவிட்டாள். பத்மா குழந்தைகள் மறைகிறவரை பார்த்துக்கொண்டிருந்தாள். நெஞ்சை ஏதோ அமுத்துகிறமாதிரி இருந்தது. தன் கலக்கத்தையும், கண்ணீரையும் யாராவது பார்த்துவிட்டுப் போகிறார்களே என்று முகத்தை ஆற்றுப்பக்கம் திருப்பிக்கொண்டாள். மறுபடியும் மனது அலைய ஆரம்பித்துவிட்டது.

"பாவம், குழந்தை எதைக் கண்டாள். குடும்பக் கஷ்டத்தைப்பற்றி அதுகளுக்கு என்ன கவலை. ஏன் கவலைப்படவேண்டும்? நமக்குத்தான் தீராது. அந்தப் பூசலும், புழுதியும் மாசுபடாத குழந்தை யுள்ளத்தை எதற்காக அண்டவேண்டும்? வேண்டாம். கூடவேகூடாது!

"இன்று காலையில்...... என் பிசகுதான். விடிந்ததும் விடியாததுமாக அவர் மனதைப் புண்படுத்திவிட்டேன். அரிசிக்கடன் வாங்கி அன்றாடங்காய்ச்சி யாகப் பிழைப்பதுதான் வழக்கமாகிவிட்டதே. அதற்கு யார் யாரிடத்தில் ரோஷப்பட்டுக்கொள்வது? என் வாயும் அப்படிப் படபடத்திருக்கவேண்டாம் அவரும் காறித்துப்பாத தோஷமாக ஏசித் திட்டிவிட்டு, பட்டினியாகப் போயிருக்கவேண்டாம். நானும் கோபித்துக்கொண்டு எத்தனை நாழிகைதான் படுத்திருப்பது. நாளும் கிழமையுமாகக் குழந்தைகள் ஏமாறிக் கண்ணைக் கசக்கினால் பார்க்கப் பொறுக்குமோ! கூடையை எடுத்துக்கொண்டு நானே போனேன், அரிசி கடன் வாங்க. உத்தமி யென்றால் பண்ணையாத்து மாமிதான். ஏழையென்கிற அங்கலாய்ப்பு, சம்சாரி என்று இரக்கம். இந்தக் காலத்திலே அது யாருக்கு வரும். புண்யவதி குறைவில்லாமல் கொழித்து வாழணும். எத்தனையோ தடவை கடன் வாங்கித் திருப்பித்தரவில்லை. அதற்காகத் துளிகூட சிணுங்கவில்லை. உடனே இரண்டுபடி அரிசியைக் கொட்டிக் கொடுத்து, குழந்தைகளைச் சாயந்திரம் ஆத்தங்கரைக்கு அனுப்பு. மறந்துடாதே என்று உள்ளன்போடு சொன்னாளே! அந்த மாமி நன்னாயிருக்கணும். அவர் மத்தியானங்கூடச் சாப்பிட வரவேயில்லையே, எங்கேயும் கை நனைக்க மாட்டாரே. பட்டினிதான். என்ன கஷ்டகாலம், ஈசுவரா! காலம் இப்படியேவா போயிடும்........"

"அம்மா! கீழத்தெரு மாமியெல்லாம் வந்திண்டிருக்காள். வண்டியெல்லாம் வரது, அம்மா!" ராஜப்பா கத்தினான். முகத்தை லேசாக அலம்பிக்கொண்டு வேதனையை வெளிக்காட்டாமல் புன்சிரிப்போடு மண்டபத்திற்கு வந்தாள்.

"ராஜியையும் கூட்டிக்கொண்டு, சாப்பிட வா!" ராஜப்பா தங்கையைக் கூப்பிட ஓடினான். தெருப் பெண்களெல்லாம் சாத மூட்டையோடு வந்து சேர்ந்தார்கள். இரைச்சல்களுக்கிடையே குழந்தைகள் சாப்பிட உட்கார்ந்தன. ராஜப்பாவும்; ராஜியும் வந்து

சேர்ந்தார்கள். பத்மா மூட்டையை அவிழ்த்து இருவருக்கும் இலையைப் போட்டாள். எதிரிலும், பக்கத்திலும் பல குழந்தைகள் சாப்பிட்டுக்கொண்டிருந்தன.

"அம்மா! பஜ்ஜி போடறேன்னியே. அதை முதலிலே போடு." ராஜி ஆவலோடு கேட்டாள். பத்மா ஒரு கணம் சிந்தித்தாள். "ராஜி! சமத்தோல்லியோ, அப்பளம் வடாமெல்லாம் பொரிச்சுக் கொண்டுவந்திருக்கேன். பஜ்ஜி நாளைக்கு நிறையப் பண்ணித்தரேன். இதைச் சாப்பிடு!" பத்மா இருவர் எதிரிலும் இலைகளில் சாதங்களை எடுத்து வைத்தாள். "பஜ்ஜி இல்லாட்டா, எனக்கு இதெல்லாம் வேண்டாம்" ராஜி முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து விட்டாள். ராஜப்பா சிணுங்கினான். "சக்கரைப்பொங்கல் பண்ணல்லியா, அம்மா? எல்லாராத்திலேயும் கொண்டு வந்திருக்காளேம்மா." அவனுக்கு அழுகையும், ஆத்திரமுமாக வந்தது, பத்மா எரிச்சலோடு "அதெல்லாம் பண்ணலை. இதைச் சாப்பிடுங்கோ, போறும். நெய்யுக்கும், வெல்லத்துக்கும் எங்கே போறது." என்று கடிந்துகொண்டாள்.

"அப்படியானால் எனக்கு இதெல்லாம் வேண்டாம்."

"சாப்பிடாவிட்டால் தொலையுங்கோ, பிசாசுகள்!"

ராஜப்பாவுக்கு ரோஷம் பொத்துக்கொண்டது. இலையிலிருந்த சாதத்தை ஆற்றில் எறிந்தான். முணுகிக்கொண்டிருந்த ராஜியும் அதைப் பார்த்துத் தன் இலையை தண்ணீரில் தள்ளினாள். அவ்வளவுதான். பத்மாவிற்கு ஆத்திரம் பொங்கியது. இருவர் முதுகிலும் நாலு அறை வைத்தாள். இருவரும் அழ ஆரம்பித்து விட்டனர். பக்கத்துக் குழந்தைகள் இரக்கத்தோடு பார்த்தார்கள். சில தெருப் பெண்கள் பத்மாவைப் போலிக் கோபத்தோடு வைது கண்டித்தார்கள். பத்மாவின் உள்ளம் மிகவும் சங்கடப்பட்டது. எவ்வளவோ ஆறுதல் சொன்னாள். குழந்தைகள் அதையெல்லாம் ஏற்கவில்லை.

சற்றுத் தொலைவில் களைத்து, வதங்கி, களையிழந்த முகத்தோடு சோர்ந்து வந்துகொண்டிருந்த ஒரு நடுத்தர மனிதரைப் பார்த்ததும் இருவரும் அழுகையை நிறுத்தினர். "அப்பா!" என்றழைத்துக்கொண்டு அவரை நோக்கி ஓடினான் ராஜப்பா. ராஜியும் தன் குறையை முறையிட எழுந்துநின்று கையையாட்டி, "இங்கே வா, அப்பா," என்றழைத்தாள். பத்மாவிற்குப் புது சாம்ராஜ்யம் கிடைத்துவிட்டாற்போல இருந்தது. தன்னையும் மறந்து கொஞ்சதூரம் எதிர்நோக்கிப் போனாள். உங்களுக்கும் சேர்த்துக் கொண்டுவந்திருக்கேன். கையையலம்பிக்கொண்டு சாப்பிட வாங்கோ. இப்படிப் பட்டப் பட்டினியாக......" வந்தவர் ஏதும் பேசவில்லை. கைகளையலம்பிக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தார். முகத்தில் பசி மயக்கம் சுழலிட்டது. "எனக்கு சக்கரைப் பொங்கல் வேண்டாம், அம்மா! இதுவே போறும்." ராஜப்பா கெஞ்சிய குரலோடு கையை நீட்டினான்.

"எனக்கும் கொடு அம்மா!" ராஜி குழைந்துகொண்டு முன்னால்வந்து உட்கார்ந்தாள். பத்மாவிற்கு ஆனந்தம் அலை மோதியது. வாயில் சாதத்தையடைத்துக்கொண்டு, கேள்விக் குறியோடு நோக்கும் தன் கணவனைக்கூட அவள் கவனிக்கவில்லை. "ராஜப்பாவுக்கும், ராஜிக்கும் இருக்கிற சமத்து யாருக்கு வரும். சக்கரைக்கட்டி" பத்மா புகழ்ந்துகொண்டே பாத்திரத்தைக் கையிலெடுத்தாள். "எவ்வளவு நாழியா உன்னைத் தேடறது பத்மா! இந்தா, இதைக் குழந்தைகளுக்குக் கொடு." ஒரு கிழ அம்மாள் சாதக் கூடையைப் பத்மாவிடம் கொடுத்தாள். இரு குழந்தைகளும் எட்டிப் பார்த்தன.

"அம்மா! அதோ சக்கரைப் பொங்கல் இருக்கே. எனக்கு நிறைய அம்மா!" ராஜப்பா கெஞ்சினான்.

"அம்மா! அதோ பஜ்ஜி! எல்லாம் எனக்குத் தானே, போடு அம்மா! எனக்குப் போடு!" ராஜி துடித்தாள்.

"எல்லாம் உங்களுக்காகத்தான் பண்ணையாத்து மாமி கொடுத்திருக்கார். மெள்ளச் சாப்பிடுங்கோ" பத்மா பரிவோடு சொல்லிக் கொண்டே புதிதாக வந்ததை மூன்றுபேர்களுக்கும் பரிமாறினாள்.

குழந்தைகள் இரண்டும் இலையில் லயித்து விட்டன. மேகப்படலத்தைவிட்டு விலகின் கதிரவன்போல அவர் முகம் பொலிவுற்றது. அதைக் கண்டு பத்மா மலர்ந்து நின்றாள்.

# "என் கடன்............"

## ஸ்ரீதரம் குருஸ்வாமி

"நம் ஊர் பெரிய திருவடியின் மகிமையே மகிமை!" என்றார் பெரியவர். பதினைந்து வருஷங்களுக்கு முன் அந்த ஊரை நான் முதல் முதலாகப் பார்த்தேன். ஸந்நிதிக்கு நேராக இரட்டை சாரித்தெரு. அத்தனை வீட்டுக்காரர்களுக்கும் என்னை அப்போது அறிமுகம் செய்வித்தாயிற்று. கோயிலைச் சுற்றி அழைத்துப்போனார்கள். ஸேவை கிடைத்தது, பிரஸாதமும்தான்! அப்புறம் பதினைந்து வருஷமாக எப்படியோ அங்கே போகமுடியாமல் போயிற்று.

கோயிலை வலம் வரும்போது பார்த்தேன். மதிலிலும் மண்டபத்திலும் ஆலங்கன்று அடர்ந்து தழைத்துச் செழுமையாக மண்டி வளர்ந்திருந்தது. "இதை அப்போதைக்கப் போது வெட்டி எறியக்கூடாதா?" என்று கேட்டேன். "எவ்வளவு வெட்டினாலும் அது அப்படித்தான். அதை வெட்டித் தீர்த்து ஒழித்துவிடுவது என்பது மனிதனால் ஆகக் கூடிய காரியம் அல்ல. நானும் கொஞ்ச நாள் பார்த்தேன். இனிமேல் அதோடு போராடிக்கொண்டு நிற்பதென்பது முட்டாள் தனம்!" என்றார் ஒரு இளைஞர். அவர் சாதுர்யமாகப் பேசினார். எனக்குச் சாணக்கியரின் நினைவு வந்தது. தம்மைத் தடுக்கி விழச்செய்த ஒரு சிறு பூண்டை வேருடன் கல்லி எடுத்துச் சிதைத்துக் காற்றில் பறக்க விட்டவர்கூட அவ்வளவு உற்சாகமாகப் பேசியிருக்கமாட்டார்!

நான் வசித்து வந்த பட்டணத்தில், என் வீட்டுக்கு அருகில், ஒரு கோவில். அங்கே பய பக்தியுடன் பிரதக்ஷிணம் செய்பவர்கள் பத்து நாளுக்கொருதரம் அந்த மண்டபத்தின் மேல் நான் ஒரு பன்னீர் மரக்கிளையைப் பிடித்துத் தொத்தி ஏறுவதைப் பார்த்துத் திகைத்து நிற்பார்கள். ஸ்வாமியின் தலைக்கு மேலே தன் கால் படும்படி அந்தக் கட்டிடத்தில் நான் நிற்பது மஹா அபசாரம் என்பார்கள். பலவிதத்தில் அவர்கள் என்னைப் பற்றியும் கலி முற்றிவிட்டதைப் பற்றியும் விமரிசனம் செய்துகொண்டு போவது என் காதில் விழும். நான் உள்ளூறச் சிரித்துக்கொள்வேன்; ஸ்வாமியும் அதைக் கேட்டுப் புன்முறுவல் பூத்து நிற்பார். அந்த வட்டாரத்தில் நான் வசித்த எட்டு வருஷமும் கோயில் சுவர்களில் எந்த இண்டு இடுக்கிலும் ஒரு விரலத்தனை உயரங்கூட அரசங்கன்றோ ஆலங்கன்றோ வளர்ந்துவிடாது. ஒரு ஈயை எவ்வளவு விரட்டினாலும் மறுபடியும் திரும்பத் திரும்ப அது வந்து பண்டத்தை மொய்க்கிறது. அதற்கு உள்ள விடாமுயற்சி நமக்கு இல்லாமல் போகலாமா?

திருச்சிக்கு மேற்கில் நாலைந்து மைல் தூரத்தில் உள்ள ஒரு கிராமத்தில் நன்செய் நிலம் ஒரு காணி திருச்சி மலைக் கோவிலுக்கு மான்யமாக விட்டிருக்கிறார்கள். அதன் வருவாய் எதற்குப் பயன் படுத்தப் பட்டு வருகிறது தெரியுமா? செங்குத்தான பாறை மீதுள்ள சுவரில் அதற்கென்று அனுபவப்பட்ட சில பணியாட்கள் வருஷந் தோறும் கயிற்றைக் கட்டிக்கொண்டு துணிகரமாக இறங்கிக் கல்லிடுக்கில் முளைத்துவரும் செடிகளை ஒழிப்பதற்காகத்தான். அது பார்ப்பதற்கே பயமுண்டாக்கும் காட்சி. அப்பணி இன்றும் நடந்துவருகிறது. நீதிக்கதை ஒன்று கேட்டிருக்கிறோம்; சிறு பிள்ளைகளுக்கும் அதைச் சொல்கிறோம்: ஒரு ஊரில் ஒரு தெருமத்தியில் ஒரு கல் சற்று மேலே தெரியும்படி புதைந்திருந்தது. அந்த வழியில் போகிறவர்கள் அதில் இடறிக்கொள்வார்கள்; விழுவார்கள்; திட்டிக்கொண்டே போவார்கள். ஒருவராவது அதை அப்புறப் படுத்த வேண்டும் என்று முன்வந்ததில்லை. அயல் ஊரார் ஒருவர் அந்தப் பக்கம் வந்தார்; பார்த்தார். இத்தனை ஜனங்கள் கஷ்டப்படுவதாவது என்று அவருக்குத் தோன்றியது. அதே வேலையை அப்பொழுதே செய்துவிட்டுத் தான் மறுகாரியம் என்று தீர்மானித்தார். கடப்பாறையும் மண்வெட்டியும் வாங்கி வந்தார். இரண்டு நாழிகை ஆயிற்று, கல்லைப் பெயர்த்து அப்புறப்படுத்த. கல்லின் அடியில் ஒரு பெட்டி இருந்தது. அதில் பொன் நாணயங்களும் "இந்தக்கல்லை அகற்றும் பரோபகாரிக்கு, இவ்வூர் அரசன் விக்ரமஸிம்ஹன் கொடுக்கும் பரிசு" என்ற குறிப்பும் இருப்பதைப் பார்த்தார்; தெருவைச் சமப்படுத்திவிட்டுப் போனார். என்று.

அமெரிக்க ஐக்கிய நாட்டுப் பட்டணங்களில் சிலவற்றில் வருஷத்தில் ஒருநாள் நகர பரிபாலனத்தார் ஒரு கொண்டாட்டம் நடத்துகிறார்கள். அந்த வருஷம் முழுவதிலும் மற்றப் பட்டண வாசிகளுக்குப் பிரத்தியேக முறையில்

ஆடம்பரம் இல்லாமல் உபகாரம் செய்துவந் திருக்கும் ஸ்திரீ புருஷர்களைப்பற்றி ரஹஸ்ய மாகப் புலன் விசாரிக்கிறார்கள். அவர்களுள் ஒருவரைப் பொறுக்கியெடுத்துப் பிடித்துக் கொண்டுபோய், அவர் செய்த ஸேவைகளையெல் லாம் பத்திரிகையிலும் பிரஸங்கத்திலும் பாராட்டி, அவருக்குத் தங்கள் நன்மதிப்பின் சின்னம் ஒன்றை வழங்கி உபசரித்துப் பஹி ரங்கமாகக் கௌரவிக்கிறார்கள். பட்டணம் முழுவதும் அன்று பொதுஜன ஸேவை செய்வ தைப்பற்றித்தான் உற்சாகமான பேச்சு, சிந்தனை, கற்பனை, பிரசாரம்!

அது அமெரிக்கப் பண்பாடு. பிரசார வன்மை அங்கே கைத்தொழிலுக்கும் வியா பாரத்திற்கும் தான் பயன்படுகிறது என்று எண்ணவேண்டாம். சீரிய குணங்களுக்கு எந்தச் சமூகமும் தலை வணங்குகிறது. தீவிர மான முற்போக்கு முறைகள் சமூக முன்னேற் றத்திற்கும் தன்னலமற்ற முறையில் அங்கே கையாளப்படுகின்றன.

நம் நாட்டினரைப்பற்றி மேலை நாட்டினர் ஒருவர் பரிஹாஸமாக ஒரு விஷயம் முன்பு ஒரு முறை பிரத்தியேக ஸம்பாஷணையின்போது குறிப்பிட்டார்: "ஆங்கிலேயன் பஹிரங்க மாக (பலர் கண்ணில் படும்படி) உணவருந்து கிறான்; அந்தரங்கமாக (யார் கண்ணிலும் படாமல் மறைவில்) உடல் பளுவைக் குறைத் துக்கொள்கிறான். இந்தியன் அதிரஹஸ்யமாக (மறைவில்) உணவருந்துகிறான்; பஹிரங்க மாகப் பலர் எதிரில் உடல் பளுவைக் குறைத் துக்கொள்கிறான்" என்று. நம் தெருக்களையும் சந்து பொந்துகளையும் ஆற்றோரங்களையும் நாம் வைத்திருக்கும் நிலையே இதற்குச் சாக்ஷி.

இந்தியன் துணிதுவைத்துக் குளிக்காத நாள் இல்லை. ஆனால் அவன் வீட்டுக் குப்பையை யும் அழுக்கையும் நாலுபேர் நடக்கும் தெரு வில் கொண்டு சேர்த்துவிட்டால் அவன் மனம் நிம்மதி அடைந்துவிடுகிறது. மேலை நாட் டான் அவ்வாறு தினம் குளிப்பதில்லை, துணி துவைப்பதில்லை. ஆனால் அவன் தன் சுற்றுப் புறத்தைத் தூய்மையாக, பளபளப்பாக, வைத்துக்கொள்கிறான். தொத்து நோயும் கொசுவும் எங்குண்டு? சமூக ஆரோக்யம் எங் குண்டு?

காந்தியடிகள் நவகாளியில் மஹோன்னத மானயாத்திரை செய்கிறார். ஒருவரே நடந்து செல்லக்கூடிய குறுகிய ஒற்றையடிப்பாதை. பாதையோரத்திலுள்ள எச்சிலும் மலமும் அவர் கண்ணில் படாமலிருக்குமா? இலைக் கொத்துகளைச் சேர்த்து, மலத்தை அது சேர வேண்டிய இடத்தில் கொண்டுபோட்டுப் பாதையைச் சுத்தப்படுத்துகிறார். உலகம் போற்றும் உத்தமர் தம் திருக் கையினால் செய் யக்கூடிய காரியமா இது? கிராமவாசிகள் திகைத்து நிற்கிறார்கள்.

"நான் செய்யமாட்டேனா இந்தக் காரி யத்தை? இப்படித் தாங்களே இதைச் செய் வது என்னை அவமானப் படுத்துவதாகாது?" என்று முறையிடுகிறாள் கூடவரும் ஸ்ரீமதி மனு பென். இப்படி நடப்பது ஒருமுறை இருமுறை யல்ல. அடிகள் பதில் சொல்வதென்ன? அழுக்கை அகற்றித் தூய்மை உண்டாக்குவது என்னுடைய கோட்பாடு, என்னுடைய தர்மம். எனக்குப் பசி எடுக்கும்போது நீ சாப்பிட்டு விட்டால் என் பசி அடங்கி விடுமா? நானே அதைச் செய்தேனானால்தான் எனக்குத் திருப்தி ஏற்படும். நாளைக்கு வந்து இந்த நாட்டுப்புறப் பாதையை மறுபடியும் கவ னித்துப்பார். மறுபடியும் ஜனங்கள் இதை அசுத்தப்படுத்திவிட்டால் என்னிடம் வந்து சொல். நான் வந்து சுத்தப்படுத்தி விடு கிறேன்" என்கிறார் அடிகள், அவருக்கே உரிய உறுதியோடும் உற்சாகத்தோடும்.

சமூகம் என்பது நம்முடைய பரந்த உடம்பு. அதில் எங்கே அழுக்குத் தங்கினாலும் நம் முடைய உடம்பில் ஒருபுறம் தினவு ஏற்படும், அரிக்கும். அரிக்கும் இடத்தைச் சொறிந்து விட்டால் ஆறுதல் உண்டாவதைப்போல, அழுக்கு அகற்றப்பட்டால் நம் உடலிலும் ஒரு ஆறுதல் பிறக்கும்; அமைதி உண்டாகும்.

"What is everybody's business is nobody's business." சமூகத்தின் பொதுக் காரியம் என்றால், அது எந்தத் தனி நபரின் பிரத்தியேக காரியமும் அல்ல, என்று சொல் லும் நிலைக்கு நாம் அதைப் புரிந்து கொண்டி ருக்கிறோம்.

"என்னுடைய முட்டாள்தனம் அது, அப் பொழுதே நான் குப்பைத்தொட்டியில் எடுத் துப் போட்டிருக்க வேண்டும்" என்று பாட்ட னார் வருந்திப் பிரயோஜனம் என்ன? உடைந்த கண்ணாடி தெருவில் கிடந்தது. செருப்பணிந் திருந்த பாட்டனார் அதை அலக்ஷியமாக மிதித்துக்கொண்டு நடந்து தம் வீட்டிற்குள் போய்விட்டார். அந்த நினைவு மறுபடி அவ ருக்கு எப்போது வந்தது? தம்முடைய அருமை யான பேரப்பிள்ளை செருப்பில்லாத காலுடன் தெருவில் விளையாடப்போய்க் கண்ணாடியைக் குத்திக்கொண்டு வரும்போதுதான். அப்புறம் டாக்டர் வீட்டுக்குக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு எத்தனை நாள் நடந்தார், பாவம்!

ஒருவர் பழத்தை உரித்துக் கவலையில்லாமல் தெருவில் தோலை வீசிவிட்டு, தாமே அதில் பிறகு வழுக்கி விழும்போது, "எந்த மடை

யனோ நடுத்தெருவில் தோலைப் போட்டிருக்கிறான்" என்று ஆத்திரம் தீரக் காரசாரமாகத் திட்டிக்கொள்வதில்லையா?

சிவனடியார்களுள் நாவுக்கரசருக்குத் தனிப் பெருமைதான். செல்லுமிடமெல்லாம் சிவாலயத்தில் முளைக்கும் புல் செடி முதலானவைகளை முதலில் அகற்றி அவ்வாலயத்திற்குப் புத்துயிர்தரும் உழவாரப் பணி செய்தவரல்லவா அவர்! அவர் வாக்குப் பிரகாசம் பெற்றது அப்பணியின் சிறப்பினாலே. "சம்பந்தன் தன்னைப் பாடினான், சுந்தரன் பொன்னுக்குப் பாடினான், என் அப்பன் என்னைப் பாடினான்" என்று சிவபெருமானே மனமுவந்து அவரை விசேஷித்துப் பாராட்டியதும் அச்சேவையின் சிறப்பினால்தான் அல்லவா!

பதினைந்து வருஷம் கழித்து மேலே ஆரம்பத்தில் சொன்ன சிறிய ஊருக்கு இரண்டாவது தடவையாகப் போனேன். ஊர் எல்லையிலே நண்பரைச் சந்தித்துவிட்டேன் அவரோடு பேசிக்கொண்டு, தெருவில் அவர் முன்பு வசித்துவந்த வீட்டு வாசலில் நின்றேன். வீடு பெயரளவில் பூட்டியிருந்தது. துருப்பிடித்த அந்தப் பூட்டு தொட்டதும் உதிர்வதற்குத் தயாராக இருந்தது. வீடு உட்புறம் முழுவதும் இடிந்து விழுந்திருந்தது. மேலே சாகோபசாகையாக நுணா மரம் மற்றச் செடி கொடிகளுடன்கூடக் கூரைபோல் பரந்து நின்றது. "நான் இப்போது இந்த வீட்டில் இல்லை. வீட்டில் தொடர்ச்சியாக நான் குடியிருந்து விட்டால் அனுபோக பாத்தியம் கொண்டாடி விடுவேன் என்று யாரோ போய் வீட்டுக்காரர்களைக் கலைத்துவிட்டார்கள். நான் இருந்த மட்டும் கறையான் தலைகாட்டாமல் பார்த்துவந்தேன். நல்ல கட்டிடம்—இப்படியாயிற்று!" என்று சொல்லி நண்பர் நாலு வீடு தாண்டித் தாம் தற்சமயம் குடியிருந்த வேறு ஜாகைக்கு என்னை அழைத்துச் சென்றார். அந்தத் தெருவில் மூன்றில் இரண்டு பங்கு வீடுகளின் கதி இப்படியேதான். கொஞ்சம் பழுது பார்த்தால் மறுபடியும் வாஸயோக்யம் ஆகிவிடும் என்னும் நிலையிலிருந்து வெறும் குட்டிச் சுவர் வரை பல நிலையிலும் அங்கே வீடுகள். அதில் ஸ்வாரஸ்யம் என்னவென்றால், ஜனங்கள் வசித்து வந்த வீடுகளுள் இரண்டு மூன்று, பூட்டப்பட்டிருந்த வீடுகளில் சிலவற்றைவிடச் சிதிலமாகப் போயிருந்ததுதான்! தனக்குப் பயன் இல்லை; ஆனால் அப்பண்டம் பிறனொருவருக்கும்கூடப் பயன் படக்கூடாது, என்னும் மனப்பான்மை இருக்குமட்டும் தனக்கே வரப்போகும் பெரிய நஷ்டம் ஒருவன் அறிவிற்கு எட்டிவிடாது.

வீடுகள் குறைந்தால் ஜனத்தொகையும் குறையும் அல்லவா? அங்கே இரண்டொருவர் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு மறுபடியும் சீட்டாட்டத்தில் முனைந்து உட்கார்ந்து கொண்டார்கள். பழைய நினைவுகளுக்கு உயிரூட்டிக்கொண்டே ஏழெட்டுப்பேர் என்னுடன் ஸம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். மேலைக் கோடியில் கோவில் இருந்தபக்கம் திரும்பினேன். வெறிச்சென்றிருந்தது, ஊன்றிக் கவனித்தேன். பின்புறம் இடிந்த கட்டிடத்தின் சுவர்களில் பாசி படர்ந்திருந்தது. முன்புறம் மண்டபம் இருந்த அடையாளமே காணோம்! கிட்டப் போனேன். கருடாழ்வார் மாத்திரம் மேற்கு நோக்கிக் கைகூப்பி நின்று காட்சியளித்தார். "பாருங்கள், ஸார், இந்த அதிசயத்தை! பிரம்மாண்டமான மண்டபம் அத்தனையும் படபடவென்று இடிந்து விழுந்தது. ஓடிவந்து எட்டிநின்று பார்த்தோம். இந்த விக்ரஹத்தின்மீது கையகலம் காரைகூட விழவில்லை. விழுந்திருந்தால் கல் சிலை சின்னபின்னமாகியிருக்கும். இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? நம் ஊர் பெரிய திருவடியின் மஹிமையே மஹிமை!" என்றார் அர்ச்சகர்.

இப்போது அக்கோயில் திருப்பணிக்கு மூவாயிரரூபாய்க்கு மேல் வசூல்செய்து பக்தகோடிகள் உதவியிருக்கிறார்கள்.



# பட்டீசுர-சக்தி முற்றம்

**எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்**

**ஊ**ரிலே என்ன இருக்கிறது? பேரிலே என்ன இருக்கிறது? என்பர் இலேசாக! ஊர்ப்பெயரிலே ஒரு பொருள், ஒரு கதை, ஓர் அதிசயம் பொதிந்து கிடக்கும், ஊடுருவி நோக்கினுல்.

ஊர்களின் பெயரிலே அகம், வாயில், முற்றம் என்னும பதங்கள் அமைந்திருக்கும், திருஏரகம, திருமுல்லைவாயில், திருச்சத்திமுற்றம் முதலியன உதாரணமாம்.

சோழவள நாட்டிலே. கும்பகோணத்துக்கு அருகே, தென் மேற்கிலே சுமார் நான்கு மைல் தூரத்தில் சத்திமுத்தம் என்ற ஊர் ஒன்றுண்டு. ஆதியிலே அதனைச் சக்திமுற்றம் என்றே அழைத்து வந்தனர்.

முற்றம் என்ருல், திறந்த வெளி என்று அர்த்தம். பெரிய மைதானம், படுகளம் என்றும் பொருள் உண்டு. சங்க இலக்கியங்களிலே, குளமுற்றத்து வென்றவன், குளமுற்றத்துத் துஞ்சியவன், என்று அரசன் வென்ருே, பொன்றியோ போன இடத்தைக் குறிப்பிடுதல் வழக்கம், எனவே முற்றம் என்பது பிரசித்திபெற்ற இடமாம்.

ஈசுவரியை சக்தி, சக்திதேவி என்பர். சக்தியாய்ச் சிவமாகி என்ருர் பரஞ்சோதி முனிவர். சக்தி இன்றேல் சிவம் ஏது? சிவம் இன்றேல் சக்தி ஏது? சிவமும் சக்தியும் சேர்ந்தால்தான் அண்ட, பிண்ட சராசரங்களெல்லாம் நிலைக்கும், பரிமளிக்கும் என்பர் தத்துவம் வல்லார்.

முன் நாளிலே சக்திதேவியின் ஆராதனையும் பூஜையும் நம் நாட்டிலே மிகவும் பிரபலமா யிருந்தன. சாக்த மதம் என்பதும் பிரசித்தமாயிருந்தது. சாக்த மதக்காரரைச் சாக்தர் என்பர். சக்தி பூஜை பண்ணுவோரே சாக்தர். நெற்றியிலே குங்குமத் திலகம் இடுவது சாக்தரின் வழக்கம். சக்திபூஜையில் உயிர்களைப் பலியிடுதலும் உண்டு.

சக்திபூஜையில் சாத்விகம் கிடையாது, அனுசாரமே மிகுதி. ஆதலின் அப்பூஜை வேண்டாம், என்று புண்ணியசிலர் ஒதுக்கித் தள்ளினர். ஆயினும, பெருமபாலோர் அதனைக் கைவிடவில்லை. ஆங்காங்கே மாரியம்மன் கோவிலும், பத்திரகாளி கோவிலும பார்க்கலாம். இவை ஆதி சக்தி பூஜையின் சின்னங்களே.

அக்கோயிலிலே திருநாள் மிக ஆடம்பரமாக நடக்கும், பயபக்தி விசுவாசத்துடனும் கொண்டாடப்படும். உயிர்ப் பலியும் நடைபெறும். சமீபகாலமாக உயிர்ப்பலி நின்றிருக்கிறது என்னலாம். துர்க்கை, அம்மன், பிடாரி கோயில்கள் ஊர்தோறும் உண்டு. தேடியுனைச் சரணடைந்தேன், தேச முத்துமாரி, கேட்ட வரந்தருவாய் என்று பாரதியாரும் பாடியிருக்கிருர்.

மாரியம்மன் மிக்க வரப்பிரசாதி. இதுவே சாமானியர் என்போரின் கொள்கை. நம் பிளுர் கெடுவது ஏது? நன்மையே பெறுவர் என்பது திண்ணம். நானகு மறைகளும அவ்வாறே தீர்ப்புக் கூறும். ஆதிபராசக்தியின் ஆலயங்கள் ஆதிநாளிலே எங்கும் நிரம்பியிருந்தன.

அத்தகைய சக்தி கோயிலொன்று சிறந்து நின்ற இடமே சக்திமுற்றம் என்னும் ஊராம். ஆங்குள்ள ஆலயத்துக்கு முன்னே, பரந்த பெருவெளி யொன்றுண்டு. அதனையே முற்றம் என்றனர். சாக்தமதம் சாலச் சிறந்து நின்ற காலத்திலே, அச் சக்தி முற்றத்தில் ஆயிரக் கணக்கான சாக்தர் கூடுவர்; சக்தி தேவிக்கு மிக்க சிரத்தையுடன் பூஜை செய்வர். பலவிதமான படையலும் போடுவர்.

இனி, முன்னம் வாள் வீரர், வேல் வீரர், வில் வீரர் மிகுந்திருந்தனர். அஸ்திர சாஸ்திரப் பயிற்சியில் அன்னுர் தேர்ச்சி பெற்றதும், ஒத்த வீரரையும் அம்முற்றத்திலே கூட்டிவைத்து, அவர்களின் முன்னிலே

யில் தமது தேர்ச்சியைப் புலப்படுத்துவர். இதனை அரங்கேற்றுதல் என்பர். இப் போது பரதநாட்டிய அரங்கேற்றம் மலிந் திருக்கவில்லையா? அவ்வாறுதான் அந்த அரங்கேற்றமும்.

மேலும், விஜய தசமியன்று அத் தேவிக்கு மிக ஆடம்பரமான பூஜை நடக் கும். பிரமாதமான சிலம்ப விளையாடல் களும் நடைபெறும். அரசரும் பெருமக்க ளும் அப்போது பிரசன்னமாயிருந்து, பெருமை கொள்வர்.

அல்லாமலும், சண்டை தொடங்குமுன் னம், அரசரானோர் வெற்றியை நாடி, தே வியை வேண்டி, களப்பலி கொடுத்தலும் முந்தைய வழக்கமாம். பாரதத்தில் களப் பலி என்பது மிகவும் விசேஷமாம். அரா வான் களப்பலிக்கு இசைந்தான் என்பது பலரும் அறிந்ததே. அந்நாளிலே அரசர் களப்பலி கொடுக்கும் கண்ணிய தலமாக வும் விளங்கியது சக்தி முற்றம்.

எனவே, சக்தியின் ஆலயம் இருந்தது ஒன்று; வீரரின் அரங்கேற்ற ஸ்தலம் என்பது இரண்டு; அரசர் களப்பலி கொடுக்கும் இடம் என்பது மூன்று. இக் காரணங்களால் சக்தி முற்றம் என்ற பெயர் எழலாயிற்று. சோழநாட்டிலே அந்நாளில் சக்தி முற்றத்தைப்போல் மிக கவும் பிரபலமாயிருந்த கோயில் வேறெதுவுமில்லை.

யாருக்கும், எதற்கும், யோகம் என்பது ஒரு குறிப்பிட்ட காலம்வரையில்தான். அவ்வாறே சக்தி பூஜையும் சாக்தமத மும் சாக்தரும் குன்றுங்காலம் தொடங்கி யது. சைவம் ஓங்குங் காலம் உதித்தது. உதிக்கவே, பிரசித்தமான சக்திமுற்ற ஆலயத்தைச் சைவர் தங்களுக்கு அனு கூலமாக மாற்றிக்கொள்ள முற்பட்டனர்.

ஆனதுபற்றி, சக்திதேவி, ஜகதம்பிகை, உமாதேவி தவங்கிடந்தாள்; பரமசிவன் கருணைகூர்ந்து காட்சி கொடுத்தான்; கொடுக்கவே, சக்திதேவி அப்பரமனை முத்தமிட்டாள், அந்த ஸ்தலமே சக்தி முத்தம், என்று பிரசித்தஞ் செய்தனர். இதற்கு ஆதாரமான சிலா மூர்த்தத்தை யும் ஆங்கே அமைத்தனர். இன்றும் பார்க்கலாம் அம் மூர்த்தத்தை.

உடனே சைவசமய ஆசாரியர்களும் பா டல்பாடி அத்தலத்தைச் சிறப்பிக்கப் புகுந் தனர். அங்கே எழுந்தருளியுள்ள ஈசனது திருநாமம் சிவக்கொழுந்து. அம்மையின் பெயரோ பெரியநாயகி,

மட்டார் குழலி மலைமகள்
பூசை மகிழ்ந்தருளும்
சிட்டா! திருச்சத்தி முத்தத்து
உறையும் சிவக்கொழுந்தே!

என்பது தேவாரம். அப்பர் சுவாமிகள் அத்தலத்தைக் குறித்து அருளியுள்ள பாசுரம் ஈதாகும்:—

கோவாய் முடுகி அடுதிறல்
கூற்றம் குமைப்பதன்முன்
பூவார் அடிச்சுவடு என்மேல்
பொறித்துவை, போக விடின்
மூவா முழுப் பழி மூளும்
கண்டாய்; முழங்கும தழல் கை
தேவா! திருச்சத்தி முத்தத்து
உறையும் சிவக்கொழுந்தே!

தேவியைப் பெரியநாயகி என்றனர் அவ ளது பெரும் பெருமைகருதி. சிவக் கொழுந்து என்னும் பெயர் அப்பக்கத்தில் மிகவும் பிரபலம். பலரும் விருப்புடன் சூட்டிக்கொள்வர். வீரம் செறிந்த தேவியைச் சாந்தம் நிறைந்தவளாக ஆக்கி விட்டனர் பிற்காலத்தார். இது கிடக் கட்டும்.

இலக்கியத்திலே திருச்சத்திமுற்றம் அழியாப் புகழ்பெற்றுள்ளது. இலக்கியம் உள்ளவரையில் அப்பெயர் மறையாது. அந்த ஊரிலே வீரர் பரம்பரையில் வந்த ஒருவன், யானைக்குட்டிகளை ஆகாயத் திலே பந்துபோல் வீசியெறியக் கூடிய வன்; அத்துடன் தமிழ்ப் புலமையும் பிற வியிலேயே வாய்க்கப்பெற்றோன், இருந் தான். வீரம் குன்றி, சைவம் ஓங்கிவரும் சமயம்.

வீரத்தை மதிப்பார் இல்லாது போயி னர். வேறு தொழிலில் அவன் புத்தி போகவில்லை. இளமனையாள், அருமைக் குழந்தை, இவர்களைக் காப்பாற்ற வேண் டும். இருந்து தின்றால், குன்றும் கரையும் அல்லவா? ஏவல்வேலை புரியவும், இரந் துண்ணவும், அவன் விரும்பவில்லை. புலமைத் திறங்காட்டிப் பரிசு பெறலாம் என்று பாண்டி நாட்டுக்குப் போனான்.



தென்மதுரை சேர்ந்தான்; அரண்மனை வாயிலையும் அடைந்தான். காதில் கடுக்கனில்லை, கையிலே மோதிரம் இல்லை, இடுப்பிலே பட்டாடை இல்லை. இத்தகைய ஏழைக்கு ராஜ சபையில் இடமேது? என்று வாயில் காவலன் தடுத்து விட்டான். காசிக்குப் போயும் கர்மம் தொலையவில்லையே என்பதுபோலக் கருத்தழிந்தான் அவ் வீரமகன்.

இரவு புகுந்து விட்டது. படுக்க இடம் ஏது? ஒரு வீதியிலே தேர் முட்டியிலே தரையில் படுத்துக் கிடக்கிறான். வாடைக் காற்று வீசுகிறது. குளிர் தாங்கவில்லை.

போர்த்திக் கொள்ளவோ துணி கிடையாது. இரண்டு கையுங்கொண்டு மார்பை மூடிக் கொண்டான்; காலிரண்டையும் மடித்து உடம்பை மறைத்துக் கொண்டான்.

தூக்கமோ பிடிக்கவில்லை. மனைவியின் நினைவு வந்துவிட்டது. அவளது நிலையை நினைத்து வருந்தலானான். அப்பொழுது நள்ளிரவு. வான வீதியிலே நாரைகள் இரண்டு ஆணும் பெண்ணுமாய்ப் பறந்து போகின்றன. அது கண்டதும், மனைவியைப் பற்றிய துயரம் இன்னும் மேலிட்டது. அந் நாரைகளை நோக்கிப் பாடத் தொடங்கிவிட்டான். அப் பாடல் இது:-

> நாராய் ! நாராய் ! செங்கால் நாராய் !
> பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
> பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய் !
> நீயும் நின் மனைவியும் தென்திசைக் குமரி
> ஆடி, வடதிசைக்கு ஏகுவீராயின்
> எம் ஊர் சத்திமுற்ற வாவியுள் தங்கி
> நனைசுவர்க் கூரை, கனை குரல் பல்லி
> பாடு பார்த்திருக்கும் எம் மனைவியைக்
> கண்டே
>
> எங்கோன் மாறன் வழுதி கூடலில்
> ஆடையின்றி வாடையின் மெலிந்து
> கையது கொண்டு மெய்யது பொத்திக்
> காலது கொண்டு மேலது தழீஇப்
> பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
> ஏழையாளனைக் கண்டனம் எனுமே,

நகர் சோதனைக்கு வந்த வேந்தன் பாண்டியன் அப் பாடல் கேட்டான்; பூரிப்புக் கொண்டான்; தான் போர்த்தியிருந்த சால்வையை அவன்மீது போட்டான். பரமானந்தங்கொண்டான். நகர் சோதனை தீர்ந்தது. மாளிகை குறுகினான், உறக்கம் வரவில்லை. பாடலின் சுவையோ பரவசம் ஊட்டுகிறது.

"நாரையின் மூக்கினுக்கு உவமை கூறின், ஆயிரம் ஆயிரமாகப் பொன் தருவோம் என்றோம், புலவரெவரும் இன்றளவும் உவமை கூறவில்லை. விழிக்கின்றனர். இந்த ஏழையோ அற்புதமான உவமை கூறியுள்ளான். இவனே புலவன்! இவனே பரிசுக்கு உரியோன்!" என்ற மகிழ்ச்சி ஒரு புறம்.

மற்றொரு புறத்திலோ, "வாழ்க்கைத் துணைவியின் மீது என்ன பற்று! தன் வருத்தம் பார்க்கவில்லை. மனைவியின் பாட்டை நினைத்தே பரிதவிக்கிறான். தானும் வருந்துவதைப் பின்பே தெரிவிக்கிறான். உண்மைக் காதலரின் உள்ளம் ஏழ்மையிலும் தனிமையிலுமே தளிர்க்கும்!," என்று வியப்படைகிறான்.

இன்னொரு புறத்திலோ, "நானே தமிழ் வளர்ப்போன்? நானே பாண்டியன்? இப் பெரும் புலவன் நம் சபைக்கு ஏன் வாராது போனான்? இவனை முன்னமேயே நாம் ஏன் அறியாமல் போனோம்? தமிழுக்குப் பிழை செய்து விட்டோமே. அத் தமிழ்த் தாய் தயவு கூரவேண்டும். தண்ணளி காட்ட வேண்டும். இன்றேல் நாம் உய்யும் வகை எப்படி?," என்று தவிப்பும் துடிப்புங் கொண்டான்.

இதற்குள் பொழுதும் புலர்ந்தது. வாயில் காவலாளனைக் கூவி, அடையாளங் கூறித் தேர்முட்டி சென்று, அவனை அழைத்துவா என்று ஆணையிட்டான் அப் பாண்டியன். புலவனும் வந்து சேர்ந்தான். ஆடையும் அணியுங் கொடுத்து அவனை ஊருக்கு அனுப்பினான் அரசன்.

"காசொன்றும் கொடுக்கவில்லையே கொற்றவன். அணிகளை விற்றுக் காலந் தள்ளுவோம், அரிய மனைவிக்கு ஆறுதல் அளிப்போம்," என்று கருதிச் சென்றான் அப்புலவன். சத்திமுத்தம் சேர்ந்தான். அரண்மனையைக் கண்டான்; ஆடையாபரணம் மிகுந்த மனைவியைப் பார்த்தான், மனமகிழ்ந்தான். பாண்டியனது கொடை நேர்த்தியைப் புகழ்ந்தான்.

அப்புலவன் பாடியது ஒரே பாடல்தான் என்று புலனாகிறது. அவன் பெயர் இன்னதென்று தெரியவில்லை! ஒரு பாட்டுப்பாடி உயர்வுமிகுந்த அப்புலவனைச் சத்திமுற்றபுலவர் என்றே இலக்கியம் இசைக்கும். என்னே சத்திமுற்றம் எய்திய சிறப்பு!

ஒரு புலவரின் பெருமையை ஆயிரக் கணக்கான பாடல்களால் அறிந்து கொள்ளவேண்டும் என்பதில்லை. உண்மைக் கவித்துவம் என்பது ஒரு பாட்டிலும் பிரகாசிக்கும். ஓர் அடியிலும் புலப்படும். பதினாயிரக் கணக்கான பாடல் செய்து குவிப்பதைவிட, ஒரு சில பாடல் செய்தாலும் பிழையில்லாமல் சுவை நிரம்பியதாகச் செய்யவேண்டும்

என்பார் மகாமகோபாத்தியாய சாமிநாதையர். ஒரே பாட்ல் பாடி, பிறந்த ஊரை விளங்கச் செய்தான் அப்புலவன்.

பட்டீசுரத்துக்கும் சத்திமுத்தத்துக்கும் என்ன சம்பந்தம், என்று சிலர் யோசிக்கலாம். பட்டீசுரமும் சத்திமுத்தமும் நெருங்கியிருக்கின்றன. பட்டீசுரத்தின் வடக்குவீதியே சத்திமுத்தத்தின் தெற்கு வீதி.

பட்டீசுரத்துக்கும் சத்திமுத்தத்துக்கும் இடையே மிகவும் உயரமான இடிந்த கட்டிடம் ஒன்றுண்டு. இரண்டு சுவர் கூடும் மூலையாக அது தோன்றும். அதன் உயரம் ஒரு பனைமரத்துக்கு மேலிருக்கும். பல படைகளையுடைய மதிலின் சிறந்த பகுதியே அது.

அந்த இடத்திலே அவ்வளவு பெரிய கட்டிடம் இருக்கக் காரணம் என்ன? பட்டீசுரத்தைச் சுற்றியுள்ள ஊர்களில் ஒன்று சோழன் மாளிகை என்பது. அம் மாளிகையின் மதில் சுவரே அது. சோழ மன்னருக்கு அங்கே அரண்மனை இருந்தது. அந்தப்புரமும் இருந்தது.

பட்டீசுரத்தைச் சுற்றியுள்ள இடங்களிலெல்லாம் பழங்கால சரிதத்தை விளக்கும் சின்னங்கள் நிரம்பியிருக்கும். சோழவேந்தரின் ராஜதானியாகத் துலங்கும் இடத்தைப் பழையாறை என்பர். அப் பழையாறை நகரத்தின் பல பகுதிகளே இப்போது தனித்தனி ஊர்களாக உள்ளன.

"பாரில் நீடிய பெருமைசேர் பதி பழையாறை" என்று சேக்கிழார் தாம் பாடிய பெரிய புராணத்தில் கூறியுள்ளார். பட்டீசுரத்துக்கு அருகே கீழப் பழையாறை என்னும் ஊர்தான் அப் பழம்பெயரைக் காப்பாற்றி வருகிறது.

சரித்திர விசேஷங்களால் பெருமை பெற்ற அவ் விடங்களோ பின்னாளில் தல விசேஷங்களால் சிறப்புக் கொண்டன. ஜனங்களும் அவற்றின்மீது அன்பு வைத்தார்கள். இப்போதோ சரித்திர விசேஷம், தல விசேஷம் இரண்டும் குறைந்து வருகின்றன. மக்களின் போக்கே போக்கு!

பட்டீசுர ஆலயத்தில் ஒரு விசேஷம் உண்டு. அது யாதெனில், அந்த ஆலயத்திலே நந்திதேவர் சந்நிதியை விட்டு விலகியிருத்தலாம். திருப்புன்கூரிலே நந்தி விலகினார் நந்தனாருக்காக, என்று சொல்வர். பட்டீசுரத்திலே யாருக்காக நந்தி விலகினார்?

திருச் சத்திமுற்றத்திலிருந்து திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், சிவபெருமான் தந்த முத்துப்பந்தலின்கீழ் வரும் கோலத்தைக் காணவே அக்கோயிலில் எழுந்தருளியுள்ள தேனுபுரீசுவரர், அந் நந்தியை விலகும்படி கட்டளையிட்டார் என்று சைவ புராணங்கள் பேசும்.

தஞ்சையிலே மகாராஷ்டிரருக்கு முன்பு, நாயக்கர் என்போர் அரசு செலுத்தினர். அவர்களிடம் மந்திரியாக இருந்தார் கோவிந்த தீட்சிதர் என்பார். ஐயன்கடை, ஐயன்குளம், ஐயன்பேட்டை என்பன எல்லாம் அவர் பெயரை நிலைநாட்டவே எழுந்தவை. அத்தகைய கோவிந்தையனது உருவச்சிலையை அந்த ஆலயத்திலே அம்மன் சந்நிதியில் காணலாம், களிக்கலாம். அவரது மனைவியின் சிலையும் அங்கே இருக்கிறது.

தொட்ட தொட்ட இடந்தோறும் நான் தோன்றுவேன் என்றான் ஸ்ரீமந்நாராயணன் பிரகலாதனுக்கு! அவ்வாறே கும்பகோணத்தைச் சுற்றிய—ஏன்; தமிழ் நாட்டிலுள்ள—இடமெல்லாம் ஒரு சரித்திர சம்பவம், ஓர் இலக்கிய நிகழ்ச்சி, தல விசேஷமொன்று, இவற்றால் மிளிரும்.

இனி, திருக்குடந்தை நகருக்கு அருகே திருப்புறம்பியம் என்னும் இடமொன்று பார்க்கலாம். அது ஆதி சரிதத்திலே பானிபட் எனப்படும் பாணிபதம் நகரைப் போல், பெரிய யுத்தரங்கமாம். பானிபட் சண்டையில் நம் தேசத்தின் தலைவிதி நிர்ணயமாயிற்று.

திருப்புறம்பியத்திலோ தமிழ் மூவேந்தரின் தலைவிதி உருவாயிற்று என்னலாம். யுத்தகளத்திற்குக் காவல் தெய்வம் என ஒன்றுண்டு. திருப்புறம்பியப் படுகளத்திற்குச் சக்திமுற்றத்துத் தேவியே காவல் தெய்வமாக விளங்கி வந்தாள். சக்தி கோயில் சிவன்கோயிலானதை மேலே சொன்னோம்.

குடியரசு கொண்டுள்ள நாம் புராதன வரலாறுகளையும் விசேஷத்தையும் அறிந்துகொள்ளுதல் அவசியம். இப்போது மாணவர்களை ஊர்க்காட்சிக்காகப் பல இடங்களுக்கு அழைத்துச் செல்கின்றனரே, கும்புகோணத்தையடுத்த இடங்களைச் சுட்டிக் காட்டி, அவற்றின் வரலாறுகளை விளக்கியுரைத்தல் நலமல்லவா?




# 'ஜீவான்ஜன்'

**சரீரத்தின் மேல் தடவி**
**தேய்ப்பதற்கும் ஆவியாக**
**சுவாசிப்பதற்கும்**
**உபயோககரமானது**
**ரஸாயனக் களிம்பு, மிருக**
**கொழுப்பு சேராதது**

*தயாரிப்பவர்கள்*
ஜீவான்ஜன் லாபொரட்டரீஸ் லிட்
*மதராஸ்-14*




ஜீவான்ஜன்

*ஸோல் ஏஜன்டுகள்*
கே.கே.பிள்ளை & கோ
*ராயப்பேட்டை..மதராஸ்-14*

# ஜீவான்ஜன்



கடவுளின்
கோவிலுக்கான
பரிசுத்தம்



*தெய்வீகத்திற்குப் பரிசுத்தம் இன்றியமையாதது மிகவும் சுத்தமளிக்கும் சடங்காச்சார ஸநானங்களுக்கு, சுயமான சோப்பை மட்டுமே நாம் உபயோகிக்கவேண்டும். ஸோப்பில் ஏது கலப்புமிருக்கலாம்; ஆனால் கோத்ரெஜ் ஸாண்டலில் நன்மைதரும் கலப்பற்ற தாவர எண்ணெய்ச் சத்துக்களே. கோத்ரெஜ் சௌந்தரியப் பொருட்களிலெல்லாம் உள்ளன போன்று, தனிமைப்பட உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. வெறுக்கத்தக்க மிருகக்கொழுப்புகள் யாதும் அவைகளில் இல்லை. சுய மைசூர் சந்தனத்தைலம் ஏதேஷ்டமாய்ப் பொருந்தப்பெற்ற கோத்ரெஜ் சந்தண சோப்பானது இன்பமான குளிர்மை, இதம், மணம் இவைகளையுடைய நிலையை யளிக்கும்.*



*கோத்ரெஜ் விம்டா — இருமிகளைக் கொல்லவும் சொஸ்தமளிக்கவும் வல்ல வேம்பின் குணங்களையுடைய ஸோப்.*

Godrej Sandal

# கோத்ரெஜ் ஸாண்டல்
(மார்க்) (சந்தண)
# டாய்லெட் (ஸ்நான) ஸோப்

**குறைந்த விலையில் மற்றைய ஸோப்புகளைவிட மிகவும் உயர்தரமான ஸோப்பு.**

கோத்ரெஜ் சோப்ஸ் லிமிடெட்,
மதராஸ்: 164, பிராட்வே: கொச்சின்: 6/36, கல்வாதி.

# புற்று நோய்

ஸி. வி. ராமகிருஷ்ணன்

கதவை, 'படார்', 'படார்' என்று தட்டினேன். 'மணி எட்டுத்தான் ஆகிறது. அதற்குள் கடன்காரன் கதவைத் தாழ்ப்பாள் போட்டு விட்டான்' என்று வசை புராணம் பாடிக்கொண்டே என் ஆத்திரத்தை மறுபடியும் கதவின்மேல் காண்பிக்க ஆரம்பித்தேன்.

"எவண்டா அவன் கதவை உடைக்கிறது?" என்று கத்திக்கொண்டே வீட்டுக்காரன் மாடியினின்றும் கீழே இறங்கி வந்தான். கதவைத் திறந்துவிட்டு என்னை ஒருமுறை முறைத்தான். அவனுடைய கண்கள் கோவைப் பழம்போல் சிவந்திருந்தன. அவனுடைய முறுக்கிவிட்ட மீசையில் ஒரு துடிதுடிப்பு. "வாட்டசாட்டமான ஒரு காட்டுப்பயல் வந்தானுங்க" என்ற பாட்டை என் வாய் தானுக முணுமுணுக்க ஆரம்பித்தது.

"ஏய், எட்டு மணிக்குள் வீட்டிற்குள் வந்தால் வா, இல்லாவிட்டால் வராதே" என்று கத்திக்கொண்டே மாடியை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

நல்லவேளை, குடியன் நம்மை இத்துடன் விட்டானே என்று நினைத்துக்கொண்டே என் அறையை நோக்கி நடந்தேன். அறையைத் திறந்தவுடன் முருகன் படம் எதிரே தெரிந்தது. "ஆண்டவனே, வீட்டுச் சொந்தக்காரர்கள் காலகண்டனுக்கு அண்ணன்மார்களாக இருக்கின்றார்களே, இந்தக் குடிகாரக்கிழவன் சாகமாட்டானு. நாளுக்கு நாள் குண்டோதரனுகிக்கொண்டு வருகிறுனே ஒழிய, சுரம் என்றுகூடப் படுக்க மாட்டேன் என்கிறுனே. அவன் உயிர் போகாவிட்டால் போகிறது, என்னை அவனைப் போல ஒரு வீட்டுக்காரனுக வாவது மாற்றமாட்டாயா" என்று முருகனிடம் ஒரு குரல் அழுதுவிட்டுப் படுக்கச் சென்றேன்.

மறுநாள் காலை படுக்கையை விட்டு எழுந்தவுடன் வீட்டுக்காரக் கிழவன் கூப்பிடுவதாக ஒரு ஆள் வந்து சொன்னுன். குடிகாரன் 'வீட்டைவிட்டுப்போ' என்று சொல்லப்போகிறுனே என்று பயந்து கொண்டே மாடிக்குச் சென்றேன். அவனைப் பார்த்ததும் ஆச்சரியமும், பயமும் ஒன்றுசேர்ந்து என்னை உலுக்க ஆரம்பித்தன. இந்தக் கலிகாலத்திலும் கடவுள் நமக்கு அருள் புரிவார் போல இருக்கின்றது! இரவு கல்மாதிரி இருந்த கிழவன் படுக்கையில் கிடந்தான். வயிற்று வலி என்று துடித்துக்கொண்டிருந்தான். எவ்வளவுதான் வீட்டுக்காரனுடன் சண்டை போட்டுக்கொண்டிருந்தாலும், பதினைந்து வருஷங்களாகப் பழகின தோஷத்தினுல், அவன்மேல் இரக்கம் தோன்ற ஆரம்பித்தது. அவனுக்கு ஆறுதல் கூறிவிட்டு டாக்டரைக் கூப்பிட ஓடினேன். டாக்டர் வந்து பார்த்துவிட்டு அவனை ஆஸ்பத்திரியில் சேர்க்கும்படி சொல்லிப் போய்விட்டார். ஆஸ்பத்திரியில் சேர்த்து 10 நாளாகியும் குணம் தெரியவில்லை. டாக்டரைப் பார்த்து அவனுக்கு வந்திருக்கும் வியாதியின் பெயரென்ன என்று கேட்டேன்.

"அதுதான் ஐயா, புற்றுநோய் (cancer) எனப்படும். வைத்தியர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் புதிர் போடும் வியாதிதான் உன் வீட்டுக்காரனுக்கும் புதிர் போட வந்திருக்கிறது!" என்று கூறிக்கொண்டே அவனுடைய வார்டுக்கு அழைத்துச் சென்றுர். "டாக்டர்" என்று ஆஸ்பத்திரி அதிரும்படி கத்திவிட்டுக் கடைசியாத்திரையைத் துவக்கிவிட்டான். "ஓ"வென்று அவனைக் கட்டிக் கொண்டு அழ ஆரம்பித்தேன். டாக்டர் என்னைச் சமாதானம் செய்து தம் அறைக்கு அழைத்துச் சென்றுர்.

"டாக்டர், அவனுக்கு இதுவரை ஒரு வியாதியும் வந்ததில்லை. அவனுடைய குடும்பத்திலும் இது இருந்ததாகத் தெரியவில்லை. ஆளோ, பீமன் போல இருந்

தான். குடி தவிர வேறு கெட்ட பழக்கமும் கிடையாது. அவனுக்கு எப்படி டாக்டர் இந்தப் புற்றுநோய் வந்தது" என்று கேட்டேன்.

"அப்பா, இந்தப் புற்றுநோய் வருவதற்குச் சரியான காரணம் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. சிலருக்குப் பரம்பரை காரணமாகவும், புண் ஆறுமல் புரை போய் அதே இடத்தில் அடிக்கடி அடிபட்டுக் கொண்டிருப்பதின் காரணமாகவும் சில கிருமிகள் (Venis) காரணமாகவும் இந்தப் புற்றுநோய் வருகின்றது."

"டாக்டர், இந்த வியாதி மிகவும் விசித்திரமாக இருக்கின்றதே. இதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள் கேட்கலாம்."

"இந்த வியாதி உலகெங்கும் பரவியிருக்கின்றது. இதைப்பற்றிச் சரியாக யாருக்கும் எதுவும் தெரியாது. இது தோலின் மேல் மச்சம் போலவோ, புண்ணுகவோ, கட்டிபோலவோ தோன்றலாம். அல்லது உடலுக்குள் ஈரல், இரைப்பை, சிறுகுடல் சுவர்களில் புண்ணுகத் தோன்றலாம். உடலிலுள்ள சாதாரண உயிர் அணுக்களைப்போல் (cells), இவைகளும் உயிர் அணுக்களாகும் (cancer cells). இவைகள் கொஞ்சம் கொஞ்சமாக உடலெங்கும் பரவி, இருதயம், மூளை முதலியவைகளைத் தாக்கி, சாதாரண உயிர் அணுக்களைக் கொன்று, தங்கள் ஆதிக்கத்தைத் ஸ்தாபிக்கும் பொழுது, மனிதன் இறந்தொழிகின்ருன். எப்படி புற்று வெகு ஆழமாகப் பரவி நீண்டுகொண்டு போகிறதோ அதே மாதிரி இந்த வியாதியும் பரவுவதால் இதற்குப் புற்று நோய் (cancer) என்று பெயர் கொடுத்தனர்.

"இந்த வியாதியினுல் பெண்கள்தான் ஆண்களைவிட அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர். இக்காரணத்தினுல் சிலர் இதை, "பெண்கள் வியாதி" என்றுகூட நினைக்கின்றனர். தவிர வயதானவர்களைத்தான் இது பெரும்பாலும் பீடிக்கின்றது. வயதானவர்களில் எட்டுப் பேர்களில் ஒருவருக்குப் புற்று நோய் வருவதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. புற்று நோயினுல் கஷ்டப்படும் பெண்களில் 100க்கு 50 பேர்களுக்கு ஸ்தன பாரத்திலும் (breast) போகம் அனுபவிக்கும் அவயங்களிலும் (Reproductive organs, e. g. uterus) புற்று நோய் வருகின்றது. ஆண் மக்களில் 100க்கு 60 பேர்களுக்கு இரைப்பையில் புற்று நோய் வருகின்றது. இந்த வித்தியாசங்களுக்கு இது வரை காரணம் கண்டு பிடிக்கப்படவில்லை.



"இந்த வியாதியை அகற்றவழியில்லையா என்று கேட்கலாம். வியாதி ஆரம்பதிசையில் இருந்தால் முயற்சி செய்யலாம். ஆனுல் அது புற்று நோய் என்று கண்டு பிடிக்கப் படுவதே அது முற்றும் திசையில்தான். தோலின் மேல் புற்று நோய் வந்தால் ஆரம்ப திசையில் பார்த்து ரேடியம் சிகிச்சை செய்து குணப்படுத்தலாம். ரேடியம் என்ற தாதுப்




பொருளினின்றும் வெளிவரும் கிரணங்களுக்குப் புற்றுநோய் அணுக்களைக் கொல்லும் சக்தியிருக்கின்றது. தோலின் மேல் வரும் புற்று நோயில் 100க்கு 90 குணமாகிவிடுகின்றது. அதே மாதிரி ஸ்தன பாரத்தில் வரும் புற்று நோயில் 100க்கு 50 குணமாகிவிடுகின்றது. ஆனால் உடலுக்குள்ளே இரைப்பை முதலியவைகளில் வருவன 100க்கு 2 கூடக் குணமாவதில்லை. காரணம் ஆரம்ப திசையில் அதைக் கண்டுபிடிக்க முடிவதில்லை. வயிற்றைக் கிறி, சதையின் ஒரு துண்டை

ஜாக்கிரதையாக எடுத்து, அணுதிருஷ்டினி (Microscope)யில் வைத்துக் கைதேர்ந்த வைத்தியர்கள் பார்த்தால் புற்றுநோய் அணுக்கள் (Cancer tissue) காணப்படும். அவைகளைக் கண்டு பிடித்து விட்டால் ஆபரேஷன் மூலம் புற்றுநோயால் பீடிக்கப்பட்ட அந்தச் சதையை அறுத்து எடுத்து விடுவதின் மூலமும், ரேடியம் சிகிச்சை மூலமும் குணம் செய்து விடலாம். ஆனல் வியாதி யிருப்பதை அது மற்ற இடங்களுக்குப் பரவுதற்கு முன்பு கண்டு பிடிப்பதுதான் கஷ்டமான காரியமாகும். இதினின்றும் புற்றுநோயைக் கண்டு பிடிப்பதற்குச் சரியான வழி இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை என்று தெரிகிறது. அமெரிக்கா முதலிய இடங்களில் நோயின் காரணங்களைக் கண்டுபிடிக்கவும், அந்த நோயைப் போக்க வழிகளைத் தேடவும் ஆயிரக்கணக்கில் பணம் செலவழித்து ஆராய்ச்சியாளர்களைத் தீவிர ஆராய்ச்சியில் ஈடுபடச் செய்திருக்கின்றனர். நம் நாட்டிலோ புற்றுநோய்க்காகப் பம்பாயில் ஒரே ஒரு ஆஸ்பத்திரியிருக்கிறது. அங்கும் காத்துக்கிடக்க வேண்டியிருப்பதால், வியாதியஸ்தன் இறந்த பிறகுதான் அவனுக்கு ஆஸ்பத்திரியில் இடம் கிடைக்கும்."

"ஏன் டாக்டர், பட்டணத்திலே அது மாதிரி ஆஸ்பத்திரிஒன்றும் கிடையாதா?"

"நம்முடைய துரதிர்ஷ்டம் இதுவரை அதுமாதிரி ஒரு ஆஸ்பத்திரியும் இல்லை. அமெரிக்கா சென்று புற்றுநோய் ஆராய்ச்சியில் பழக்கமடைந்து திரும்பிவந்த டாக்டர் நம் மாகாணத்தில் அந்த ஆராய்ச்சியில் இறங்க வசதியில்லாது சும்மாவிருக்கின்றனர். டாக்டர் முத்துலெக்ஷ்மி ரெட்டி அவர்களும் அவரைச் சேர்ந்த மாதர் சங்கமும் முன் வந்து புற்றுநோய் நிவாரணத்திற்காக ஒரு நிதி திரட்டி வருகின்றார்கள். நம் மாகாணத்திலுள்ள எல்லா மக்களும் தங்களால் இயன்றதை மனமுவந்து கொடுக்க முன்வருவார்களாயின் நம் மாகாணத்தில் ஒரு ஆஸ்பத்திரியும் அதையொட்டி ஒரு ஆராய்ச்சிச் சாலையும் நிறுவ முடியும். பின்னர் அதில் பல டாக்டர்களுக்குப் பயிற்சியளித்து, கூடுமானவரையில் புற்றுநோயை வெகு விரைவில் கண்டு பிடிக்கச்செய்து ஆபரேஷன் மூலமோ, அல்லது ரேடியம் சிகிச்சை மூலமோ குணமாக்கச் செய்யலாம். அதே சமயத்தில் ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு வியாதி வருவதற்கு உள்ள காரணங்கள், வியாதியின் பொழுது உடலில் ஏற்படும் மாறுதல்கள் முதலியவைகளை ஆராய்ச்சி செய்விக்கலாம். ரசாயனிகளைக் கொண்டு பூஞ்சான்களை ஆராய்ச்சி செய்து அவைகளினின்று சுரக்கும் திரவத்திற்குப் புற்றுநோய் அணுக்களை மட்டும் கொன்று நல்ல அணுக்களை விட்டுவைக்கும் சக்தியிருக்கின்றதா என்று கண்டுபிடிக்கச் செய்யலாம். அமெரிக்காவில் நைட்ரஜன் மஸ்டர்ட் (Nitrogen mustard) என்ற பொருளைக் கண்டு பிடித்து, அதற்குச் சில



புற்று நோய்களைக் குணம் செய்யும் சக்தி இருக்கின்றது என்று கண்டுபிடித்திருக்கின்றனர். அதே மாதிரி நம் நாட்டிலுள்ள மூலிகைகளை ஆராய்ந்து, இந்த நோயைத் தீர்க்கும் சக்தியுள்ள மூலிகையைக் கண்டுபிடிக்கப் பாடு படலாம். வைத்தியர்கள் ரசாயனிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து, மக்களின் ஆதரவும் (பொருளினலும், மனதினலும்) இருந்து உழைப்பார்களாயின் புற்று நோயைக் கண்டுபிடிக்கும் வழியையும், புற்று நோய் அணுக்களை மட்டும் கொல்லும் மருந்தையும் கண்டுபிடிக்க வழியுண்டு. வியாதியும் தெரிந்து, மருந்தும் இருந்தால் வியாதி குணமாவதற்குக் கேட்கவா வேண்டும்?"

"டாக்டர், நீங்கள் சொல்லுவது ரொம்பவும் உண்மை. இன்றே டாக்டர் முத்துலெக்ஷ்மி ரெட்டிக்கு என் காணிக்கையை அனுப்பிவைக்கிறேன். இது மாதிரி ஒவ்வொருவரும் உதவி செய்தால் புற்று நோய் ஆராய்ச்சி ஆரம்பித்து அதை ஒழிக்க வழிபிறக்கும்" என்று கூறிவிட்டு வீட்டை நோக்கி நடந்தேன்.

வீட்டு வாசற்கதவு திறந்திருந்தது. மறுபடியும் வீட்டுக்காரன் ஞாபகம். நேராக என் அறைக்குச் சென்றேன். அறையைத் திறந்ததும் முருகன் படத்தைப் பார்த்தேன்.

"ஸ்வாமி, அடியேன் அறியாமையால் முன்னொரு நாள் கேட்ட வரத்திற்கு மன்னிப்பாயாக. நான் குடிகாரக் கிழவன் போல் வீட்டுக்காரனுகவும் ஆக வேண்டாம். அவனைப்போல் புற்று நோயால் துடித்து, புழுத்துச் சாகவும் வேண்டாம். எங்கள் நாட்டில் புற்று நோயால் வருந்துவோருக்குக் குணமளிக்க நல்ல மருந்தைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சியாளருக்கு அருள் புரிவாயாக" என்று வேண்டிக்கொண்டு நிம்மதியாக உறங்க ஆரம்பித்தேன்.


பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனல் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறுதீர்கள்

## டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளைதெரு, தெப்பக்குளம் போஸ்ட்.




**மாரார்**

**சுதரிசனம் ஐயங்கார்:** குருக்ஷேத்திர யுத்தம் போல் கொரியாவில் யுத்தம் ஆரம்பித்து விட்டதே. உலகத்திற்குப் பெரிய ஆபத்து வந்திருக்கிறது. நம் காலத்தில் இரண்டு யுத்தங்களால் வந்த கஷ்டங்கள் போதாவென்று இன்னொன்று கிளம்பியிருக்கிறது.

**ஜாபாலி ரத்னமய்யர்:** வந்தால் வரட்டுமே. ஆபத்துகள் வந்தால்தான் பிறகு ஏதேனும் நன்மை உண்டாகும். ஆபத்து என்று பயப்படுகிறோம். கொஞ்ச காலம் ஆனதும் அதிலிருந்து சில ஸௌகரியங்கள் உண்டாகின்றன. நாம் இவ்வளவு ஆனந்தமாக இந்த மணல் மேட்டில் சாயங்கால வேளைகளில் காற்று வாங்கிக் கொண்டு வம்பளக்கிறோமே, இந்த மணல் மேடு எப்படி ஏற்பட்டது? காவிரியாறு எழுபது எண்பது வருஷத்துக்கு முன்பு இவ்விடத்தில் உடைப்பு எடுத்து வீடு வயல்கள் எல்லாவற்றையும் அடித்துக் கொண்டுபோய் மணலைக் கொண்டுவந்து தள்ளி மேடாக்கிற்று. அந்தக் காலத்தில் இருந்தவர்கள் "ஐயோ, என் வீடு நாசமாயிற்றே—என் வயல் எல்லாம் திடலாகி விட்டதே--பிழைப்புக்கு நான் என்ன செய்வேன்" என்றெல்லாம் அலறியிருப்பார்கள்.

**வியாஸாசார்:** நன்றாயிருக்கிறது நீங்கள் சொல்வது. நம்மைப்போல் சுட்ட குழாய்களும்—சீட்டுக்கச்சேரியில் பொழுதுபோக்கும் ஆஸாமிகளும் சாயங்காலத்தில் கூடுவதற்காகக் காவிரியாறு கரை புரண்டு ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு மகத்தான நஷ்டத்தைச் செய்ததோ? நஷ்டமும் நாசமும் அளவற்றவை. அதனால் பிறகு கிடைத்த நலன் மிகச் சொற்பம் தானே! அதுபோலத்தான் இந்த யுத்தத்திற்குப் பின் வரக்கூடிய லாபமும். ரண சிகித்ஸை விருத்தியாகலாம்—பெனிஸிலின் மாதிரியான மருந்துகள் புதிதாக ஏதாகிலும் கண்டு பிடிக்கலாம் — வேறென்ன? அதோ குருதாஸ நாயுடு வராப்போலிருக்கே; ஏன் இன்று நேரமாயிற்று அவர் வருவதற்கு?

**ஜாபாலி ரத்னமய்யர்:** வாருமையா நாயுடு நீர்லேட் என்று உம்பேரில் குற்றப் பத்திரிகை படிக்கப் பட்டிருக்கிறது.

**குருதாஸ் நாயுடு:** ஒன்றுமில்லை. வியாழக்கிழமை ஸாயங்காலம் அல்லவா? இங்கேதான் வந்துகொண்டிருந்தேன். வழியில் கூட்டமாக முப்பது நாற்பது பேர் ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தென்னை மரத்தில் கருடன் ஒன்று உட்கார்ந்திருந்தது. அது எப்போ பறக்கும். 'பறக்கிற கருடனை வியாழக்கிழமை சாயங்காலம் தரிசனம் பண்ணினால் புண்ணியம் என்கிறார்கள்.' நாமும் பார்த்துப் போகலாம் என்று காத்துக் கொண்டிருந்தேன்.

**ஜாபாலி ரத்னம் ஐயர்:** தரிசனம் ஆச்சோல்யோ? இலவசமாகப் புண்ணியம் சம்பாதித்துவிட்டீர். ஒரு தம்பிடி செல

வில்லை. உபவாசம் மாதிரி கஷ்டமும் இல்லை. சுலபமாகத் தட்டிவிட்டீர்.

**குருதாஸ் நாயுடு:** உங்களுக்குப் பரிகாசமாயிருக்குது. என்னமோ பெரியவர்கள் சொல்வதை உண்மை என்று நம்புகிறதில் என்ன தவறு? நான் அங்கே நின்று கருடதரிசனம் செய்யும்போது காலேஜில் வாசிக்கிற பையன்கள் இரண்டுபேர் என் காது கேட்கும்படியாக, "டேய், கெண்டைக் குஞ்சு தின்கிற பட்சியைச் சாமி என்று கும்பிடுகிறார்கள் இத்தனை பேர்." என்று ஏளனம் பண்ணினார்கள். நீங்களும் அவர்களைப்போல் ஏளனமாய்ப் பேசுகிறீர்கள்.

**ஜாபாலி ரத்னம் ஐயர்:** ஆமாம்ஐயா, கடவுளுக்குக் கருடன் வாகனமாம். அதன்மேல் ஏறிக்கொண்டுதான் பக்தர்களைக் காப்பாற்றுவதற்கு வருகிறாராம். கடவுள் எங்குமிருக்கிறார். எல்லாம் வல்லவர் என்றால் அவர் வரவேண்டிய அவசியம் என்ன? வாகனம் இல்லாமல் அவருக்குப் போக்கு வரத்து முடியாதா? அவருக்கும் நமக்கு நோவது போல் கால் நோகுமா. இதெல்லாம் நம்பக்கூடிய விஷயமா? அத்தைப்பாட்டி கதைபோல் இல்லையா? புராணங்களில் என்னென்னவோ கதைகளையெல்லாம் எழுதியிருக்கிறார்கள். அதையெல்லாம் நிஜம் என்று நம்பலாமா?

**வியாஸாசார்:** "புராணம் ஒழிக;" என்று ஒவ்வொரு வீதியிலும் வீட்டுச் சுவர்களில் யாரோ ஒருவன் பெரிய கொட்டை எழுத்தில் எழுதியிருக்கிறான். அவன் பரம உபகாரி என்று நீங்கள் நினைக்கிறாப்போலிருக்கு. புராணங்களை எழுதிய நம் பெரியோர்கள் மூடர்களா என்ன? அவர்கள் அபிப்பிராயத்தையும் அவர்கள் கற்பிக்கும் தத்துவத்தையும் நமக்கு அறிய முடியவில்லை. அவர்களைத் தூஷிக்க மாத்திரம் தயாராயிருக்கிறோம்.

**ஜாபாலி ரத்னம் ஐயர்:** கருட தத்துவத்தை நீர்தான் சொல்லுமேன் கேட்போம்.

**வியாஸாசார்:** என்னமோ எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன். ஆகாயத்தில் பறவைகளுக்குள் கருடனே கண்ணுக்கு எட்டாத தூரம் பறக்கும் சக்தி வாய்ந்தது. மற்றவைகளால் எட்டமுடியாத தூரம் சென்று பிறர் அறியமுடியாத தத்துவங்களை நமக்குக் காண்பித்துக் கொடுப்பது வேதங்கள் என்று நம் ரிஷிகள் நம்பினார்கள். கடவுள் ஒருவர் உளர். அவரைப் பக்தியுடன் தியானித்தால் பிறப்பு இறப்பு என்ற துக்கங்களிலிருந்து' விடுதலையடைந்து ஆனந்தம் பெறலாம். இந்த விஷயம் நம் யுக்திகளினாலோ, பிரத்தியட்சத்தினாலோ அறிய முடியாது. அதை நமக்கு அறிவித்துக் கடவுளை நம் மனத்துக்கு முன்காட்டுபவை வேதங்களே. அதனால் வேதத்தைக் கருடன் என்று நம் ரிஷிகள் புராணங்களில் வருணித்தார்கள். கஜேந்திர மோட்சம் என்னும் புராண கதையின் தாத்பரியம் இதுவே. யானைக்கு ஆதிமூலம் என்று கதறமுடியாது என்பது புராணம் எழுதியவருக்குத் தெரியாமல் இல்லை. கஜேந்திரன் என்பது ஜீவன். அது ஸம்ஸாரம் என்ற பொய்கையில் இறங்கி, சுகம், துக்கம், இன்னல் என்ற முதலையின் வாயில் அகபட்டுத் தவிக்கிறது. விடுதலை பெறவேண்டுமானால் வேதங்கள் கொண்டுவந்து அறிவிக்கும் கடவுளைத் தியானம் செய்யவேண்டும், இதுவே அக் கதையின் தொனிப் பொருள்.

**ஜாபாலி ரத்னம் ஐயர்:** கருடன் என்றால் வேதம் என்கிறீர். நீர் சொன்னால் மாத்திரம் போதுமா? வேறு பிரமாணம் வேண்டாமா?

**வியாஸாசார்:** வைஷ்ணவர்களின் ஆசாரிய பரம்பரையில் பிரசித்தி பெற்றவரும், ராமானுஜாசாரியரால் போற்றப்பட்டவருமான ஆளவந்தார் என்ற யாமுனாசார்யர் "வேதாத்மா விஹகேசுவரஹ" என்று ஒரு அழகிய சுலோகத்தில் சொல்லியிருக்கிறார்-பட்சி ராஜனை கருடன் வேத ஸ்வரூபீ என்கிறார். இவர் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்தவர்.

**சுதரிசனம் ஐயங்கார்:** அப்படியானால் கருடனின் இரண்டு சிறகுகளும் வேதத்தின் இரு பாகங்களான கருமகாண்டம், ஞான காண்டம் என்று சொல்லலாம் போலிருக்கே.

**வியாஸாசார்:** பொருத்தமாயிருந்தால் சொல்வதற்கு ஆட்சேபணையில்லை.

**ஜாபாலி ரத்னமய்யர்:** கருடனை வேதமாக்கிவிட்டீர்—விஷ்ணுவின் படுக்கையாகிய ஆயிரந்தலை கொண்ட ஆதிசேஷனை என்னவென்று சொல்லுகிறீர்? ஒரு புரம்

புக்கு ஆயிரந்தலை எங்கேயாவது உண்டா? புளுகினாலும் பொருந்தப் புளுக வேண்டாமா?

**வியாஸாசார்:** ஆதிசேஷன் என்பது ஜீவன்தான். ஜீவாத்மாவின் உள்ளே அவனுக்கும் ஆத்மாவாகக் கடவுள் சயனித்திருக்கிறான் என்று உபநிஷத்துக் கூறுகிறது. அதுதான் விஷ்ணு சேஷசாயி என்ற நம்பிக்கைக்குக் காரணம். ஆதிசேஷனுடைய ஆயிரந்தலைகளும் நம் போன்ற ஜீவன்களின் மனத்தில் தோன்றும் ஆயிரக்கணக்கான எண்ணங்களும் மனோபாவங்களுந்தான். இவைகளில் பல கெட்டவைகள் விஷம் போன்றவை. ஆனால் நல்ல எண்ணங்களும் பாம்பின் சிரஸிலுள்ள ரத்னங்கள்போல் ஜ்வலிக்கின்றன. இதுதான் உட்பொருள் என்று தோன்றுகிறது.

**சுதர்சனம்:** அப்படியானால் பரமசிவன் பாம்பை அணியாகக் கொள்வதின் தாத்பரியம் என்ன?

**வியாஸாசார்:** ஜீவனை அன்புடன் தன் மார்போடு அணைத்து அவன் இருதயத்திலுள்ள விஷத்தை யகற்றி அவனைத் தன் போல் பரிசுத்தமாக்க வேண்டும் என்றே பரமசிவன் திருவுள்ளம். அன்பே சிவம் என்று கேட்டதில்லையா?

**ஜாபாலி:** நீர் புது அர்த்தம் கற்பிக்கிறீர். அது சரி என்று எப்படி எண்ணுவது?

**வியாஸாசார்:** நான் புதிதாய் ஒன்றும் சொல்லிவிடவில்லை. அப்பர் முதலிய நாயன்மார்கள் இந்த உட்பொருளைத் தங்கள் பாடல்களால் விளக்கியிருக்கிறார்கள்.

**சுதர்சனம்:** அப்படியானால் காலிய மர்த்தனக் கதையின் பொருள் என்ன? சொல்லும் பார்ப்போம்.

**வியாஸாசார்:** காலியன் ஆயிரம் தலை கொண்டவன். ஒவ்வொரு வாயிலிருந்தும் விஷத்தைக் கக்கித் தான் வசித்து வந்த மடுவின் நீரையும் பக்கத்திலிருந்த பிரதேசங்களையும் நாசமாக்கி வந்தான். அவனை யடக்கி மடுவின் நீரைச் சுத்தம் செய்து எல்லா ஜீவராசிகளும் மகிழ்ச்சியடையும்படி கிருஷ்ணபகவான் காலியன் படங்களின் மேல் குதித்துத் தாண்டவம் ஆடினார். காலியன் அடங்கி அடிமையானான் என்றல்லவா கதை. மடு வென்பது பாற்கடல். என்பது மனுஷ்யனின் மனத்தையென்றே கொள்ள வேணும். காலியனின் விஷத்தைக் கக்கும் ஆயிரம் வாய்களும் மனிதனின் ஆயிரக்கணக்கான கெட்ட எண்ணங்கள். கோபம்—லோபம்—அசூயை—பொறாமை கொடுமை—பிறர் கஷ்டத்தில் மகிழ்ச்சி இப்படிப் பல. இவற்றால் அவன் மனம் கெட்டுப்போய்ப் பக்கத்திலுள்ள ஜீவராசிகளுக்குத் துன்பம் இழைக்கிறான். பகவான் மனிதனின் இருதயத்தில் தாண்டவம் ஆடினால், அதாவது பக்தியுடன் பகவானைத் தியானம் செய்வானானால் விஷத்தைக் கக்கமாட்டான். எல்லோருக்கும் உதவி புரிந்து உலகை ஒரு பூங்காவாகச் செய்வான். இதுதான் தொனிக்கிற பொருள் என்று எனக்குத் தோன்றுகிறது.

**ஜாபாலி:** இருக்கட்டும். புராணங்களில் ஏன் சில அசந்தர்ப்பமான கதைகள் சொல்லப்படுகின்றன. சந்திரன் தன் குருவாகிய பிருஹஸ்பதியின் மனைவி தாரையைக் கெடுத்து, குரு சாபத்தை யடைந்தான் என்று சொல்லியிருக்கிறதே; அதற்கு என்ன அர்த்தம்?

**வியாஸாசார்:** இதன் பொருள் சுலபமாக அறியலாம். **குரு** என்ற ஸம்ஸ்கிருத வார்த்தைக்குப் **பெரிது** என்றும் ஆசாரியன் என்றும் பொருள். கிரகங்களுக்குள் பெரிது ஜூபிடர் அல்லது வியாழன் என்பது. அதை ஸம்ஸ்கிருதத்தில் **குரு** என்று சொல்வது வழக்கம் அல்லவா? **தாரா** என்ற வடமொழிச் சொல் அந்தப் பாஷையில் பெண்பாலாக வழங்கப்படுகிறது. அதற்கு அர்த்தம் நட்சத்திரம் என்பது தான். சந்திரனின் பிம்பம் சில காலங்களில் குருவின் சமீபத்தில் காணப்படுகிறது. குருவின் அருகே ஒரு சிறு நட்சத்திரம் காணும். அதைக் கவிகள் குருவின் மனைவி தாரை என்று வருணித்தார்கள். சந்திரன் குருவண்டை காணுவதைச் சந்திரன் பிருகஸ்பதியினிடம் வித்தை கற்க வருவதாக வருணித்தார்கள். சில காலங்களில் அந்தச் சிறு நட்சத்திரம், தாரை குருவைவிட்டு விலகித் தோன்றுகிறது. மேலும் அது அப்போது சந்திரனுக்கு அண்மையில் காண்கிறது. இதன்மூலம் கதை பிறந்தது. ஜ்யோதிஷ சாஸ்திரம் **அஸ்டிரானமி** படித்தவர் நான்

சொன்னதைவிட ஸ்பஷ்டமாகச் சொல்ல முடியும். அந்த நட்சத்திரத்தின் பெயர் என்ன, அது எந்த மாதங்களில் குருவின் அண்டைகாணும், எந்தெந்த மாதங்களில் சந்திரனின் அருகில் தோன்றும் என்று அவர்கள் விசதமாகச் சொல்லக்கூடும். சந்திரனுக்கு க்ஷயரோகம் என்பது தேய் பிறையில் குறைவதைக் குறிக்கிறது.

**ஜாபாலி:** சரி ராமாயணகதைக்கு என்ன சொல்லுவீர். பத்துத்தலை ராவணன். மாரீசன் என்கிற பொன்மான், குரங்கு சைனியம் ராமனுக்கு ஒத்தாசை செய்தது இதையெல்லாம் எப்படி நம்புகிறது? இதற்கும் ஏதாவது அந்தரங்கமான கருத்து இருக்கிறதா சொல்லும்.

**வியாஸாசார்:** ஸீதை அயோனிஜை. பூமியில் கலப்பைக் கொழுவிலிருந்து வெளிப்பட்டவள் என்று ராமாயணத்தில் சொல்லியிருக்கிறது. அதிலிருந்து தொனிக்கும் தத்துவம் ஸீதை ஜீவாத்மா என்பதுதான். ஜீவாத்மாவுக்கு ஆதியும் இல்லை அந்தமும் இல்லை. ஆனால் பிரகிருதி என்ற ஜடவஸ்துவின் ஸம்பந்தமடைந்து மெய்மறந்து தன் ஸ்வரூபம் எப்படிப்பட்டது என்றறியாமல் ஜடவஸ்து போல் கிடக்கிறது. பிறகு ஆத்மஞானம் சிறிது சிறிதாக உதித்தவுடன் தனக்கும் கடவுளுக்கும் உள்ள நித்தியமான ஸம்பந்தத்தை அறிகிறது. அதுதான் வேதாந்தியான ஜனகனால் பெண்ணென வளர்க்கப்படுவது. பிறகு ஸீதை பரமாத்மாவான ஸ்ரீராமனுக்குப் பத்தினியாகிறாள். ஈசுவரனுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள ஸம்பந்தத்தை நம் கவிஞர் நாயகனுக்கும் நாயகிக்குமுள்ள தொடர்பாக வருணிப்பது ஸம்பிரதாயம். ஜீவன் இந்தச் சம்பந்தத்தையறிந்த பிறகும், உலகத்திலுள்ள புஷ்பம், சந்தனம், அன்னம், பானம், உடை, தனம், வாகனம், கிருகம் என்றெல்லாம் உள்ள அனுபவப் பொருள்களால் மயங்கி அவைகளை வேண்டி ஆசைப்படுகிறான். அவைதான் விசித்திரமான அழகுவாய்ந்த மாயமானாகிய மாரீசன். இந்த ஆசையினால் பகவானிடமிருந்து ஜீவனுக்குப் பிரிவும் துன்பமும் விளைகின்றன. இந்த ஆசைக்குக் காரணம் பிரகிருதியின் மூன்று குணங்களுள் ஒன்றாகிய ரஜோகுணம். இந்த ரஜோகுணம் தான் ராவணேசுவரன். அவனுக்குப் பத்துத்தலைகள். நம் புராணகதைகளில் ஐந்து தலைகள் உள்ள ஐந்துவெல்லாம் பஞ்சேந்திரியங்கள் கூடிய ஜீவனைச் சொல்லும். பத்துத்தலைகள் உள்ளது ஞானேந்திரியம் ஐந்து, கருமேந்திரம் ஐந்து, ஆக பத்து இந்திரியங்களைக் குறிக்கும். ரஜோ குணத்தின் வசமானால் இந்தப் பத்து இந்திரியங்களும் மனிதனைக் கெட்ட வழிகளில் போகும்படி தூண்டும். ஜீவனாகிய ஸீதை ரஜோகுணமாகிய ராவணன் வசமாகி ஸம்ஸாரம் என்ற ஸமுத்திரத்தின் நடுவேயுள்ள லங்கையில் சிறையிருக்கிறாள். பிரகிருதிக்கு ரஜோகுணந்தவிர மற்றும் இரண்டு குணங்களுண்டு. ஒன்று ஸத்துவம். இது நற்புத்தி, நற்செய்கை, தெய்வபக்தி முதலியவைகளை விரும்பச் செய்யும். மற்றொன்று தமோகுணம். தமோ குணம்—சோம்பல், அஞ்ஞானம். உறக்கம் முதலியன தருகிறது. ஸத்துவ குணம் பரமாத்மாவினிடம் ஜீவனுக்குப் பக்தியை விருத்திசெய்கிறது. பரமாத்மாவும் ஜீவனிடம் கருணை நிறைந்தவனாகையால், எப்படியாவது அவனைக் காப்பாற்றி அவன் ரஜோகுணம் தமோகுணம் இரண்டையும் ஒழித்து, ஜீவனைச் சிறையிலிருந்து விடுதலை செய்கிறான். மறுபடியும் தன்னை அடையும்படி ஆனந்தம் என்ற முக்தியைத் தருகிறான். இதுதான் ராவணன், கும்பகர்ணன் இருவரின் ஸம்ஹாரம். ஸத்துவம், என்ற விபீஷணன் ஸீதையின் சிறை மீட்சிக்குப் பலவிதமாக உதவுகிறான். பட்டாபிஷேகமென்பது ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஸாயுஜ்யம் பெறுவது தான்.

**ஸுதர்சனம் ஐயங்கார்:** குரங்குகள் எதற்காக வருகின்றன?

**வியாஸாசார்:** மனிதன் மனஸைக் குரங்கென்று ஞானிகள் கூறுவது பிரசித்தம். நம்முடைய மனோபாவங்களில் சில கெட்ட குணங்கள் உள்ளவையானாலும், பெரும்பாலும் நல்ல எண்ணங்களும் அவைகளில் பல உண்டு. அந்த நல்ல மனோபாவங்கள் தான் நம்முடைய விடுதலைக்கு உதவி செய்யவேண்டியிருக்கிறது.

**ஜாபாலி:** நல்ல வேலைசெய்தீர். நீர் வியாக்யானம் செய்தது சரியானால் ராமன், ஸீதை என்பதெல்லாம் சரித்திரத்தில் இருந்தவரல்ல. பரமாத்மா, ஜீவாத்மா என்ற தத்துவங்களென்கிறீர். ராமன், லக்ஷ்மணன், ஸீதை இவர்கள் முன்னே அயோத்தியில்

இருந்தவர்களா, இல்லையா? கேட்ட கேள்விக்குச் சரியான பதில் சொல்லும்.

**வியாஸாசார்:** ராமாயணத்தில் எந்த அம்சங்கள் கட்டுக்கதை, கற்பனை என்று பிரித்து என்னுல் சொல்ல முடியவில்லை. அயோத்தி என்ற நகரம் இருந்ததாகத் தெரிகிறது. சரித்திர ஆராய்ச்சியாளர் தான் உம் கேள்விக்குப் பதில் சொல்ல முடியும். சரித்திரத்தில் நடந்த ஸம்பவங்களை அடிப்படையாகக்கொண்டு சிற்சில கற்பனைகளைக் கலந்து உபநிஷத்திலுள்ள ஆத்மஸம்பந்தமான உண்மைகளை விளக்கிக் காட்டுகிருர் மகாகவி வால்மீகி. புராணங்கள் வேதங்களை விளக்கிக்காட்டுகின்றன என்பது தெரிந்த விஷயம்.

**ஸுதரிசனம் ஐயங்கார்:** எங்கள் ஆசாரியர் வேதாந்த தேசிகர் எழுநூறு வருஷங்களுக்கு முன்னேயே ராவணன் ஜீவன், அவன் பத்துத் தலைகளும் பத்து இந்திரியங்கள் இது இராமாயணத்தின் தொனிப் பொருள் என்று சொல்லியிருக்கிருர்.

**வியாஸாசார்:** ஆதிசங்கராசாரியார் தம் உபநிஷத் பாஷியத்தில் தேவாஸுர யுத்தம் என்று புராணங்களில் வருணிக்கப் படுவதெல்லாம் மனுஷியனின் மனத்துக்குள்ளேயுள்ள நல்லெண்ணங்களுக்கும் கெட்ட எண்ணங்களுக்கும் நடக்கும் போராட்டந்தவிர வேறில்லை என்று வியாக்கியானம் செய்திருக்கிருர்.

**ஸுதரிசனம்:** கொரியா யுத்தத்தில் ஆரம்பித்தது தேவாஸுர யுத்தத்தில் வந்து முடிந்தது—மணி ஏழரையிருக்கும்போலிருக்கு—எழுந்திருப்போம்.

● ● ●



# இனம்



எமது நெ. 501 கறுப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான மயிரும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும், இது மயிர்கள் உதிர்ந்துபோவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும், செய்கிறது. புட்டி ஒன்று விலை ரூ. 2—4—0; 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—15—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்டுவாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்டு வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

**AMRIT PHARMACY (c.k.)**

JULLUNDUR CITY. Pb.



# 1950-51ல்

## என்ன நேர இருக்கிறது



புத்தாண்டாகிய 1950 க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12-மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி, மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி. கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள் கிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1—4—0 (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபாற் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒருமுறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

**Shri**

**Swami Satnarayan Jotish Ashram**

(C. K.) HOSHIARPUR.



*The Secret of her charm*

" நான் பிரஸிடெண்ட் வெஜிடெ
பிள் ஹேர் ஆயிலை உபயோகித்திருக்
கிறேன். அது கேசத்திற்கு ஆரோக்கிய
மளிக்கும் ஒரு சிறந்த கூந்தல் தைலம்.
என் அனுபவத்தில் கண்டேன். நல்ல
கூந்தல் வளர்ச்சிக்கு அது உதவுவ
துடன், தேகத்திற்கு குளுமையையும்
அளிக்கிறது.

**PRESIDENT VEGETABLE HAIR OIL**



**RATHOD TRADING Co**
**SOWCARPET — MADRAS. 1**



முத்துத் தோடு — முத்து, பச்சை இழைத்த வளை — முத்துத் தோடு



ஜிமிகி — நெளி மோதிரம் — ஜிமிகி

# Sastry & Sastry

## JEWELLERS

33, EAST MADA STREET,
MYLAPORE P. O. MADRAS-4.

## ஒரு இளைஞன் மரணத்தினின்றும் காப்பாற்றப்பட்ட விநோதம்!

# ஒரு உண்மையான வாக்குமூலம்

**பிரிய வாசகர்களே !**

நான் ஒரு முனிவரோ அல்லது டாக்டரோ அல்ல. நான் ஒரு சாதாரண மனிதன். என்னுடைய துர்நடத்தை காரணமாகக் கெட்டலைந்தவன் நான். நான் அத்துமீறி, சிற்றின்ப சாகரத்தில் இறங்கிய காரணத்தால் சொற்ப காலத்திற்குள் இரவு நேரங்களில் இந்திரியக் கழிவுகள் ஏற்பட்டு வீரியம் குறைந்து வெறும் ஆள் ஆகிவிட்டேன்.

நாளுக்கு நாள் பலம் குறைந்தது. இருதயத்தின் துடிப்பு அதிகமாயிற்று, தொடர்ந்து மயக்கம்வர ஆரம்பித்தது. மரணவேதனைப்பட்டேன். நான் இப்படி இருப்பதன் காரணங்களை நண்பர்கள் கேட்பார்கள். நானாகவே வலிய தேடிக்கொண்ட இந்த கேட்டைப்பற்றி நான் எப்படி அவர்களிடம் சொல்வேன்? "குணப்படுத்திவிடுவோம்" என்று தம்பட்டமடித்த ஆயிரக்கணக்கான டாக்டர்களையும் ஹக்கீம்களையும் ரகசியமாகக் கலந்து ஆலோசித்தேன். அவர்கள் கொடுத்த மருந்துகளையும், அமிர்தங்களையும் ஒன்றுவிடாமல் சாப்பிட்டேன். ஆனால் பலன் ஒன்றுமில்லை. உயிருடன் இந்த நரகவேதனைப் படுவதைவிட உயிரை விடுவதே மேல் என்ற முடிவுக்கு வந்தேன்.

அதிர்ஷ்டவசமாக நான் காஷ்மீர் செல்ல நேர்ந்தது. வேலை காரணமாகச் சென்றேன். அலைந்து திரியும் ஒரு மஹாத்மாவை (பக்கீர்) சந்தித்தேன். என்னைக்கண்ட உடனே அவர் கேட்ட முதல் கேள்வி நான் ஏன் இப்படி துக்கமே உருவெடுத்து வந்தமாதிரி இருக்கிறேன் என்பதுதான். துன்பப்பட்ட என் பாழும் மனம் மஹாத்மாவிடம் எல்லா விபரத்தையும் சொல்லிவிடும்படி தூண்டிற்று. அதன்படி எல்லாவற்றையும் சொன்னேன். தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்திருப்பதையும் சொல்லிவிட்டேன். மஹாத்மாவின் மனதில் இரக்கம் பிறந்தது. உள்ளுக்குச் சாப்பிடுவதற்கு ஒன்றும் மேலே பூசிக்கொள்வதற்கு ஒன்றும் ஆக இரண்டு மருந்துகள் செய்யும் விதங்களை விவரித்தார். தேவையான சகல மூலிகைகளையும் சேகரித்து அவர் முன்னிலையில் மருந்துகளைச் செய்தேன். உடனே மருந்துகளைப் போடவும், சாப்பிடவும் ஆரம்பித்தேன்.

**என் பிரிய தோழர்களே !**

மருந்துகளை உட்கொள்ள ஆரம்பித்த முதல் தினத்தன்றே மறுமலர்ச்சியின் உதயத்தைக் கண்டேன். கடவுள்மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன். இன்று என் மீறிய வீரிய சக்தியைக் கண்டு நான் பெருமிதம் அடைகிறேன். சிலவேளை மருந்து சாப்பிட்ட உடனே என் சிற்றின்ப வேட்கை அடக்க முடியவில்லை எனினும் மஹாத்மாவின் கட்டளைக்கிணங்க 25 நாட்கள் வெகு கட்டுத்திட்டத்துடன் மருந்து சாப்பிட்டு வந்தேன். தினம் 3 முதல் 4 சேர் பால் ஜீரணிக்க முடிந்தது. என் கண்களில் புது ஒளி பிறந்தது. கன்னங்களில் ஜீவ ஒளி தவழ்ந்தது. இழந்த சக்தியும் பலமும் உடலுக்கு வந்தன. நான் ஊர் திரும்பியதும் மீதமிருந்த மருந்தை கைவிடப் பட்ட சில கேஸ்களுக்குக் கொடுத்தேன். ஈடு இணை இல்லாத சஞ்சீவி இது.

முன் ஜாக்கிரதையுள்ள என் நண்பர்களின் யோசனைக்கிணங்கவும், பொது ஜனங்களின் நலனை உத்தேசித்தும் இதைப்பற்றி நான் விளம்பரம் செய்தேன். பயங்கரமான இந்த வியாதியால் வீரியத்தை இழந்த என் நண்பர்களுக்காகவே இந்த விளம்பரம். அதிக பணம் செலவு செய்தும் குணமடையாத வியாதியஸ்தர்கள் மிகமிகக் குறைந்த செலவில் சொஸ்தம் செய்து கொள்ளலாம். நீங்கள் கொடுக்கும் பணம் விளம்பரச் செலவுக்குக்கூட வராது.

| | |
|---|---|
| **காஷ்மீர் மறுமலர்ச்சி மாத்திரை 15 நாட்களுக்கு** | ரூ. 2—8—0 |
| **பூசுவதற்கு எண்ணெய் —** | ரூ. 2—8—0 |

மாத்திரைகளில் விஷக்கலப்பு இல்லை. ஆகையால் சிறியோர் பெரியோர் யாவரும் வயது வித்தியாசமின்றி எந்தக்காலத்திலும் உபயோகிக்கலாம். எண்ணெய் பூசினால் கொப்புளங்கள் உண்டாகாது.

கடைசியாக நான் சொல்வது என்னவென்றால் இதனால் லாபம் அடையவோ அல்லது என் சுயநலனுக்காகவோ நான் விளம்பரம் செய்யவில்லை. பொது ஜனங்களின் நலம் ஒன்றுதான் குறிக்கோள். அயல் தேசத்தவர் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

இந்தமாதிரி வியாதிகளுக்குக் கைகண்ட மருந்து இது.

**உத்தரவாதமான சிகிச்சை:** இந்த மருந்தால் குணமில்லை என்று கண்டால் முழுப் பணத்தையும் வாபஸ் செய்கிறேன். குணமாகவில்லை என்று சத்தியம் செய்தால் போதும். ஆயிரக்கணக்கான வைத்தியர்களால் சிபாரிசு செய்யப்படுவது இது.

**முக்கிய அறிவிப்பு:** வீரியமின்மை, சதைத் தளர்ச்சி, நரம்புத் தளர்ச்சி முதலியவைகளுக்குத்தான் இந்த மருந்து. வெள்ளை விழுந்து பலக்குறைவாக இருந்தால் இது ஜீவசஞ்சீவி. சுத்தமான ரத்தத்தை உண்டாக்குகிறது.

**Prof. B. S. Sidhu (C. K.) Halka No. 6, Jullundur City Pb.**



# வெளியூர்க் கடிதம் -6

சாரி

அன்புள்ள——க்கு,

உனக்கு எழுதி எவ்வளவு நாளாகிறது! என் பேரில் வருத்தப்பட்டுக்கொண்டாயோ? எழுதுவதற்கு விசேஷமாய் ஒன்றும் இருக்கவில்லை. அதனால்தான் கல்கத்தாவுக்கு வந்து ஒரு மாதத்திற்கு மேல் ஆகியும் கடிதம் எழுத உற்சாகமும் ஏற்படவில்லை. இன்னும் சில தினங்களில் இங்கிருந்து கிளம்பிவிடுவேனல்லவா? ஆகையால் கல்கத்தாவில் இருந்து எழுதியதாக இருக்கட்டுமே என்று இந்தக் கடிதம் எழுதலானேன்.

இலங்கைக்குப் போய்வந்த நண்பர் ஒருவர் அதன் லக்ஷ்மீகரத்தைக் குபேர பட்டணம் என்று குறிப்பிட்டார். கல்கத்தாவையோ என்னவென்று வருணிக்கலாம்? பத்துக் குபேரன் வாழும் நகரமென்போமா? சீச்சீ, பேச்சளவில்கூடவா இவ்வளவு கஞ்சத்தனம்? ஒரு லக்ஷம் குபேரர் ஒருமிக்கக் குடியிருக்கும் நகரமென்போமே. 40 மைல் பரப்புள்ள இந்தப் பெரும் பட்டணத்தின் ஒவ்வொரு மாளிகையிலும் ஒரு குபேரன் வசிக்கிறான்! ஆனால் அதற்குப் பொருத்தமான அழகு, சுத்தம், அமைதி, பிரகாசம் இவையெல்லாம் எங்கேயோ. இவ்வளவு பணமும் எங்கே போய் விடுகிறது, எதில் செலவழிகிறது? அதற்குப் பதில் எளிதில் கூறிவிடலாம். ஆறு அடுக்கு மாடி கட்டி வாழும் பெரிய மனிதனின் மோட்டார் வண்டிகள், பணியாட்கள், டாம்பீக அநாகரிக வாழ்க்கையில் செலவழிகிறது. கறுப்பு மார்க்கெட் மூலமாய் வந்து குவியும் பணம் கறுப்பாகவா இருக்கும்?

வீடு கட்டியே இப்பட்டணத்தில் ஒருவர் எளிதில் ஜீவிக்கலாம். 5000 ரூ. உண்டானால் 40 X 60 அடி இடத்தில் முதல் தளம் ஏற்பட்டுவிடும். அதைச் சுமார் 200 ரூபாய்க்கு மாத வாடகைக்குக் கொடுத்து, நிபந்தனையாக 5000 ரூ. அவர்களிடமிருந்து பெற்று, ஆனால் யோக்யமாய் மாதாமாதம் 50 ரூ. வாடகையில் தள்ளிக்கொள்ளச் சொல்லிவிடுவது. பிறகு காரியம் ரொம்ப எளிது! இந்த 5000 ரூ. விற்கு முதல் மாடி வாடகைக்கு விடப்படும்; அதில் கிடைக்கும் 5000 ரூ. வில் இரண்டாவது மாடி; இந்த ரீதியில் 4 மாடிகள் கட்டி ஐந்தாவது தளத்தில் நாமே குடியிருப்பது. கட்டிடத்திற்காகச் செலவு செய்தது 5000; ரூ. அதில் இருந்து வரும்படி பிரதிமாதமும் 600 ரூ. விற்கு குறையாது; நாம் வசிக்கவும் ஒரு வசதி ஏற்பட்டுவிட்டது; ஜீவிக்கவும் தவறாமல் பணம் கைக்குக் கிடைத்துவிடுகிறது. நிதானமான பணக்காரர் என்று சொல்லப்படுபவருக்கு இம்மாதிரி பத்து மாடி வீடுகளாவது சொந்தமாக இருக்கும், இங்கே.

இந்தப் பெரிய நகரத்தை மழை நாளில் காணக்கூடாது என்று நான் அடிக்கடி சொல்வேன். என் அதிர்ஷ்டம் என்னவோ, பருவ மழை பெய்து, ஊரே பூஞ்சக்காளம் பிடித்து நாற்றமெடுக்கும் நாட்களிலேயே இங்கே வரும்படி ஏற்படுகிறது.

ஒவ்வொரு தெருவையும் அதிகாலையில் நகர சபை ஆட்கள் தண்ணீர் விட்டுக் கழுவுகிறார்கள். இதற்கென்றே பெரிய தண்ணீர்க் குழாய்கள்—GEYSER—தரையில் பதிக்கப்பட்டு இருக்கின்றன. இவைகளை ஜனங்கள், இஷ்டப் பிரகாரம் திறந்துகொண்டு மாடு குளிப்பாட்டி, எண்ணெய் தேய்த்து ஸ்நானம்செய்து, போதாக்குறைக்கு, குழாய்களை மூடாமல் திறந்த வண்ணமே விட்டுச் செல்வதைக் கண்டால் நமக்குக் கோபம் வருகின்றது. தெருவில் வெள்ளம் போல் ஜலம் பெருகுகிறது. சிமிண்டுக் குப்பைத் தொட்டிகளை மாடும், மனிதரும் புரட்டித் தள்ளி, தெருமுழுவதும் சிதறி அழுகிக்கிடக்கும் வஸ்துக்களைக் காணும் நமக்கு வயிற்றுக்குமட்டல் உண்டாகிறது. குப்பைத் தொட்டிகளில் இவ்வூரில் என்னவெல்லாம் எறிகிறார்கள்; கடவுளே! முனிசிபல் கார்ப்பொரேஷன் சிப்பந்திகள் தவறாமல் காலையில் தெருக்களை அலம்பாவிட்டால் அந்த நிலைமை எப்படியிருக்கும் என்று என்னால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியவில்லை.

அன்றொரு நாள் பேப்பரில் சென்னை வீதிகளில் மாடுகள் திரிவதாலும், ஆங்காங்கே கட்டப்படுவதாலும் ஏற்படும் தொல்லைகளை ஒருவர் குறிப்பிட்டிருந்தார்—அவரைக் கல்கத்தாவுக்கு

அழைத்து வந்து காண்பிக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று. மழ மழவென்று கருங்குன்றுகள் போல் திரியும் டில்லி எருமைகளை எந்நேரமும் கல்கத்தாவின் சிமிண்டு ரோடுகளில் காணலாம், அவைகளின் இருப்பிடமே சாலைகளும், அழகிய புல் மைதானங்களுமே. சில கட்டப்பட்டும், மற்றவை உல்லா சமாய் ஙொய்—ய் என்று ரீங்காரம் செய்து, புல் பத்தைகள்,' நடைபாதைகளில் மலம் கழித்தும் திரிகின்றன.

சொல்லப்போனால், இந்தமாடுகள் செய்யும் அனர்த்தமே கல்கத்தாவின் அசுத்தத்திற்கு முக்ய காரணம். பம்பாய் நகரம்போல் ஊருக்கு வெளியில் பண்ணை ஏற்படுத்தி, மின்சார ரயில்களில், பாலை நகரத்துக்குக் கொண்டு வரும் வசதி இங்கே கிடையாது. இந்த நெருக்கமான பட்டணத்தில் வசிக்கும் ஜனங்கள் அவ்வளவு பேருடைய தேவைக்கும் வேண்டிய அளவு பால் 'சப்ளை' செய்ய இந்த க்வாலாக்கள் என்னதான் செய்வார்கள்? பாவம், இல்லாவிட்டால் இவர்கள் கையில்தான் பணம் எவ்விதம் சேர்ந்து கொழுத்துப்போக முடியும்?

இந்த அக்கிரமத்தைக் கண்டிக்கும் போலீசாரின் மிரட்டலையும் சிலவேளையில் காணலாம். ஒரே கூட்டமாய் நூறு எருமைகளைப் போலீசு ஆட்கள் திரட்டி ஓட்டிப்போவார்கள்; தெருக்கோடி போவதற்குள், தலைக்கு ஐந்து ரூபாய் வீதம், பணம் கைமாறும்; பையாக்கள் சிரித்துக் கொண்டே மாடுகளுடன் திரும்பி விடுவார்கள்! சட்டத்திற்கு உட்பட்டு நடக்கும் கெட்ட வழக்கம் இந்த ஊரில் கிடையாது. பயமற்ற நடத்தைக்குப் பேர்போன பட்டணம் தானே? தாணுவுக்குச் சமீபத்தில் எத்தனை கொள்ளை, கொலைகள் நடக்கின்றன. ஐந்து பேர் சேர்ந்து பேசிக்கொண்டால் அது நிச்சயம் பிரமாத சண்டையாகி, அந்த இடத்திலேயே இரண்டுபேர் குத்துண்டு கிடப்பார்கள்.

தபால்காரன் உள்பட இங்கே சகல ஆட்களும் லஞ்சம் எதிர்பார்க்கிறார்கள்; 'பக்ஷீஷ்' என்று வேணுமானல் மரியாதையாக இவர்கள் பெயரிட்டு அழைக்கட்டும், எனக்கு ஆக்ஷேபணையில்லை. மணியார்டர் கொண்டுவரும் தபால்காரன் பெரிய தொகைக்குக்கூட, சில்லறையாக ஒரு ரூபாய் உள்பட எண்ணிப் பணம் கொடுத்துவிட்டு நிற்பான். கிராமாந்தரங்களில் தவிர இம்மாதிரி நடப்பதை நீ கேட்டதுண்டோ? இதை மட்டுமா சொல்வது?

தபால் ஆபீசு நடைபெறும் அழகு சொல்லி முடியாது. ஸ்டாம்பு வாங்க க்யூ, மணியார்டர் க்யூ, ரிஜிஸ்டர் க்யூ, விசாரிப்பு க்யூ, இத்தியாதி கூட்டமான இடங்களில் இது நியாயம் தானே என்று நீ கேட்கிறாய் அல்லவா? கூட்டம் க்யூவில்தான்! திறமையோடு வேலை செய்யும் இரண்டே ஆட்கள் உண்டானல் க்யூவே ஏற்படாது. ஒரு நாள் மணியார்டர் அனுப்ப நான் போன பொழுது, வரிசையில் மூன்றாவதாக நின்ற, என்னுடைய முறை வருவதற்கு ½-மணி நிற்கவேண்டி வந்தது. இதற்குள் மணியும் 2½ ஆகிவிட்டதால் என் பின்னால் நின்ற பதினைந்து ஆட்களுக்கு அன்று மணியார்டர் அனுப்பப் பொழுது இருந்திராது. மணியார்டரைக் கையில் எடுத்து, கூபனில் எழுதியுள்ள ஒரு வார்த்தையைக்கூட விடாமல் படித்து மூளையில் ஏற்றிக்கொண்டு, நிதானமாய் "பங்களா உங்கள் சொந்தமா?" என்று ஒரு கேள்வி என்னைக் கேட்டதும், எனக்கு வந்த கோபத்தைப் பார்க்க வேண்டுமே! நம் ஊரானல் அவரைத் திட்டியிருப்பேன். பேசவராத ஆஷே, போஷே பாஷையில் இந்தப் பாபுவை என்னதான் திட்டுவது? செயல் திறமை அவ்வளவு உண்டு இவர்களுக்கு.

வங்காளிகள் போஜனப் பிரியர்கள். நெய் சர்க்கரை சேர்ந்த கணக்கற்ற பலகாரங்களைச் செய்து உண்டு, உண்பித்துக் களிப்பார்கள். வியாபாரத்தில் பெரும் புள்ளிகளான ஆண்கள் பணம் சேர்ப்பதில் உயிரையே விடுவார்கள்; பணமும் வந்து குவிந்து அடுக்கடுக்காய் மெத்தை வீடுகள் கட்டி, நினைக்க முடியாத உயர்ந்த வாடகைக்குக் கொடுத்துப் பணம் சேர்ப்பார்கள். போக வாழ்வில் உடல் நலத்தையும் கெடுத்துக் கொள்வதில் நிகரற்றவர்.

வியாபாரமே இங்கு மார்வாரிகள், வங்காளிகளால் ஓங்கி நிற்கிறது. பணம் சேர்க்கப்படும் வகைகளைக் கவனித்தால் நெஞ்சு நடுங்கும். அமர்ந்துள்ள 'தக்த்'ஐ விட்டு எழுந்திராமலே, லக்ஷக்கணக்காய் பணம் கை மாறும். ஒரு கை எழுத்து. அலைச்சல் கிடையாது! போன் மூலமும் பேச்சிலுமே பணம் குவிகிறது.

இதே பணக்காரன் வீட்டில், ஸ்த்ரீகளின் ஒற்றுமையும், சோம்பேறித்தனமும் நமக்கு வேடிக்கையாக இருக்கிறது. ஜனனவில் நுழைந்தவுடன் ஒரு விசாலமான 'தக்த்' இங்கேயும் தென்படும். 12 அடிக்குப் 12 அடி சதுரத்தில் செய்யப்பட்ட தணிந்த மர விசுப் பலகை, இதன்மேல் மெத்தை தைத்து நல்ல விரிப்புக்களால் மூடி இருக்கும். விச்ராந்தியாக அமரவும், சாய்ந்து படுக்கவும். நீண்ட திண்டுகள் தைத்துப் போட்டிருப்பார்கள். 10, 15 ஸ்திரீகள் கூடி, சல்லாபித்து, தையல் வேலை செய்து, சா குடித்து, ஆட்டம் பாட்டம் உள்பட இதின்மேல் செய்வார்கள். கைக்கு எட்டின மாதிரி போன், எலெக்டிரிக் விளக்குப் பொத்தான்கள் அமைந்திருக்கும். தட்டில் வெற்றிலை பாக்கு, ரொட்டி, தின்பண்டம், சதுரங்கம் ஆடும் காய்கள், வீட்டு மருமகள், மகள், பூடி, குழந்தைப் பெண்கள், தாதிகள் என்று

அனைவரையும் இங்கே காணலாம். இந்த, 'தக்த்' வங்கத்திற்குப் பெயர் போனது; ஏழைகளின் கிருஹத்தில்கூட வரவேற்பு அறையில் சிறிய தக்த் ஒன்று இருக்கும், கட்டாயமாக.

பணக்காரரின் வாழ்க்கையில் ஏழைக்குப் பங்கே கிடையாது; ஏழைகள் வங்காளத்தில் என்றும் ஏழைகள்தான். எங்குமே அப்படித் தானே? மழைக் காலத்தில் மழைக்குப் பயந்து ஜன்னல் கதவுகளை மூடி விடுவார்கள்; குளிர் காலத்தில் குளிருக்குப் பயந்து மூடுவார்கள். இவ்வாறு வருஷத்தில் ஒன்பது மாதம் நல்ல காற்றே மேல்படாமல் வாழ்வதாலும், சூழ் நிலை புகை மயமாக இருப்பதாலும்—வீட்டுக் கொயிலாப்புகை ஒன்று போதுமே—சதுப்புப் பூமியில் வாழ்வதால் மலேரியாவுக்கு அடிமையான பலவீன உடல், க்ஷயரோகத்திற்கும் சரியான பாத்திரமாகிறது. இவ்வியாதி இந்த ஊரில் அதிகம் பரவியிருப்பது அதிசயமில்லை. பச்சைப் புல் மைதானங்களை நிறைய உபயோகிக்கவும்தான் செய்கிறார்கள்; அதாவது மாடுகள் இடந்தரும் அளவுக்கு!

பட்டணத்தை என்னவோ வெகு அழகாய் அமைத்திருக்கிறார்கள்; அதே முறையில் வைத்துக்கொள்ள இவர்களின் நாகரிகம் இடந்தரவில்லை. வீட்டைத்தான் எப்படி வைத்திருக்கிறார்கள்? என்னதான் மழை பெய்தாலும், மாடி மீதிருந்து புடவைகளைப் படுதாக்கள் போல் இப்படியா தொங்கவிட வேண்டும்? பணமும் நிறையத்தான் புரளுகிறது. ஏழைகள்கூட கப், சாஸர் இல்லாமல் டீ சாப்பிடுவதில்லை. ஒரு செட் ரூ. 1–8–0 என்று விற்கும் வங்காள பாட்டரீஸ் பீங்கான்களை வாங்கித் தயக்கமின்றி உபயோகிக்கிறார்கள்.

ரேஷன் ஆபீசு ஊழல் நம் ஊரைத் தோற்கடிக்கும். பேஷான பச்சரிசியும், புழுங்கலரிசியும் ஆட்டாவும் ரேஷனில் கிடைத்தாலும் ஜனங்கள் என்னவோ 'கறுப்பு' அரிசி வாங்கத் தயங்குவதில்லை, முக்யமாய்த் தென்னிந்தியர்கள். அவர்களே இங்கு ஒரு தனி உலகில் வாழ்கிறார்கள். தமிழ்ப்பள்ளிக்கூடம், தென்னிந்தியர் கிளப், ஹோட்டல் இம்மாதிரி. கிளப்பின் அறிக்கையில் அங்கத்தினரின் ஜாபிதாவில் அவர் மணமானவரா, பிரும்மசாரியா என்கிற விவரம் குறிப்பிட்டு இருப்பதைக் கண்டதும், எனக்குப் பலவித முற்போக்கான யோசனைகள் மனதில் உதித்தன. ஒவ்வொரு கிளப்பிலும் இந்த விவரங்களைக் கொடுத்தால், நம் தமிழ் நாட்டுக்குப் பிரத்யேகமான வரன் தேடும் வேலை எளிதில் முடியுமல்லவா? அதே கிளப்புகளில் ஒரு கல்யாணப்பகுதி அல்லது ஏஜென்சிகூட ஏற்படுத்தலாமே! அங்கத்தினராயிருப்பவர், வரசுல்கம் பெறவோ, கொடுக்கவோ கூடாது என்கிற நிபந்தனையையும் ஏற்படுத்தலாம்! நீ என்ன நினைக்கிறாய்?

தெருவில் போகும் கூட்டத்தைப் பார்த்துக் கொண்டு நிற்பது எனக்கு ஒரு தனி இன்பத்தைக் கொடுக்கும். விதம்விதமான ஜனங்கள் விதம்விதமாய் உடுத்திக்கொண்டு இவ்வளவு பரபரப்போடு எங்கேதான் போகிறார்கள்? ப்யா......ரா.. (கொய்யாப்பழம்) டிங் டிக்...... டிங் டிக்......(ரிக்ஷாவின் மணி) சீனு பா...... தாம்.........(நிலக்கடலை) மக்னே.........லியா (ஐஸ்க்ரீம்) இம்மாதிரி சாமான் விற்பவரின் கூப்பாடு; புது டீசல் பஸ்கள்; இரண்டு அடுக்கு பஸ்கள்; டிராம்கள்; பிறகு ஜனங்கள் ஒவ்வொரு பஸ்ஸிலும் என்ன கூட்டம். "ஆஜா பையா காளிகாட், காளிகாட்; சியாம் பஜார்; ஹௌடா, ஹௌடா; ரூகே——; ஏக்நம் பாந்தே, ஜனு உதரேகா;" இவை பஸ் கண்டக்டர்களின் கூப்பாடு—எதற்காகத்தான் இப்படிக் கூவி அழைத்து 25 பேர் ஏறவேண்டிய இடத்தில் 55 பேர்களை ஏற்றி மூச்சுத்திணற அடிக்கிறார்களோ தெரியவில்லை. ஆனால் பஸ்ஸில் பெண் என்று கூறிக்கொள்ளக்கூடிய ஒருவரும் உட்கார இடமின்றித் தவிக்கவேண்டாம். ஒரு பெண் வண்டியில் ஏறினால், ஒரு ஆண்பிள்ளை எழுந்து நிற்பான், அவளுக்கு இடம்கொடுக்க. இந்த வழக்கம் எனக்கு நிரம்பப் பிடித்திருக்கிறது. ஆனால் வண்டிகளை, இவ்வளவு வேகமாய் ஓட்டவேண்டாமப்பா; எந்த நிமிஷம் குடைசாயுமோ என்று உயிரைக் கையில் பிடித்துக்கொண்டே உட்கார வேண்டியிருக்கிறது.

வங்கத்தில் பெண்கள் அதிக முன்னேற்றம் அடைந்தவர்கள். ஆணுக்குச் சமமாக வெளியில் போய்வருகிறார்கள்! ஒரு வங்காளப் பெண்மணி என்னிடம் "உங்கள் தேசத்துப் பெண்கள் எவ்வளவு சுறுசுறுப்பாய் வேலை செய்கிறார்கள். இங்கே அதெல்லாம் கிடையாது, நன்றாக உடுத்தி வெளியில் சுற்றுவார்கள்; அடிக்கடி சா குடிப்பார்கள்; வீட்டுக்கு வந்து நன்றாய்ச் சாப்பிட்டு, "தக்த் பர் பைட் ஜாயங்கே" என்று சொன்னாள். இது எனக்கு மிக்க ஆச்சர்யமாக இருந்தது. ஒரு விதத்தில் அந்தம்மா சொன்னது வாஸ்தவமே. கண்ணைக் கவரும் விதம் இவர்கள் உடுத்திக்கொள்வது எனக்குப் பிடித்துத்தான் இருக்கிறது. எளிய பருத்தி ஆடைகளையே அணிந்தாலும், அணியும் விதமும், நடையும் ரம்மியமாய் இருக்கின்றன. தெருவில் இவர்கள் போகும் வேகத்தைக் கண்டால், ஏதோ அவசர வேலையில் செல்வதாய்த் தோன்றும்; ஊர் சுற்றுவதும் ஒரு வேலையில் சேர்ந்தது தானே! ஒருவேளை ஏதோ சமைத்துச் சாப்பிடுகிறார்கள். கொயிலா அடுப்புப்பற்ற வைத்துச் 'சா' தயாரிக்ககூட இவர்களுக்குச் சோம்பல். காலையில் 4½மணிக்கும், பிற்பகல் 1½-மணிக்கும் தெருவில் வரும் 'சா' வாலாவிடம் கணக்கு ஏற்படுத்திக் கொண்டு,

வாங்கிக் குடித்துவிட்டு, ஆனந்தமாய் இருப்பார்கள்.

இதெல்லாம் சாதாரண அந்தஸ்துள்ளவரின் பழக்க வழக்கம். பணக்காரர் ஏக குடும்பமாக இருந்தாலும், மேல் நாட்டாரைப்போல் வீட்டில் ஒவ்வொருவருக்கும் தனி அறைகள் இருக்கும். சாப்பாடுமுதல் அவரவர் அறைகளில் நடைபெறும். மனக்கசப்பு சிறிதும் இன்றி, மூன்று தலைமுறை ஆட்களும் ஒற்றுமையோடு வசிக்கிறார்கள். இவர்களிடமே கற்றுக்கொள்ள அநேகம் நல் விஷயங்கள் உண்டு.

துணி மூட்டையோடு ஒரு சைனாக்காரன் ஒரு நாள் வீட்டுக்கு வந்தான். ஹிந்தியோ, இங்கிலீஷோ அந்தப் பிரகிருதிக்குச் சரியாய்த் தெரியவில்லை; எனக்கோ சீனா பாஷை தெரியாது! எங்கள் சம்பாஷணை எப்படி இருந்ததென்று, அடியில் உள்ளதை நீ படித்தால் ஊகித்துக் கொள்ளுவாய்:—"கம்யூனிஸ்டு சைனா good; சியாங் good; அவருடைய Cousins no good; சியாங் காதில் துணியைத் திரித்து உருட்டி அடைத்து விடுகிறார்கள்; சைனா 'வெலி' big like india; So He no hear............Kuomintang ரொம்ப நல்லது; பணக்காரரை மட்டும் தொந்தரவு செய்யும்! அமெரிக்கா நல்லவன் இல்லை. இந்தோசைனா, இந்தியா, பர்மா எல்லாம் அவனுக்கு வேணும்; நமக்கு சாப்பாடு கொடுக்கமாட்டான், ஆனால் யுத்த சாமான், துப்பாக்கி கொடுப்பான்...... சீனாவில் இப்பொழுது பெண்கள் படிக்கிறார்கள்; 40 வயதுப் பெண்கூட Yellow Plague, Great Wall எல்லாம் படிக்கிறார்கள்;" இப்படி அரை மணி நேரம் ஏதெல்லாமோ சொன்னான். இவனுடைய அரசியல் ஞானமும், தேசப் பற்றும் வியப்பாக இருந்தன.

சீனப் பெண்களின் பாதங்களை முன் நாட்களில் கட்டிப்போட்டுச் சிறியதாக்கிக் கொண்டதற்கு ஆதாரமாய் அவன் சொன்ன ஒரு கதையைக் கேளு — 1000 வருஷம் முன்பு சிங் என்று அங்கே ஒரு ராஜா இருந்தார். அவருடைய மனைவி ஒரு புலி; (His wife no woman, tiger, tiger) அவளுடைய புலிப் பாதங்களை விரும்பாத அந்த ராஜா' இனி ஊரில் பிறக்கும் பெண் குழந்தைகளுக்குப் பாதங்களை உடனே இறுக்கிக்கட்டிவிட வேண்டும் என்று உத்தரவு போட்டார்." கதை அழகாக இருக்கிறதல்லவா? (Small feet nice woman) என்று கதையை முடித்தான். நம்மாத்து சின்ன......க்கு ஒரு சிறந்த சீனப் பெயர் சொல்லேன் என்று நான் கேட்டதற்கு, என்னமாதிரி பெயர் என்று பதில் கேள்வி கேட்டான். சிறிய கரும் புஷ்பம் (Little black flower) என்று அந்த க்ஷணத்தில் மனதில் தோன்றியதைச் சொன்னேன். ஸியூ, ஹி, ஹ்வா (Siu Hi Hwa) என்று நாலைந்துதரம் கூப்பிட்டுவிட்டு, சிரித்துக்கொண்டே போய்விட்டான்; என்னுடைய சீன பாஷா ஞானமும், ஸியூ=சிறிய, ஹி=கறுப்பு, ஹ்வா=புஷ்பம் என்கிற அளவில் முன்னேறிற்று. அவனுடைய பெயர் லியூ, Mr. Liou! எங்கேயாவது மூட்டையோடு சைனாக்காரனைக்கண்டால், Mr. Liou தானோ வென்று நீ இனி யோசிக்கலாம்.

பிரிய——, கடிதம் நீண்டுவிட்டது. கல்கத்தாவின் அசிங்கத்தையே அதிகமாய் விவரித்து எழுதியதில் இருந்து, வங்கமே எனக்குப் பிடிக்கவில்லை யென்று நினைக்கிறாயோ—அப்படி எண்ணாதே. ரவீந்திரரும், அரவிந்தரும், சித்தரஞ்சன் தாஸும், கேஷப் சந்திரசென்னும் நேதாஜியும் அவதரித்த வங்கத்தையும் நான் வெறுப்பேனோ?

மீண்டும் பிறகு எழுதுகிறேன்.


# காவேரி

(உயர்ந்த தமிழ் மாதப் பத்திரிகை)

| கல்கத்தாவில் ஏஜண்ட்ஸ் | பம்பாயில் ஏஜண்ட் |
|---|---|
| ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், | G. சாரநாதன் |
| 11, ஜாடின்தாஸ் ரோடு | 9/65 சரஸ்வத் காலனி |
| ராஷ்பிகாரி அவின்யூ P. O | மட்டுங்க. |
| கல்கத்தா 29 | |

# ரூபவதி பி. எஸ். ஸரோஜா தனது அழகான சருமத்தைப்பாதுகாக்க

# லக்ஸ் டாய்லட் சோப்பையே

தேர்ந்தெடுத்திருக்கிருர்




*இதோ அவர் ஏன் என்று உங்களுக்கு சொல்கிருர்!*

"நான் லக்ஸ் டாய்லட் சோப் பிற்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இந்த சுத்தமான காரமற்ற சோப்பின் மென்மையான வெண்நுரை எவ்வளவு அதிசயமானமுறையில் சரும அழகை பாதுகாக்கிறது என்று அறிந்து கொண்ட நாவிலிருந்து என் சருமத்தை பாதுகாக்கும் வேலையை லக்ஸ் டாய்லட் சோப்பிடம் ஒப்படைத்திருக்கிறேன். மேலும், லக்ஸ் டாய்லட் சோப்பின் பரிமளம் உண்மையாகவே மகிழ்ச்சி தருகிறது."

★ *இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தையும் வசீகரமாக செய்யும்!*

LTS. 248-172 TM

**சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்**

# ஆடிப்பண்டிகை

"அம்பர்"




அடேய் கோபு! என்னடா இது? நாழியாய் விட்டதே...... நீ இன்னும் டிரஸ் பண்ணிண்ட பாடில்லையா...... ராகுகாலம் வந்துவிடப் போறதே........" என்று கேட்டுக் கொண்டே பரபரப்புடன் உள்ளே வந்தான் சாம்பு.

"ஊம், ராகு காலமாவது, சனீசுவரன் காலமாவது? எல்லாம் புறப்பட்டால் போச்சு," என்றுன் கோபாலன்.

"ஏண்டா பழி! என்னடா விள்க்கெண்ணெய் குடித்தவன் மாதிரி மூஞ்சியை முழ நீளம் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிருய்? பெண் பார்க்கப் போறவனு லட்சணமாயில்லையே! ஏன் மாமி, நீங்களாவது சொல்லக்கூடாதோ?"

"நான் என்னத்தைச் சொல்றதப்பா! சொல்லிச் சொல்லித் தொண்டைதான் வறண்டு போச்சே, என்னமோ உங்க மாமா என்னை இவன் கையிலே காட்டிக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார். இவனை நம்பித்தான் நானும் உயிரோடு இருந்து வருகிறேன். வீட்டிலே ஒருத்தர் முகத்தை ஒருத்தர் எத்தனை நாள்தான் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே இருக்க முடியும்......? வீட்டிலே விளக்கேற்றிவைக்க ஒரு சுமங்கிலிப் பொண்ணு...... ஓடி விளையாடத்தான் ஒரு குழந்தையா...... ஒண்ணுமில்லே... ஊம். எனக்கும் ஒரு நாட்டுப் பெண்ணு, பேரக்குழந்தைனு ஒன்று வரப் போறதா— நானும் பார்த்துவிட்டுத்தான் கண்ணை மூடப் போறேனே... ஊம், யார் கண்டார்கள்...... இல்லே நெஞ்சுக் குறையோடுதான் சாகப்

போறேனே என்னமோ... ஊம்..." என்று அலுத்துக்கொண்டாள் ஜானகியம்மாள்.

"நீங்கள் வருத்தப்படாதேயுங்கள் மாமி, இதோ ஆச்சு! இந்தத் தடவை எப்படியாவது இவனுக்குக் கால் கட்டு உண்டாக்காதபோனுல் என் பெயரை மாத்திவச்சுக் கூப்பிடுங்கோ— அப்புறம் என் பேர் சாம்பு இல்லே;... நீங்கள் பார்த்திண்டே இருங்கள்... அப்புறம்தான் உங்களுக்குத் தெரியும், இந்த சாம்புவின் திறமையெல்... ...லாம்...!"

"நீ எப்படிடாப்பா முடிச்சு வைக்கப்போருய்? என்னமோ லட்சியப் பொண்ணும்... அப்படி வறணும் இப்படி வறணுங்கருன், நானும் ஒரு காலத்திலே இவன் அப்பாவுக்கு லட்சியப் பொண்ணுகத்தான் இருந்தேன். இப்போ என்னை விட்டுட்டுப் போயிட்டார். என்ன லட்சியம் வேண்டிக்கிடக்கு, எல்லாம் விதிப்படிதானே நடக்கும்?" என்று அங்கலாய்த்துக் கொண்டாள் ஜானகியம்மாள்.

கொஞ்ச நேரங்கழித்து மறுபடியும் "சாம்பு! நீயும் இவனுமாய் போய்ப் பொண்ணைப் பாத்துட்டு வாங்கோ, இவனுக்குப் பிடித்தால் அப்புறம் நான் வேணுமானுல் ஒரு நாளைக்குப் போய் பாத்துட்டு வருகிறேன்" என்ருள்.

பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் அத்தான் கோபாலனும் அம்மாஞ்சி சாம்புவுமாய் மாம்பலத்துக்குப் பெண்ணைப் பார்க்கப் புறப்பட்டார்கள்.



இதுவரை எத்தனையோ பெண்களைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தாயிற்று. அம்மா போய்ப் பார்த்துவந்தது பல பெண்கள். அம்மாஞ்சி போய்ப் பார்த்துவிட்டு வந்தது சிலபெண்கள். அத்தானும் அம்மாஞ்சியும் சேர்ந்துபோய்ப் பார்த்துவிட்டு வந்தவை எண்ணிலடங்காதவை. ஆக ஒரு அஷ்டோத்ரம் முடிந்துவிட்டது! இப்பொது இருவரும் பார்க்கப் போகும் பெண் நூற்றுஒன்பதாவது! சகஸ்ரநாமமும் ஆரம்பமாகி விட்டது,

காரியம் பலிதமாக, சித்தி விநாயகருக்கு நூறு தேங்காய்கள் உடைப்பதாக ஜானகியம்மாள் வேண்டிக்கொண்டாள். ஆனுல் விநாயகருடைய அருள் கோபாலன் பக்கம் இருக்கும் போது அவள் என்ன செய்யமுடியும்!

* * * *

மாலை இருவரும் திரும்பி வந்துவிட்டார்கள். அத்தான் முகத்திலும் அம்மாஞ்சி முகத்திலும் ஈயாடவில்லை, சென்ற காரியம் 'காய்'தான் என்பதும் ஜானகியம்மாளுக்குத் தெரிந்துவிட்டது. அவளும் இதைப்பற்றிப் பேசவேயில்லை. ஆனுல் நாளடைவில் இந்தக் கவலையே அவளை வாட்டியது. எவ்வளவோ அந்தஸ்து நிறைந்த இடத்திலிருந்து வந்த அழகான பெண்களையெல்லாம், கோபு தனக்குப் பிடித்தமில்லையென்று தட்டிக் கழித்துக் கொண்டு வந்தது அவளுக்குப் பிடிக்கவேயில்லை.

கோபாலன் கல்லூரி மாணவன், தேசத் தொண்டன். லட்சியப் பித்தன். தனக்கு வருபவளும் அறிவும் அழகும் நிரம்பிய ஓர் தேச சேவகியாக இருக்கவேண்டும்—என்று எண்ணினன். ஆனல் அவன் எண்ணம் போல் 'லட்சியப் பெண்' அவனுக்காக இனி பிறந்துதான் ஆகவேண்டுமோ என்னவோ!

'பேசாமல் கல்லூரி வாழ்க்கையை ஒரு வாறு முடிப்போம். பிறகு பார்த்துக்கொள் ளலாம் கலியாணத்தை' என்று கொஞ்சம் நிறுத்திக்கெகாண்டான்.

2

நாட்கள் சென்றன. அது மார்கழி மாதம். விடியற்காலம் ஜானகியம்மாள் முன்னதாக எழுந்திருந்து வீடு வாசலைத் துப்புற மெழுகிக் கோலம் போட்டுக்கொண்டிருந்தாள். அது சமயம் எதிர் வீட்டுப் பக்கம் அவளுடைய பார்வை சென்றது. இவ்வளவு நாட்கள் வரை பூட்டிக் கிடந்த அந்த வீடு இப்பொழுது திறக்கப்பட்டு ரொம்ப சுறு சுறுப்பாகச் சுத்தம் செய்யப்படுவதைக் கண்டாள், "சரிதான், யாராவது குடி வரலாம்; அதைப்பற்றி நமக்கென்ன!" என்று உள்ளே சென்றுவிட்டாள்.

அந்த எதிர் வீட்டுக்காரர் உத்தியோகத்திலிருந்து 'ரிடையர்' ஆகிவிட்டார் என்றும், தை பிறந்தவுடன் அந்த வீட்டிற்குக் குடி வரப்போவதாகவும் பிறகு அறிந்து கொண்டாள்.

* * * *

அன்றுதான் தை மாதத்தின் முதல் நாள். ஜானகியம்மாள் வழக்கம் போல் விடியற்காலம் எழுந்திருந்து வீடு வாசலையெல்லாம் மெழுகிவிட்டுக் கோலம் போட வாசலுக்கு வந்தாள். அதே எதிர் வீட்டு வாசலில் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு பெரியவர், ஒரு அம்மாள், இரண்டு குழந்தைகள் பதினைந்து அல்லது பதினறு வயதிருக்கும் ஒரு இளம் பெண் இவர்கள் இறங்கினர்கள்.

ஜானகி அம்மாளுடைய திருஷ்டி கடைசியில் இறங்கிய அந்த இளம் பெண்மேல்தான் பலமாக விழுந்தது. "ஆகா! தளதளன்னு தங்கக்கொடியாட்டமா என்ன அழகு! முகத்திலே என்ன களை!" என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள். பிறகு 'ஊம்' இது மாதிரி ஒரு பொண்ணை நாட்டுப் பொண்ணுக அடையறத்துக்கு நானும் கொடுத்துவச்சிருக்கேனே இல்லியோ, இல்லே — இந்த லட்சியக் குரங்கு எப்படித்தான் பிடிச்சுண்டு வரப்போறதோ, ஊம்; யார் கண்டா" என்று குறை பட்டுக்கொண்டே உள்ளே சென்றுவிட்டாள்.

3

மறுநாள் காலையில் மாடியில் உட்கார்ந்து பரீட்சைக்காகப் படித்துக்கொண்டிருந்தான் கோபாலன். அவனுடைய கண்கள் மாத்திரம் புஸ்தகத்தில் இருந்ததே தவிர மனம் அதில் ஈடுபடவேயில்லை. எதிர் வீட்டு மாடியிலிருந்து வீணையின் இனிய நாதம் காற்றில் தவழ்ந்து வந்து அவன் காதில் ஒலித்துப் படிப்பைக் கெடுத்தது; உடனே அவனுக்கு ஆத்திரம் கிளம்பிவிட்டது! "இதேதடா சனியன்? எதிர் வீட்டிலே, பக்கத்து வீட்டிலே, எவனாவது பரீட்சைக்குப் படிப்பானே, என்று கொஞ்சமாவது ஞானம் இராது? நேற்றுப் பூராவும் இப்படியே இருந்தது, இன்றைக்கும் விடிவதற்குள் ஆரம்பித்து விட்டதே!" இந்தச் சனியன் எப்பொழுது ஒழியும்? என்று சபித்தான்.

'பக்கத்திலாவது பார்வையைச் செலுத்தாமல் படிப்போம்' என்று விர்ரென்று எழுந்து சென்று ஜன்னல் கதவுகளையெல்லாம் 'படீர்' என்று நன்ருக மூடிவிட்டு வந்து உட்கார்ந்தான்.

ஆனல் அந்த வீணகானம் தடைபடவேயில்லை. அவன் செவியில் இன்னும் தெளிவாக வந்து தேவகானமாகப் பொழிந்தது! "ஊம், சுத்தமோசம்; இதைக் கவனித்தால் பரீட்சையில் சுழிக்க வேண்டியதுதான்," என்று சொல்லிக்கொண்டே எழுந்திருந்து பீரோவைத் திறந்தான். கொஞ்சம் பஞ்சை எடுத்து இரண்டு காதுகளிலும் நன்ருக வைத்து அடைத்துக் கொண்டான். "ஊம், இப்பொழுது பார்ப்போம்" என்று வெற்றி வீரன் போல் நாற்காலிக்கு வந்து சாய்ந்துகொண்டு படிக்கலானன்.

சிறிது நேரம் படித்தான். எதிரில் கடியாரத்தில் மணி ஏழு ஆகிவிட்டது. இரு காதுகளும் அடைபட்டு இருந்ததால் வேதனையாகவும் இருந்தது. மெதுவாகப் பஞ்சை எடுத்தான், அந்த வீணகானத்தைக் காணவில்லை. "அப்பா! ஒழிஞ்சுதுடாப்பா, ஊம், சரி; இன்னும் கொஞ்சம் படித்துவிட்டு, காபி சாப்பிடப் போவோம்" என்று சொல்லிக்கொண்டே படிக்க ஆரம்பித்தான்.

கீழே சமையலறையில் ஜானகியம்மாள் காபி போட்டுக் கொண்டிருந்தாள். அது சமயம், 'மாமி!' என்று யாரோ ஜானகியம்மாளைக் கூப்பிடுவதுகேட்டு வெளியில் வந்தாள். ஜானகியம்மாளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

முன்பின் பேசிப் பழக்கமில்லாத அந்த எதிர் வீட்டுப்பெண் கூடத்தில் நின்று கொண்டிருந் தாள். 'வாடியம்மா!' என்று அவளை வர வேற்ருள் ஜானகியம்மாள்.

"மாமி! இன்னிக்கிக் கனுவோல்லியோ? உங்களிடம் நெற்றிக்கு மஞ்சள் தீத்திக்க வந் தேன், தீத்தி விடறயளா?" என்ருள்.

"ஆகா! நன்னுத் தீத்தி விடறேண்டியம்மா, உன்மாதிரி பொண்களுக்கு நான் மஞ்சள் தீத்திவிட கொடுத்து வச்சிருக்கணுமே,"என்று அந்தப் பெண்ணுடைய கையிலிருந்த மஞ்சளை வாங்கி நெற்றியில் திற்றிவிட்டாள்.

"மாமி! நமஸ்காரம் பண்றேன்" என்ருள் அவள்.

"இருடியம்மா, வெற்றிலை சீவல் கொண்டு வருகிறேன்" என்று வேகமாகச் சென்று வெற் றிலை சீவல் தாம்பாளத்தை எடுத்து வந்தாள் ஜானகியம்மாள். உடனே அந்தப் பெண் ஜானகியம்மாளுக்கு நமஸ்காரம் செய்தாள்.

"ஆயுசோடே மகராஜியா நன்னுயிருக்கணும். சீக்கிரம் நல்ல ஆம்படையானு வரணும்!" என்று உள்ளன்போடு ஆசிர்வாதம் செய்தாள் ஜானகியம்மாள்.

அந்தப் பெண்ணும் சிரித்துக்கொண்டே வெற்றிலை சீவல் எடுத்துக்கொண்டாள்.

"ஏண்டியம்மா! நீங்கள் இதற்கு முன்னுலே எந்த ஊரிலே இருந்தயள்?" என்று விசாரிக்க ஆரம்பித்தாள் ஜானகியம்மாள்.

"வேலூரிலே இருந்தோம். அங்கே எங் கப்பா போலீஸ் டிபார்ட்மெண்டிலே வேலை யாக இருந்தார். அவரும் இப்பொதான் ஒரு மாதம் ஆச்சு ரிடையர் ஆகி; இங்கே சொந்த வீடு இருக்கிறபோது வேறு எங்கேயாவது எதுக்காகப் போறதுன்னு இங்கேயே வந் தூட்டோம். எங்களுக்கு நிலபுலமும் பூர்வீக மும் இதே ஊர்தான்"

"ஓகோ! சரிதான்" என்ருள் ஜானகியம் மாள்.

'உங்கம்மா ஆத்துலே இருக்காளோன்னே?' என்று கேட்டாள் மறுபடியும்.

"இல்லை மாமி! இன்றுதான் கொல்லையில் உட்கார்ந்துவிட்டாள். அதனுல்தான் உங்க ளிடம் மஞ்சள் தீத்திக்க வந்தேன்" என்ருள்.

"ஏண்டியம்மா, நேத்திக்கு வீணை வாசித்தது நீதானே? ரொம்ப நன்னயிருந்தது!"

"ஆமாம் மாமி, நான்தான்"

"படிச்சிருக்கியோன்னே, எவ்வளவுவரைக் கும் படிச்சிருக்கே?"

"எஸ். எஸ். எல். ஸி. பாஸ் பண்ணிவிட் டேன். அதற்கு மேலே—ஸ்கூலுக்குப் போக வேண்டாம். வீணை சொல்லிக்கோன்னு எங் கப்பா சொல்லிவிட்டார். சரின்னு இப்போ ஆத்தோடே இருந்து வீணை கத்துண்டுவறேன்"

"சரிதான், உட்காரேண்டியம்மா நின்னு ண்டே யிருக்கியே"

அது சமயம், "அம்மா! அம்மா, காபி போட் டாச்சா?" என்று கேட்டுக்கொண்டே 'டக் டக்' கென்று வேகமாக மாடிப்படிகளில் இறங்கி வந்துகொண்டிருந்தான் கோபாலன்.

தன் தாயாருடன் கீழே பேசிக்கொண்டிருந்த அந்த அழகியைக் கண்டவுடன் அப்படியே 'பிரேக்' போட்டுவிட்டன அவன் கால்கள். மேலே பேச அவனுக்கு ஒன்றும் தோன்ற வில்லை. அவளும் அவனைத் திரும்பிப் பார்த் தாள். அந்தப் பார்வையில்தான் என்ன சக்தி யிருந்ததோ! அவனைத் திக்குமுக்காடச் செய்து விட்டது. பிரமித்து நிற்பதைவிட அவனுக்கு வேருென்றும் தோன்றவில்லை!

அந்தப் பெண்ணும் தன்னையறியாமல் கீழே குனிந்துகொண்டாள்.

பிரமித்துநின்ற கோபாலனை ஜானகியம் மாள் பார்த்தாள். 'இது யாரு தெரியுமோடா கோபு? எதிர்வீட்டிலே நேற்று குடிவந்திருக் காளே அவாளாத்துப் பொண்தான் இவள்' என்று அறிமுகப்படுத்தினுள்.

"ஓகோ சரிதான்!" என்ருன் அலட்சியமாக.

"நாழியாயிடுத்து; ஆத்துலே காரியம் இருக்கு. அம்மா கோவிச்சுகுவா; நான் போய் வறேன் மாமி" என்று கிளம்பினுள்.

"ஏண்டியம்மா! உன் பேரு என்ன? அதைச் சொல்லவில்லையே!"

"என் பேரா மாமி? என் பேர் லக்ஷ்மி." என்று சொல்லிவிட்டு, கோபாலனையும் லேசாக நிமிர்ந்து ஒருபார்வை பார்த்துவிட்டு, வேகமாக மறைந்தாள்.

அவள் மின்னல்போல் மறைந்த அந்தப் பக்கத்தையே எத்தனை நிமிஷங்கள் பார்த்துக் கொண்டிருந்தான் என்பது அவனுக்கே தெரிய வில்லை.

"இந்தா, காபி ஆறிப்போறது, சாப்பிடு" என்று அவன் தாயார் சொன்னதும்தான் அவ

னுக்குச் சுய உணர்வு வந்ததுபோல் எண்ணி ருன்.

"அந்தப் பெண் யாரும்மா?" என்று அலட்சியமாகக் கேட்பவன்போல் கேட்டான். ஆனுலும் அவன் குரலில் தடுமாற்றம் தொனித்தது.

பிள்ளையினுடைய நிலைமையை ஜானகியம்மாள் ஒருவாறு அறிந்துகொண்டாள்.

"அதான் சொன்னேனே. எதிர்வீட்டிலே ஒரு போலீஸ் ஆபீஸர் ரிடையர் ஆகி, குடி வந்திருக்கிருரோல்லியோ, அவர் மூத்தபொண் தான் இவள். லக்ஷ்மீன்னு பேராம்: பேருக்கு ஏற்றாப்போலே அழகு. முகத்திலே நல்ல களை சொட்டறது! எஸ், எஸ். எல். ஸி. பாஸ் பண்ணியிருக்காளாம்; நேற்று பூரா வீணையும் பாட்டும் அமர்க்களப்பட்டது. ரொம்ப நல்ல பொண்!" என்ருள் ஜானகியம்மாள்.

"சரிதான்" என்று காபியைச் சாப்பிட்டு விட்டு மாடிக்குச் சென்றுவிட்டான் கோபாலன்.

அந்த லக்ஷ்மி கடாக்ஷம் அவன்மேல் விழுந்ததிலிருந்து அவனுடைய மனம் ஒரு நிலையிலில்லை.

*　　*　　*　　*

நாளடைவில் ஜானகியம்மாள் லக்ஷ்மியிடம் அன்பு பாராட்ட ஆரம்பித்தாள். தினந்தோறும் கோபாலன் காலேஜுக்குச் சென்றவுடன் லக்ஷ்மியைத் தன் வீட்டிற்கு அழைத்து வந்து பொழுது போக்குவாள். அவளுக்குத் தினம் விதம்விதமாகத் தலைவாரி பூ வைத்துப் பின்னிவிடுவாள். நல்ல தின்பண்டங்கள் செய்து தருவாள். அதிகம் சொல்வானேன்? லக்ஷ்மியின் குணம் பொருந்திய பேச்சும் அழகும் ஜானகியம்மாளின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டன. ஜானகியம்மாளும் தனது மாட்டுப்பெண்ணுகவே அவளை வரித்துவிட்டாள்.

## 4

தை பிறந்தும் தன் குறை தீர வழி பிறக்கவில்லையே என்று எண்ணிக் கொண்டிருந்த ஜானகியம்மாளுக்கு அந்த மாத முடிவிலேயே வழியும் பிறந்துவிட்டது.

ஜானகியம்மாள் கோபாலனுடைய சம்மதத்தை அவனைக் கேட்காமலேயே தெரிந்து கொண்டுவிட்டாள். பிறகு காலத்தைக் கடத்தாமல் வலுவிலேயே லக்ஷ்மியின் பெற்ருேர்களிடம் பெண்ணும் கேட்டுவிட்டாள். பிறகு கேட்கவா வேண்டும்? தைமாதக் கடைசியில் ஒரு நல்ல சுபயோக சுபதினத்தில் ஸௌபாக்கியவதி லக்ஷ்மிதேவியை, சிரஞ்சீவி கோபாலன் வாழ்க்கைத் துணைவியாக ஏற்ருன்.

லக்ஷ்மியைக் கைபிடித்த கோபாலன் அந்த வருஷம் பரீட்சையில் முதன்மையாகத் தேறினன். ஆனுல் பிறரைப்போல் அவன் உத்தியோகத்துக்குக் காத்திருக்கவில்லை. உடனே பம்பாயில் ஒரு பெரிய வேலை கிடைத்து விட்டது. அங்கே போய் ஊர் விஷயம், இடம் முதலியவைகளைப் பார்த்துப் பிறகு கடிதம் எழுதுவதாகச் சொல்லிவிட்டுப் பிரியா விடைபெற்றுச் சென்ருன். ஆனுல் அங்கேயே அவன் உத்தியோகம் தரிக்கவில்லை. சில நாட்களுக்கெல்லாம் பனூர்ஸ்க்கு மாற்றப்பட்டான்.

அங்கே தற்சமயம் கலாட்டாவாக இருக்கிறதென்றும், சித்திரை பிறந்து வரலாமென்றும் தாயாருக்குக் கடிதம் எழுதிவிட்டான் கோபாலன்.

மேலும் அவர்கள் பிரிவை அகலப்படுத்துவதற்காக ரெயில்வே ஸ்டிரைக், தபால் ஸ்டிரைக் எல்லாம் சேர்ந்து கொண்டன.

நாட்கணக்குகள் மாதக் கணக்காகிவிட்டன. சித்திரையும் போய்விட்டது. ஜானகியம்மாளும் பனூர்ஸ்க்குப் போகமுடியாமல் ஆகிவிட்டது. கடிதங்களும் சிலசமயம் போய்ச் சேர முடியாமல் சில சமயம் திண்டாட்டம். மாமியாரும் நாட்டுப்பெண்ணும் மிகவும் வாடினர்.

## 5

மாமனுர் நடராஜ அய்யர் மாப்பிள்ளை கோபாலனுக்கு ஆடிப் பண்டிகைக்கு வரும்படி தந்தி அடித்துவிட்டு விபரமாகக் கடிதமும் எழுதிப்போட்டார். ஆடிப் பண்டிகையும் ஆவணியவிட்டமும் அதே மாதத்தில் வருவதாகவும், அத்துடன் ஆருமாசமும் வைத்துக் கொள்வதாக உத்தேசமென்றும் கடிதம் எழுதினுர்.

"எப்படியாவது ஒரு வாரத்திற்கு லீவு எடுத்துக்கொண்டு வந்து சேருகிறேன்" என்று கோபாலனும் பதில் தந்தி அடித்துவிட்டான் மாமனுருக்கு.

மாமனுர் நடராஜ அய்யரும் ஆடி ஆருமாசத்துக்கு வேண்டிய சீர் வரிசைகளை எல்லாம் மிகவும் ஜருராக ஏற்பாடு செய்தார்,

லக்ஷ்மியின் முகத்தில் ஒரு தனி பிரகாசம் உண்டாயிற்று. ஆடிக்கு வரும் கோபாலனை நினைத்து ஆடிக் கொண்டிருந்தாள், அவளுடைய ஆனந்தம் எல்லையில்லாமல் இருந்தது.

ஆடிப் பண்டிகைக்கு ஒரு வாரம்தான் இருந்தது. ஆனால் கோபாலன் ஒரு வாரத்துக்கு முன்னதாக வருவதாகவே விபரமாகக் கடிதம் எழுதியிருந்தான். புறப்படும் தேதி, நேரம், வண்டி எல்லாவற்றையும் குறிப்பிட்டு மாமனுருக்குத் தந்தியும் கொடுத்து வைத்தான். மாமனார் நடராஜ அய்யரும் எதிர்பார்ப்பதாகப் பதில் தந்தியும் கொடுத்துவிட்டார்.

அன்றுதான் மாலை மெயிலில் கோபாலன் வருகிறான். நடராஜ அய்யர் மிகவும் பரபரப்பாக இருந்தார். முன்னதாகவே ஸ்டேஷனுக்குக் காரை அனுப்பி வைத்தார்.

வெகு நேரமாயிற்று. ரயில் வண்டி வரும் வேளையும் கடந்துவிட்டது. ரயிலுக்கு அனுப்பியிருந்த காரையும் காணும். எல்லோரும் உள்ளுக்கும் வாசலுக்கும் நடை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் காரும் வந்துவிட்டது. வெறும் காராக வந்ததைக் கண்டு அய்யர் ரொம்பவும் மனமுடைந்தார். வாசலுக்கு ஓடிவந்தார். காரிலிருந்து இறங்கிய டிரைவர் படையாச்சியைக் கண்டு, "ஏண்டா! மாப்பிள்ளை வரலியா?" என்று அதட்டிக் கேட்டார்.

"இல்லிங்க சார்" என்றான் ஒடுக்கத்துடன்.

"என்ன சரிப்பாகப் பார்த்தாயா—இல்லை அடையாளம் தெரியாமல் விட்டுட்டு வந்து விட்டாயா"

"என்ன ஸார்! நம்ம எதிர் வீட்டிலேயிருந்து நல்லாப் பழக்கமான நம்ம சின்ன அய்யரைத் தெரியாதா எனக்கு? எல்லா வண்டியையும் நல்லாப் பார்த்துவிட்டேன், காணலீங்க"

நடராஜ அய்யர் அப்படியே சோர்ந்து போய் உள்ளே நுழைந்தார். எப்படியும் இன்ன தேதி இன்ன வண்டிக்கு நிச்சயமாக வருகிறேன் என்று விபரமாகத் தந்தி அடித்திருந்தான் கோபாலன். கடைசியில் அவன் வராது போனது அவருக்கு மிகவும் ஏமாற்றமாகிவிட்டது.

உள்ளே வந்த அப்பாவின் முகத்தைக் கண்ட லக்ஷ்மிக்கு விஷயம் விளங்கிவிட்டது, அவளுடைய நெஞ்சத்தின் ஆவலை அளவு கோலிட முடியாமல் அள்ளிக்கொண்டிருந்தான் கோபாலன். உடைந்து போன உள்ளத்துடன் ஒரு பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டு விட்டாள்.

"அசடே, இதற்காக வருத்தப்படுவாளோ,? பண்டிகைதான் இன்னும் நாலைந்து நாள் இருக்கு. அவன் எப்படியும் வந்து விடுவான், கவலைப்படாதே. அவனுக்கு லீவு கிடைச்சுதோ கிடைக்கலையோ, இன்னிக்கு நாளைக்கு ஏதாவது லட்டர் எழுதினாலும் எழுதுவான், வீணா மனசை அலட்டிக்காதே. போ, போய் முகத்தை அலம்பி நெத்திக்கு இட்டுக்கோ" என்று மாட்டுப் பெண்ணைத் தேற்றினாள் ஜானகியம்மாள்.

மறுநாள் கோபாலனிடமிருந்து ஒரு தந்தி வந்தது. தந்தி என்றவுடன் எல்லோரும் பறந்துகொண்டு வாசலுக்கு ஓடிவந்தார்கள். "லீவு இன்னும் உத்தரவாகவில்லை. எப்படியும் ஆடிக்கு முதல்நாள் வந்துசேருகிறேன்." "சரிதான், இன்னும் லீவு கிடைக்கவில்லை அவனுக்கு. நானும் அப்படித்தான் எண்ணினேன். அதுக்கு அவனும்தான் என்செய்வான் பாவம்!" என்றார் நடராஜ அய்யர்.

* * * *

ஆடிப் பண்டிகைக்கு முதல்நாள். அன்று முழுவதும் சளைக்காமலேயே ஒவ்வொரு வண்டியையும் முற்றுகையிட்டார் நடராஜ அய்யர், கடைசி வண்டிக்கும் கோபாலன் வரவில்லை.

மறுநாள் பொழுது விடிந்தது. ஆடியும் பிறந்தது. ஒவ்வொரு குடும்பத்திலும் ஆடிக்கு வரும் புது மாப்பிள்ளைகளை வரவேற்று, சந்தோஷத்தில் ஆடிக்கொண்டிருந்தனர். ஆனால் ஆடிக்குக் கோபாலன் வராமல் ஏமாற்றியதை நினைத்து—மிகவும் ஏங்கி வாடிப்போனாள் லக்ஷ்மி.

"பார்த்தியளா...? கடைசியில் இந்தப்பிள்ளை வரவேயில்லை ......லக்ஷ்மி முகத்தைப் பார்க்கக் கூடச் சகிக்கவில்லை. அப்படியே ஏங்கிப்போய் விட்டாள். பாவம்! சம்பந்தியம்மாளும் ரொம்ப வருத்தப்பட்டாள்."

"அதுக்கு நாம் என்னடி பண்றது? அவனும் வறேன்னுதான் பதில் தந்தி கொடுத்தான். என்ன காரணமோ தெரியவில்லை... ஒருகால் வண்டிதான் தவறிப்போச்சோ என்னமோ..." என்றார் நடராஜ அய்யர்,

"வேறே உடம்புக்கு கிடம்புக்கு என்னமோ ஏதோ......"

"அதெல்லாம் ஒன்றுமிருக்காது; அசடு மாதிரி பேசவேண்டாம். வண்டிதான் தவறிப் போயிருக்கும்...... இல்லே, லீவு கிடைக்காமல் இருந்திருக்கலாம்......"

## 6

காலை மணி ஒன்பது இருக்கும். நடராஜ அய்யர் வீட்டுக் குழந்தைகள் அடுத்த

வீட்டில் புது மாப்பிள்ளைக்கு ஆருமாதம் கொண்டாடுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது நடராஜ அய்யர் வீட்டு வாசலில் கார் வந்து நின்றது. குழந்தைகள் "அத்திம்பேர் வந்துவிட்டா......ர்... அத்திம்பேர் வந்தூட்டா......ர்" என்று ஒரே மூச்சில் சத்தம் போட்டுக்கொண்டு உள்ளே ஓடின. ஸ்னானம் செய்துகொண்டிருந்த நடராஜ அய்யர் அப்படியே வாசலுக்கு அவசர அவசரமாக ஓடிவந்தார். அவரைப் பின்பற்றி எல்லோரும் ஓடிவந்தார்கள்.

சூட், ஹாட், பூட்ஸுடன் துரை மாதிரி உள்ளே நுழைந்தான் கோபாலன். அவனுடன்



ஆங்கில உடை தரித்த இன்னொரு யுவனும் கூட நுழைந்தான்.

"வாருங்கோ... மாப்பிள்ளே! ஏன் இப்படி....! வண்டி லேட்டா...... என்ன? இப்போ ஏது

வண்டி......?" என்று கேட்டுக்கொண்டே வர வேற்றுர் நடராஜ அய்யர்.

"வாடாப்பா கோபு!" என்று தழுதழுத்த குரலுடன் பாசத்தோடு பிள்ளையை வரவேற்ருள் ஜானகியம்மாள்...

கோபாலனை அள்ளிப் பருகுபவள்போல—தன் மலர்க்கண்களால் வரவேற்ருள் லக்ஷ்மி.

"எனக்கு லீவு கிடைக்கத் தாமதமாகிவிட்டது. கடைசியில் பிரயாணத்தையே நிறுத்தி விட்டேன். ஆனல் இதோ இருக்காரே—இந்த நண்பரால்தான் நான் இன்று இங்கே வர முடிந்தது. இவர் இங்கு ஒரு கம்பெனியைப் பார்வையிடுவதற்காக ஏரோப்பிளேனில் கிளம்பினர். என்னையும் அழைத்து வந்துவிட்டார். இவர் உதவியில்லாது போனல் நான் இன்று இங்கே வரமுடியாது... முதலில் இவரை உபசரியுங்கள்...!" என்ருன் கோபாலன்.

உடனே எல்லோரும் வந்தவரை உபசரிக்க ஆரம்பித்தனர்.

* * *

அன்று பகல் மணி மூன்று இருக்கும். மாடியறையில் கோபாலன் பேப்பர் படித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது மாடிப்படியில் யாரோ ஏறிவரும் சப்தம்கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

குனிந்தபடியே அன்ன நடை நடந்து வந்து எதிரில் நின்ருள் லக்ஷ்மி. அவள் கையில் டிபன் தாம்பாளம் இருந்தது.

"அடடா! ஏன் இவ்வளவு வெட்கம்... ரொம்பக் குனிந்தால் கழுத்து வலிக்காது?..." என்ருன் கோபாலன்.

அவள் பதில் பேசவில்லை. குனிந்தபடியே மேஜைமீது டிபனை வைத்துவிட்டு நின்ருள்.

"எங்கே! இப்படிக் கொஞ்சம் நிமிர்ந்து பார்..." என்று எழுந்திருந்தான்.

கொஞ்சம் நிமிர்ந்தாள் லக்ஷ்மி,

"ஊம்... இப்படித்தான்...! இன்னும்... கொஞ்... சம்! ஊம்... அப்படியே இரு..." என்று அவள் முகவாய்க்கட்டையைப் பிடித்தான்.

உடனே அவள் 'களுக்' கென்று சிரித்தாள்.

"உங்களுக்குத்தான் இத்தனை நாட்களாக என்னுடைய நினைப்பே இல்லையே!" என்று கடிந்து கொண்டாள் அன்புபொங்க.

"நினைப்பு இல்லாமல்தான் பறந்து வந்தேனே.........?" என்று அவளுடைய மலர்க் கரங்களை மெதுவாகப் பிடித்து இழுத்து அணைத்துக்கொண்டான். அதிலிருந்து விடுபட அவளுக்கு மனமில்லை,

"ஆமாம், பஞரீஸிலிருந்து பறந்து வந்தீர்களே! எனக்கு என்ன கொண்டு வந்தீர்களாம்......?"

"இதோ என்னையே உனக்குக் கொண்டு வந்து விட்டேனே—நான்தான் உன் பரிசு—இருந்தாலும் இந்த ஆடிப் பண்டிகையும் ஒரு நல்ல பண்டிகைதான் இல்லையா......?"

"அதுதான் இல்லை......பொல்லாத பண்டிகை......!"

"ஏன்.........?"

"நல்ல பண்டிகையாயிருந்தால், என்னையும்—எங்கள் எல்லோரையும் ஒரு ஆட்டம் ஆட்டியிருக்குமா?" என்ருள் லக்ஷ்மி தன் கயல் விழிகளை உருட்டிக்கொண்டே.






# டால்டாவில் தயாரித்த ருசிமிக்க ஜவ்வரிசிக்கூழ்

உடலுக்கு "உஷ்ணத்தை" தரும் மாவுசத்து ஜவ்வரிசியில் ஏராளமாக இருக்கிறது. ஜவ்வரிசி எளிதில் ஜீரணமாகக்கூடியது. தவிர உங்கள் குழந்தைகள் இந்தக்கூழை மிகவும் விரும்புவார்கள். ½ கப் ஜவ்வரிசியை 1 மணி நேரம் தண்ணீரில் ஊறவைக்கவும். 1 கப் வடிகட்டின கெட்டியான வெல்லப்பாகுடன், சுக்கு, ½ தேக்கரண்டி உப்பு இவைகளை சேர்க்கவும். தெளிவாகும்வரை பாகையும் ஜவ்வரிசியையும் அடுப்பில் வைத்துக்காய்ச்சவும். பாத்திரத்தை குளிர்ந்த தண்ணீரால் கழுவினபின் அதில் கூழை ஊற்றி உறைய வைக்கவும். பிறகு ½ கப் வெல்லத்துடன் 2 பெரிய ஸ்பூன் டால்டா சேர்த்து கொதிக்கவைக்கவும். அதில் 3 பெரிய ஸ்பூன் தண்ணீர் சேர்க்கவும். அடுப்பிலிருந்து இறக்கி 2 பெரிய ஸ்பூன் அளவு எலுமிச்சஞ்சார் சேர்க்கவும். கூழை பாத்திரத்திலிருந்து அகற்றி, பாகை அதன்மேல் ஊற்றி, முந்திரிப்பருப்பு முதலானவைகளை மேலே தூவவும். டால்டாவில் தயாரித்த உணவு சூடாகவோ, ஆறியோ எப்படி இருந்தபோதிலும் ருசிமிக்கதாய் இருக்கும். டால்டா ஒரு சுத்தமான தாவரக்கொழுப்பாகையால் அது அதிகநேரம் சூட்டைத்தாங்குகிறது—எனவே, உணவுகள் ஒழுங்காக முழுவதும் பக்குவமாவதற்கு போதுமான சாவகாசம் அளிக்கிறது.

உஷ்ணமான வேளைகளில் அருந்த
**ஆரோக்கியமளிக்கும் பானங்கள்!**

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது
என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!

**தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்**
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1



விடுவதா? அதுவும் ஸோமநாதருடைய திருவிக்கிரஹத்தை உடைக்கப்போகும் ஒரு யவன னையா? ஏ! குலத்துக்குப் பளுவாய் வந்து விளைந்தவர்களே! நீங்கள் இங்கேயே இருங்கள்—கோழைத்தனத்தால் கொண்ட கீர்த்தியை உண்டு வாழுங்கள். என் வாழ்நாள் முழுவதும் ஸோமநாதரின் ஜயம் கூவி வந்திருக்கிறேன். என் உயிருள்ளவரை அந்தக் கடவுளுக்கு ஒரு தீங்கும் ஏற்பட விடேன்.'

"கோட்டைக் காவலாளன் இதைக்கேட்டு, குழறும் நாவுடன் சொல்ல ஆரம்பித்தான்—'பாபா' சத்துருவோ எண்ணிக்கையில் அதிகமாயிருக்கின்றனர். அவர்கள் சேர்ந்து செருக்கினுலே நாம் எல்லாம் பறந்துவிடுவோம்' ஆம், அவன் சொன்னது முற்றிலும் உண்மைதான். ஆனுல் கோகாபாபாவா இதை எல்லாம் கேட்டுப் பொறுக்கிறவர்! அவர் அப்பொழுது சீறி எழுந்த எழுச்சியில் அங்கே கோட்டைக் காவலன் தலை சிதறிவிடப் போகிறதோ என்று பயந்துவிட்டேன்.

"சிங்கம்போல் குரல் கொண்டு அவர் உறுமினுர்: 'முட்டாளே! எதிரிகள் எண்ணிக்கையைக் கண்டு அஞ்சுவது வீரமல்லவடா' இது கோழைகள் கூறும் சொல். இன்று என்னுடைய முற்றத்தைத் தாண்டி யவனன் ஓடிக்கொண்டிருக்கிருன்...இனி நீயும் நானும் உயிருடன் இருக்க என்ன உரிமை இருக்கிறது? ஸோமநாதர் கொடுத்த கட்டளை நிறைவேறிற்ரு? அதை நழுவவிட்டு நமக்கு மூச்சை வைத்துக்கொள்ள என்ன உரிமை? ஸோமதேவர்தான் நம்மை இங்கே அனுப்பினுர். அவரேதான் இன்று நம்மை அழைக்கிருர். புறப்படு. ஏற்பாடு செய்.' இப்படிக் கட்டளை யிட்டுவிட்டு, பாபா தம் வாளை உருவிக்கொண்டார். அதுவும் இருட்டினுல் சூழப்பட்டுத் துடித்துப் புரளும் மின்னலைப்போல் ஒளித்து வெளியேறிற்று. 'ஆகா! ஆகா! வீரத்துக்கு வாழ்த்து!' என்று சொன்ன எனக்குச் சற்றுநேரம் சுயநிலையே மறந்தது. கோகாபாபாவைப் போன்று வார்த்தை சொல்லத்தான் எந்த வீரன் பிறந்திருக்கிருன்? பிறகு என்ன! எல்லாச் சகோதரர்களும் பிள்ளை பேரர்களும் தங்கள் வாளை உருவி ஏந்தினர். பெண்களின் வளையல் எல்லாம் கலித்து ஒலித்தன. நானும் விடாமல் சிவகவசம் சொன்னேன்.

"ஓடு! ஓடு!" என்ற குரல் நாலாபக்கங்களிலும் ஓட ஆரம்பித்தது. 'கிளம்பு' என்று உத்தரவிடப் பல வாத்தியங்கள் வாய்திறந்து ஒலி கொடுத்தன. குதிரைகளும் ஒட்டகங்களும் சந்தோஷமாகக் கனைத்தன. குங்குமப்பூ, குங்குமம் அங்கங்கே அலங்கரிக்க ஆரம்பித்தன. சாமந்தா! தேவதைகள்கூடப் பார்க்கக் கொடுத்துவைக்காத அந்தச் சௌஹான் வீரர்களின் படை எழுச்சியை நான் பார்த்தேனடா! என் கண்கள் அதற்குக் கொடுத்து வைத்திருந்தன அப்பா! ஆனந்த நீர் நிறைந்த அந்தக் கண்கள்! இவர்களையும் கண்ட அந்தக் கண்கள் வானத்தில் நின்ற சிவனும் பார்வதியும் பூமாரி பெய்வதைக் காணவைத்துக் களித்தன.

"கோகாபாபா ஜரிகை வேலைப்பாடமைந்த மேலங்கிகள் தரித்து, தலையில் குங்குமப்பூ நிறம் கொண்ட தலைப்பாகை யணிந்து மார்பிலே சிவந்த பூக்களாலான மாலையைத் தரித்துக் கொண்டார். சௌஹான் வம்சத் தோன்றல்களும் இடுப்பில்கச்சையணிந்து நின்றனர். நாள் பூஜைத் தட்டுத் தயார்செய்து கடவுளுக்கு அர்ச்சனை செய்தேன். கேஸரியா (சண்டைக்கு எழும்) வீரர்களுக்குக் குங்குமப் பொட்டு இட்டேன். கடவுள் ஆசியைக் கூறினேன். சூரியன் சந்திரன் இருக்கும்வரை கோகாராணுவின் புகழ் மங்கக்கூடாதென்று வேண்டினேன். வாயிலருகே சென்று கோகா பாபா என்னை அழைத்து எல்லோரும் கேட்கும்படி, 'நந்திதத்தரே! தங்கள் தந்தை எனக்குப் பொட்டிட்டு முடியணிவித்தார். இன்று சிவனுலகு செல்ல எனக்கு நீங்கள் வெற்றி மாலை சூட்டியிருக்கிறீர்கள். பிராமண தேவா! எனக்கு ஒரு வாக்குக் கொடுங்கள். சௌஹான் வீரர்கள் உயிர் துறந்ததும் அவர்கள் மனைவிகளை அக்னிதேவன் கையில் ஒப்புவித்துவிடுங்கள்.' என்று சொல்லிய அவர், 'என்ன பெண்களே?' என்று அவர்களை விளித்துக் கூவினுர். அவர்கள் குங்குமம் அக்ஷதைகள் ஏந்தி ஜன்னல்களின்மேல் நின்றுகொண்டிருந்தனர். 'என்ன எங்களுடன் கைலாசம் செல்லத் தைரியம் இருக்கிறதா?' அவர் குரலில் பெருமை வீரம் பேசி மகிழ்ந்தது. அவர் ஏதோ விவாக மண்டபத்தில் வேண்டியவர்களுக்கு அழைப்புக் கொடுப்பதுபோல் பேசினுர். தாமரைமலர் போன்ற அந்த மங்கையர்கள் முகங்களில் அழைப்பின் இணக்கம் ஆனந்தமாய்ப் பரிணமித்துப் பரவிற்று. எல்லாக் கண்களும் இன்பக் கண்ணீர் சொரிந்து நின்றன. வீரர்கள் "ஜய் ஸோம்நாத்!' என்று வெற்றி முழக்கம் செய்தனர்.

"வாயிற் கதவுகள் திறந்தன. எழுந்துவரும் சூரியன் பொன்னிறக் கிரணமலர்களை இடை இடம்விடாமல் தூவ ஆரம்பித்தான். சௌஹான் வீரர்களுடைய உடைகள் அவைகளை உண்டு மின்னின. அவர்கள் உருவிய வாட்கள் அந்தக் கிரணங்களை வாரிச் சிதறச்செய்து எதிரிகளின் கண்களைத் தாக்கின. சங்கிலி யணிந்த குதிரைகளும் ஒட்டகங்களும் இந்த வீரர்களைத் தாங்கி, கோட்டையிலிருந்து கிழே இறங்கின. எல்லோருக்குமுன் நான்கு கஜ தூரத்தில் சௌஹான் முடிமணி பாபா மேதா

போய்க் கொண்டிருந்தார். நானும் கோட்டை மேலிருந்து இந்தக் கிழக்கண்களால் அந்த அழகைப் பார்த்துக் கொண்டுதானிருந்தேன். பாலவனத்தின் தலைவர் தம் பெருமையைக் காப்பாற்ற, தம் பரிவாரங்கள் முழுவதையும் பலியிட இட்டுப் போய்க்கொண்டிருந்தார். கோகாபாபா! நீ தன்யன்! பெருமைக்கு முற்றிலும் உரித்தானவன்! தேவதைகளும் சந்தன மழை பொழிந்தனர். கோகாதுர்க்கமே குங்குமப் பொறிகளை ஏந்தி வலிவுபெற்றுக் கொண்டிருந்தது. சந்தனக்குழம்பு தெளித்தது. அது தம்மேல் பட்டவுடன் கோகாபாபா மீண்டும் என்னைத் திரும்பிப் பார்த்தார். பெருங்காலம் வாழ்ந்து பெருமைபெற்ற அந்த முகம்—என் பக்கம்—அவருடைய குருவின் பக்கம்—உள்ளின்பத்தின் எதிரொளி கொண்டு இனிய நகையுடன் பார்த்துக்கொண்டிருந்தது.

திரும்பிய அவர், "இதுவரைநான் வாழ்ந்தாகி விட்டது. இன்று நானே வீரகதியை வரவேற்று அணையப் போகிறேன்' என்றார். என் தொண்டை அடைத்தது. 'இல்லை—ராணா! உன் பெருமை வாழ்க!' என்றேன்.

"கீழே நின்ற யவனர் சேனையும் இந்தத் தேவருக்குரிய நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டு இன்பமடைந்து மனது குளிர்ந்து வாய்விட்டு வாழ்த்தவும் தொடங்கிற்று. முதலில் எந்தக் காரணத்துக்காகக் கோகாபாபா ஒதுங்கி ஓடும் இந்தச் சேனையைத் துரத்த எண்ணமிட்டார் என்று ஒருவருக்குமே புரியவில்லை. கொஞ்ச நேரம் சென்றுதான் சௌஹான் வீரர் கொல்லவோ சாகவோ துணிந்து அணிவகுக்கிறார் என்று கண்டனர். யவனர் சேனையில் அல்லாஹோ அக்பர்! என்ற முழக்கம் கிளம்பிற்று. பச்சைப் பாகை அணிந்த சிவந்த தாடிகொண்ட அந்தக் கஜினி அமீர் யானைமேல் சுழன்று கட்டளைகள் பிறப்பிக்க ஆரம்பித்தான். சேனையும் லக்ஷ அஸ்திரங்களால் சௌஹான் வீரர்களுக்கு வரவேற்புத் தர ஆரம்பித்தனர். கோகாபாபா தலையசைத்தார். கடலின் ஆத்திரம் கொண்ட அலைகளில் செல்லும் படகைப்போல அவரும் மேலேறத் தொடங்கினர். அவருடைய கர்ஜனையைக் கோட்டைகூட அவருடைய கர்ஜனையைக் கோட்டைகூட ஆவலுடன் ஏந்தி, தான் சரியாகப் புரிந்துகொண்டதற்கு அடையாளமாகத் திருப்பி எதிரொலி தந்து காட்டிற்று. அவர் கை திரும்பிய இடம் எல்லாம் மனிதர் அற்று விழுந்தனர். அவர் குங்குமப்பூ நிறப்பாகை அந்தக் கூட்டத் துள்ளும் ஒளித்து மின்னி மேலேறிச் செல்வது நன்றாய்த் தெரிந்து—கொஞ்சம் மறைந்து—மறுபடியும் தெரிந்தது......"

என்று சொல்லி வந்த நந்திதத்தன் கண்கள் அவனை ஏமாற்றி அவன் உள்ளம் தழுதழுத்த குரல் கதையைத் தொடரவிடாமல் அழ ஆரம்பித்துவிட்டது. சாமந்தன் பித்துப் பிடித்தவன்போல் கேட்டுக்கொண்டே இருந்தான்.

"மின்னிற்று...அப்புறம்...ஆம்......விழுந்து விட்டது. ஆயிரக்கணக்கான எதிரிகள் தங்கள் வாட்களால் அவரை வெட்டி வீழ்த்தி விட்டனர். முடிந்துவிட்டது. கோகாபாபாவைச் சிவபெருமான் கைலாசத்துக்கு அழைத்துச் சென்றுவிட்டார். எனக்கு என் கடமை பாக்கியிருந்தது. ஆகவே கீழிறங்கி, ஸோமநாதர் கோயிலுக்குச் சென்றேன். அங்கே எல்லோரும் ஒருங்குகூடியிருந்தனர். சில கடைக்காரர்களும் சேவகர்களும் நடுங்கியவாறே நின்றுகொண்டிருந்தனர். அவர்களைப் பின் வாயில் வழியால் முதலில் வெளியேற்றினேன். தானே இறக்கத் துணியாத கோழையைக் கொன்று அல்லது கொலைக் களத்துக்கு அனுப்பி என்னலாபம்?

"என் பையனுக்கு ஆயுதம் தாங்கிச் சமர் புரியத் தெரியாது. இருந்தாலும் அவனையும் கோகாபாபாவுடன் அனுப்பியிருந்தேன். உயிருடன் இருக்கிறவர்களுக்கு மோக்ஷம் தரும் நாங்கள் உயிர் விடுகிறவர்களுடன் இருக்கத் தயங்கலாமா! கோட்டையில் நான் மட்டும் தனித்து விட்டேன். நெஞ்சில் கல்லைத்தாங்கி என் கடமையைச் செய்தாகவேண்டும். குழந்தாய்! அப்பா! மகனே! எனக்கு இந்த முடிவுதான் நேரும் என்று நன்றாய்த் தெரியும்!" என்று சொல்லி நந்திதத்தன் பெருமூச்சு விட்டான். அவன் குரல் கனத்தது. அவன் அழவே ஆரம்பித்து விட்டான். துக்கத்தின் பெரிய மலையின் கீழ்க் கிடந்து நசுங்கிய சாமந்தனை அவன் கண்ணீர்கூடக் கைவிட்டுக் கலங்க வைத்தது.

"பிறகு, அப்பா! நான் இக் கிழக் கைகளால் என் கடமைகளைச் செய்தேன். கோயில் முற்றத்தில் சந்தன மரங்கள் கொண்டு சிதை அடுக்கினேன். அப்பா, எந்தச் சிறுமிகளுக்கு நான் என் கையால் விவாகம் செய்து வைத்தேனோ, எந்த அழகிய யுவதிகளுக்குச் சீமந்தம் முதலிய மங்கள காரியங்கள் செய்து வைத்தேனோ, யாருடைய வழி விளக்குகளுக்கு நானே வித்யாரம்பம் செய்து வைத்தேனோ அந்தச் சிறுமிகளை, அழகிகளை, மெல்லியலார்களை நன்கு உடுத்து வெளியேற்றினேன், கால் சிலம்பு ஒலிக்க, காற்றும் கண்டு நடுங்க, அவர்கள் பூமியின்மேல் அஞ்ச நடந்து, எனக்கெதிரே வந்து நின்றனர், என் காலடியில் வீழ்ந்து பணிந்தனர். அவர்களைக்கண்டு கண்ணிலே குமுழியிட்டுக் கிளம்பிய நீர் என் பார்வையை மறைத்தது. எப்படியோ அவர்கள் இளநெற்றியைக் குங்குமம் சந்தனம் கொண்டு

அலங்கரித்து மணமூட்டினேன். அவர்களும் அக்ஷதை பூஎடுத்து, சூரியனைப் பூஜித்தனர். குலதேவதைகளை ஆராதித்துக் கொண்டனர். பிறகு காதலனுடன் சேரச்செல்லும் கன்னியர் போல் களிகாட்டும் முகங்கள் தாங்கி, தங்கள் தங்கள் கணவர்களுடன் உடன்கட்டை ஏறச் சித்தமாகி என்னைத் தூண்டினர். என் மருமகளும் என் காலில் விழுந்தாள்..." நந்திதத்தன் பெருமூச்சு அவன் வாயை அடைத்துச் சீறி வெளியேறிற்று,

"பிறகு அந்த வீரவனிதைகள் தங்கள் இனிய தொண்டையின் குயிற்குரலால் பாடிக் கொண்டவாறே சிதையின் மீதேறி அமர்ந்து கொண்டனர். அட, கடவுளே! சம்பூ! நான், அவர்கள் குரு, அவர்களுடைய தந்தை—என் கையால் தீ வைத்தேன். என் உடல் ஒவ்வொரு அவயவமும் அலறி நடுங்கிக் கொண்டிருந்தது. என் கண்கள் எதிரே ஸோமநாதர், என் கடமை இரண்டுமே உரு எடுத்து நின்றனர்.........சாமந்தா! நெருப்புப்பற்றி எரிய ஆரம்பித்தது—பர, பர சப்தத்துடன். கடவுளே! அந்த வீரம், அந்தச் சௌந்தர்யம்—அக்னியும் தயங்கியே எரிக்க ஆரம்பித்தான்—ஆவலுடன் தழுவினான். முகம் சிவக்க அவர்களை அணைந்துகொண்டான். அவர்களுடைய அந்த நிலையைப் பார்க்க அஞ்சினேன் நான். அவர்கள் வேதனைக் குரலைக் கேட்க என் காதுகள் பயந்தன. நான் ஓடினேன்—ஓரே ஓட்டம். கோயிலுக்குள் சென்று சுவாமி பாதத்தில் தலையை மோதிக்கொண்டேன். நன்றாய் அலறி அழுதேன். என் உயிரையே விட முடிவு செய்தேன். ஆனால்......அப்பா! உன் தாத்தா என்னிடம் வாக்குப் பெற்றிருந்தார். அது என் சுதந்திரத்தைப் பறித்துவிட்டது, கடவுளே! கருணைக்கடலே! என்னை ஏன் நீயாக அந்த நிமிஷம் என்னை அழைத்துச் சென்றிருக்கக்கூடாது?" மீண்டும் நந்திதத்தன் தன் தலையைப் பூமியில் அடித்துக்கொண்டு அழ ஆரம்பித்தான்.

"அப்பா! பிறகு மறுபடி நான் கோட்டை மீது ஏறினேன். அங்கிருந்து கீழே பார்த்தேன். ஏழு நாழிகை நேரங்களுள் கோகா பாபாவின் வீரர்களுள் ஒருவராவது இருந்த இடம் தெரியவில்லை. ஒவ்வொரு வீரனும் கற்பனைக்கும் எட்டாத வீரச்செயல்கள் புரிந்து கைலாசத்தை அடைந்துவிட்டிருந்தான். யவன சேனையின் ஒரு பகுதி கோட்டையின்மேல் ஏற முயன்றுகொண்டிருந்தது. சரி, நம்முடைய உயிருக்கும் உலைவைக்க ஏற்பாடாய்விட்டது என்று எண்ணிக்கொண்டேன். சுவரில் பின்புறம் வழியாகச்செல்லும் சுரங்கத்தின் ஞாபகம் வரவே அதைச் சென்றடைந்து அதில் நுழைந்துகொண்டேன். குதித்துக் கூத்தாடிக்கொண்டு அல்லாஹோ அக்பர் என்று முழங்கிக்கொண்டு யவன சேனையினர் ஏறி வந்தனர். அவர்கள் திறந்த வாயில் வழியாகவும் யாராவது உள்ளிருப்பார்களோ என்ற பயத்துடன் மிக மெதுவாக அடிமேல் அடிவைத்து நடந்து வந்தனர். ஆனால் உள்ளே இருந்த கேள்வி கேட்பாரற்ற தன்மையைக்கண்டு அவர்கள் வாயைப் பிளந்தனர். உங்கார சத்தத்துடன் அவர்கள் நாற்புறமும் பரவி, கோயிலின் முற்றத்தில் வந்தனர். நான் இடுக்கு வழியாகப் பார்த்துக்கொண்டிருந்தேன். அவர்கள் அங்கு எரிந்துகொண்டிருந்த சிதைகளைக் கண்ணுற்றனர். அவைகளில் உடலை





அக்கினிக்குத் தத்தம் செய்துவிட்டு அமரத்துவம் அடைந்துகொண்டிருக்கும் அறுநூறு வீரப் பெண்மணிகளைப் பார்த்தனர். இதைக் கண்ட அவர்கள் வெருண்டோட ஆரம்பித்தனர். ஆனால் அவர்களில் இருவர் மட்டும் தங்கி, கோயிலுக்குள் சென்றனர். அவர்களுள் ஒருவன் விமானத்தின் மீதேறிக் கொடியை எடுத்து உடைத்து எறிந்தான். மற்றொரு சனீசுவரன் நம் கடவுளுடைய லிங்கத்தை இரண்டாய் உடைத்தெறிந்தான்." என்று சொல்லிவிட்டு அந்த ராஜகுரு 'ஏ கடவுளே— இதையெல்லாம் பார்ப்பதற்கு எதற்காக என்னை உயிருடன் வைத்தாய்?' என்று அலறி அழ ஆரம்பித்துவிட்டார்.

"இந்தப் பிரேத உலகத்தில் நான் ஒருவன் தான் உயிருடன் இருந்தேன். என் உயிரையும் விடமுடியாத நிலையில் நான் அங்கிருக்க இயலவில்லை. ஆகவே ஓடினேன் அவ்விடத்தைவிட்டு. வழியில் ஓடிக்கொண்டிருக்கும் சில வழிப் போக்கர்கள், 'பாவம் ஏழைப் பிராம்மணன்' என்று கண்டு, என்னைப் பப்பரியா கொண்டுவந்து சேர்த்துவிட்டுப் போயினர்."

ஒருவாறு முடித்தான் நந்தி தத்தன்.

"பிறகு யவனர் சேனை?......"சாமந்தன் வினவினான்.

"யவனன் சேனை பப்பரியா பக்கம் வரவில்லை. ஆனால் சபாதலக்ஷம் சென்று நேரடியாகப் போய்விட்டது. ஆனால் சிலர்மட்டும் இங்கே வந்தனர். இல்லாவிடில் சுவாமியை யார் உடைக்கிறார்கள். நான் இங்கேயே தங்கி விட்டேன். நீங்கள் யாராவது இங்கே வருவீர்கள் என்ற ஒரு நம்பிக்கை என்னை இங்கே வைத்துக்கொண்டிருந்தது."

"அப்படி என்றால் கோகாபாபாவின் குடும்பத்தில் இப்பொழுது......" என்று ஆரம்பித்த சாமந்தன் வார்த்தைகளை அவன் உள்ளிருந்து அலறி எழுந்த பெருமூச்சுத் துண்டித்து விட்டது.

"அப்பா, ஆம், நீ ஒருவன். உன் தந்தை....."

"அவருக்கு என்ன ஆயிற்றென்று அந்தக் கடவுள்தான் அறியவேண்டும்." என்று சொன்ன அந்தக் குழந்தையைத் தாவி அணைந்து நந்திதத்தன் கட்டிக்கொண்டான். இருவரும் இதயம் விட்டு அழ ஆரம்பித்தனர்.

## அத்தியாயம்—8

# உறுதி வழியில்

### 1

கஜினியின் சேனை ஸஜ்ஜன சௌஹான் வீரனைத் தொடர்ந்து மேற்கு முகமாய்ப் போய்க் கொண்டிருந்தது. ஒரு நாள் ஆயிற்று; இரண்டு நாள்; மூன்று நாளும் ஆயிற்று; நான்காவது நாள் சேனையில் இருந்த இடையர்கள் சத்தம் போட ஆரம்பித்தனர். 'இது என்ன பிரபாஸி போகும் வழியா? இந்தப் பாலைவனத்தின் வயிற்றிலே இறங்கி எங்காவது பிரபாஸிக்குப் போய் யாராவது கேட்டிருக்கிறார்களா?' என்று அவர்களிடையே எழுந்த சந்தேகம் கேள்விகளாக மாறிப் பலர் காதுகள் வழியே நுழைந்து வாயின் வழி வெளியேறி, சேனாதிபதி மசூத் காதுகளிலும் எட்டி நின்றது. அவன் ஸஜ்ஜனனை மிரட்டி வைத்தான்.

ஐந்தாம் நாள் சூரியன் எரிக்க ஆரம்பித்தான். குதிரைகள் பிணங்களாக ஆயின. மனிதர்களும் வாட ஆரம்பித்தனர். எங்கும் பயமும் துக்கமும் பரவி நின்றது. கஜினி சுல்தான் காதிலும் இந்த நிலை விழுந்தது. ஸஜ்ஜனனும் சுல்தானுக்கெதிர் கொண்டுவரப்பட்டான். அவனும் தன் முதல் நிலையிலிருந்து மாறுவதாகத் தெரியவில்லை.

ஆனால் ஆறும்நாள் எல்லோருடைய நம்பிக்கையும் புதைந்துவிட்டது. ஒட்டகங்களும் மேலே செல்ல மறுத்துவிட்டன. சேனையில் குழப்பம் ஏற்பட்டது.

பத்மாவதியைக் கையில் பிடித்துக்கொண்டு ஸஜ்ஜனன் நிம்மதியாய் நின்றான். இந்த வழி சென்றால் அனஹில் வாடி வரும், ஆனால் அவன் வார்த்தையை இனி யார் நம்புவர்? சேனாதிபதி மசூத் மட்டும் நம்பிக்கொண்டிருந்தான். மாலைக் காற்று அடித்துக்கொண்டிருந்தது. மணல் பறக்க ஆரம்பித்தது. யானைகள் படுத்துப் பெருமூச்சுவிட ஆரம்பித்தன: குதிரைகள் புரள ஆரம்பித்தன; ஒட்டகங்கள் திரும்பு முகம் காட்டி ஓட ஆரம்பித்தன; ஜனங்கள் 'தண்ணீர், தண்ணீர்' என்று அலற ஆரம்பித்தனர்.

சுல்தான் சேனைக்கு ஆறுதல் கூறினான். மசூதை விளித்துப் பின்வருமாறு உத்தரவிட்டான். "நீ ஸஜ்ஜனனை உடனழைத்துக் கொண்டு சில பூமியாக்களுடன் ஒருநாள் பிரயாணம் முன்னேறிப் பார்த்து வா. மற்றச் சேனையை மூன்று பகுதியாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியாக மேலேறச் செய். பலமற்றவர்கள் யானை குதிரைகளுடன் கடைசிப் பகுதியில் எல்லோருக்கும் பின்னால் வரட்டும்." இது ஸஜ்ஜனனுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. இருந்தாலும் வேறு வழி? அவன் மேற்கே இறங்கும் மேகங்களைக் குறித்துத் தனக்குத்தானே வேண்டிக்கொண்டான்.—"ஏ ருத்ரமூர்த்தியே! உன் புயல்கள் எல்லாம் எங்கே சென்றன? ஏன் இன்னும் தாமதம் செய்கின்றாய்?"

### 2

சோலார் சேனாதிபதி, மசூதுடன் ஸஜ்ஜனனும் சென்றான். ஒரு நாழி அல்லது இரண்டு நாழிப் பிரயாணம் போயிருப்பார்கள். அதற்குள்ளேயே மணற் சுழல்கள் எழ ஆரம்பித்தன. ஓரிருமுறைகள் ஒட்டகங்கள் மாட்டிக்கொள்ளத் தெரிந்தன. ஆனால் நல்லகாலம் பிழைத்தன. பூமியாக்கள் சொன்னது சரியாகி விடும்போல் இருந்தது. ஆனால் ஸஜ்ஜனன் அசைந்துகொடுப்பதாகக் காணோம். மசூதும் ஆட்டம்கொள்ள ஆரம்பித்தான்.

ஒவ்வொரு நிமிஷமும் மேற்குத் திசை உருண்டு எழும் மணல் தூண்களிடையே மறைய ஆரம்பித்தது. மசூத் ரத்தவிழி கொண்டு ஸஜ்ஜனனைப் பார்க்க ஆரம்பித்தான். ஆனால் அவன் என்னவோ அப்படியேதான் இருந்தான், அசையாமல் நகைமுகம்கொண்டு,

காற்றுக் கொதித்துவர ஆரம்பித்தது. மணல் தூண்கள் சுழன்றெழும்பி வர ஆரம்பித்தன.

மசூத் வாளை உருவினான்; "அட சயித்தான், நீ யாரடா?" என்று பாய்ந்தான் ஸஜ்ஜனனிடம். அவன் ஸஜ்ஜனனுடைய எண்ணத்தை அறிந்துகொண்டான்.

"அட யாரா? யார், நானா?" ஸஜ்ஜனன் அட்டஹாஸம் புரிந்து சொன்னான். "நான் கோகாபாபாவின் பையன். இந்தப் பாலைவனத்துக்கு அரசன். அடே, மிலேச்சப் பதரே! பார்த்துக்கொள். ஸோமநாதரின் மூன்றும் கண் திறந்துவிட்டது. அதோபார்." என்று அவன் அலறி வரும் புயலைக் காட்ட ஆரம்பித்தான். அவனும் அதைத் தோற்கடிப்பவன் போல் அலறச் சிரித்தான்.

வருகின்ற புயலுக்குப் பின்காட்டி, பத்மாவதி திரும்பிநின்றது. ஆனால் அசையவில்லை.

உங்களுடைய விவசாயப் பண்ணை சாதனங்களை விருத்தி செய்து
அதிக லாபம் அடைய இதுவே தகுந்த தருணம்.

# PLAN YOUR 1950 MECHANISATION NOW!



The Fordson Major with the famous F-R Mounted Plough

பண்ணைக்கு உகந்த விவசாய சாதனம் போர்ட்ஸன் மேஜர் டிராக்டர். காரணம்? அதை ஓட்டும் செலவு குறைவு. ஒவ்வொரு காலன் ஆயிலுக்கும் அது செய்யும் வேலை அதிகம். ஸ்பேர் பார்ட்டுகளும், ரிப்பேர் சார்ஜுகளும் சொல்பம். மேஜர் ஹைட்ராலிக் பவர்லிப்ட் என்னும் கருவி மிகவும் சிறந்தது. இதனால் மேஜரினுடைய உபயோகம் அதிகரிக்கிறது. போர்ட்ஸன் ஆயுதங்கள் லேசாகவும், ஆனால் பலம் பொருந்தியதாயும், ஏற்றச் சுலபமாயும், ஓட்டச் சௌகரியமாயும், இடம்விட்டு இடம் மாற்ற எளிதாயும் இருக்கும். இதனால் காலத்தைச் சிக்கனப்படுத்துவதுடன், உழைப்பில் அதிக உபயோகத்தையும் அளிக்கிறது. மேஜரைப்போல் அவைகளையும் வாங்க லாபகரமாயுமிருக்கும்.



Three screw levers within easy reach of the tractor seat enable the F-R plough to be accurately adjusted in work.

1. Depth Control 2. Front furrow width for side land work 3. Levelling

You get more work out of a Fordson

**Fordson**

MAJOR TRACTOR

## ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்

202, 203 மவுண்ட்ரோடு, சென்னை-2

கிளைகள்: பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (Dn.)
டெப்போ: கோயம்புத்தூர்



துணிகள்
வெண்மையாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
துணிகள்
பிரகாசமாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
SUNLIGHT SOAP
ஸன்லைட்
சோப்பினால்
தான்
துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும்
சலவை செய்கிறது!


S. 123-50 TM



கொஞ்சர்கூட அசையக்கூடாது என்று ஸஜ்ஜனன் இட்ட கட்டளையை அது காலே ஊன்றி வைத்து நிறைவேற்றிக்கொண்டிருந்தது.

அந்த நேரம் அவனுடைய உள்ளம் பெருமையால் மலர்ந்தது. மற்ற யாரும் செய்ய முடியாத ஒரு வேலையை அவன் தனியே செய்திருந்தான். அவன் யவன சேனையை எமன் வாயிலில் கொண்டுவந்து நிறுத்திவிட்டான்.

புயல் சிறிச் சிதறிற்று. ஸஜ்ஜனன் கண்கள் வருந்தின. பத்மாவதியும் அமைதி குன்றிற்று—என்ன இங்கே நின்றே சாவதா? அவன் கண்ணுக்கெதிரே நீண்ட தாடியும்

பச்சைப் பாகையும் காட்டும் அந்தப் பயங்கர அமீர் தோன்றினான். புயலில் சிக்கி, பறக்கும் மணற்றூண்களில் மோதுண்டு படிந்து புரளும் ஏராளமான பிணங்களுக்குமேல் பறந்து மண்டலமிடும் கழுகுக் கூட்டங்களும் தோன்றின!

மருதும் மற்றப் பூமியாக்களும் உயிரைப் பிடித்துக்கொண்டு ஓட ஆரம்பித்தனர். வழியில் இரண்டு ஒட்டகங்கள் கால் நழுவி விழுந்தன. அவைகளின் மேலிருந்த பூமியாக்களும் விழுந்தனர். மருத் திரும்பிப் பார்க்கவேயில்லை. எப்படியாவது ஓடி, சேனையைத் திரும்பச் சொல்வதுதான் அவனுக்கு முதல் வேலை.

சுல்தானை அடைந்து நடந்தவற்றைச் எல்லாம் சுருக்கமாகச் சொல்லி முடித்தான். உயிருக்குத் தப்பி ஓடுவதைவிட வேறு ஒரு வழியும் கிடையாது. அந்தப் பெரிய வெற்றி வீரன் அந்தப் பயங்கரமான சந்தர்ப்பத்தில் ஏற்படவிருக்கும் பேராபத்தை உணர்ந்தான். அவன் உடனே ஓர் ஒட்டகை மீதேறி, பெரிய பெரிய சர்தார்களுடன் கொடியும் பறையும் தொடர, அங்குமிங்கும் சுற்றிச் சுழன்று சேனையில் கலவரம் ஏற்படாமல் உத்தரவிட்டுப் பார்த்துக்கொண்டான். அவன் அடையாளத்தைக் கண்ட பகுதியில் அங்கங்கே வீரர்கள் தைரியமும் நம்பிக்கையும் கொண்டனர். அவன் குரலைக் கேட்ட வீரர்கள் நடுங்கி அமைதி கொண்டனர். இரண்டாவது பகுதியும் கலவரம் நீங்கி அமைதிப்பட்டுச் சரியான முறையில் நடந்துகொள்ள ஆரம்பித்தது.

மூன்றாவது பகுதிக்கும் அதே உத்தரவு இட இரண்டு சர்தார்கள் விரைந்து அனுப்பப்பட்டனர்.

முதற் பகுதியில் ஓட்டம்தான். அதை அடக்கச் சுல்தானும் மருதும் அங்கே வந்து சேர்ந்தனர். அங்கே கட்டளையைக் காது கொடுத்துக் கேட்டபிறகல்லவா அமைதி ஏற்படப்போகிறது! அதைக் கேட்க யாருக்கு நேரம்? மேற்குத் திக்கிலிருந்து மணல் தூண்கள் பறந்து வேகமாக வந்துகொண்டிருந்தன. சுல்தான் பாய்ந்து சீறிவரும் புயலைப் பார்த்தான். முதல் பகுதியில் அமைதி ஏற்படுத்துவது கஷ்டம் என்று படவே இரண்டாம் பகுதிக்கு வேகமாகச் சென்று அடைந்தான். முதற் பகுதி இப்பொழுது சேனையாக இல்லை. ஓடி, வீழ்ந்து சிதறி நிற்கும் மனிதர் மிருகங்களின் கூட்டமாகவே தென்பட்டது. காற்று நெருப்பை வாரி விசிறிக்கொண்டிருந்தது. மணற் சுழல்கள் ஆளைச் சுருட்டி எடுத்தன. திரும்பிப் பார்த்தாலோ.........!

எல்லோரும் உயிரையும் சற்று மறந்து மேற்குப் பக்கம் பார்த்து நின்றனர்.

பத்மாவதி இதுவரையில் பார்த்திராத வேகத்துடன் ஓடிவந்துகொண்டிருந்தது. அதனுடைய கால்களில் மின்னல் வேகம் இருந்தது. அதற்கு இன்று நாம் இந்த உலகத்து உயிர் அல்ல, தேவலோகத்து உயிர் என்று தோன்றிக்கொண்டிருந்தது.

அதன்மேல் ஸஜ்ஜனன் சூரியதேவன்போல ஏறி வந்துகொண்டிருந்தான். அவனுக்குப் பின்னால் எரிக்கும் மணலின் சுழலும் கதைகள் வந்துகொண்டிருந்தன. அங்கிருந்து, 'ஜய் ஸோம்நாத்!' என்ற ஓர் வீர முழக்கம், ராக்ஷஸ முழக்கம் கேட்டுக்கொண்டிருந்தது.

புயல் சேனையின் ஒரு பகுதியை அடித்துச் சுருட்டிவிட்டு அடங்கிவிட்டது. அது அடங்கிய பிறகு ஒவ்வொரு வீரன் மேலும் நான்கு முழம் மணல் முட்டிட்டிருந்தது. அங்கேயே ஸஜ்ஜனனும் பத்மாவதியும் ஒருவர் கஷ்டத்தை ஒருவர் பார்த்துக்கொண்டே மாறாத அமைதியை அடைந்துவிட்டனர்.

3

சுல்தானுடைய ஆச்சரியம் தரத்தக்க மூளைத் திறனின் காரணமாக எஞ்சிய சேனையில் அமைதி நிலவ ஆரம்பித்தது. பகலிலேயே நடக்க உத்தரவு கொடுத்து, சாப்பாட்டு அளவில் குறைத்து, பிரார்த்தனையில் ஈடுபடுத்தி, குராசான் வீரர்களைவிட்டுப் பயமுறுத்தி, பல விதமாகச் சேனை சிதறுவதைத் தடுத்துச் சேனையை ஒழுங்குபடுத்தினான். இந்த விதக் கஷ்ட நிலையில்தான் சுல்தானின் திறன் வெளியாயிற்று.

மறுநாள் சுல்தானுடைய கூடாரத்தில் முக்கியமான தலைவர்கள் சேர்ந்தனர். ஒவ்வொருவரும் குறை வைத்திருந்தனர். யானைகள் நடக்க மறுக்கின்றன. குதிரைகள் உடலுக்கும் உயிருக்கும் இடையே சம்பந்தம் அற்றுப்போக ஆரம்பித்து விட்டது! தண்ணீரும் தீனியும் குறைய ஆரம்பித்துவிட்டன. ஹிந்துக்கள் மனம் ஒடிந்துவிட்டனர். முஸல்மான்கள் உற்சாகம் இழந்துவிட்டனர். பூமியாக்களுக்கு வழி தோன்றவேயில்லை, பின்னால் ராஜபுத்திரர்களுடைய சேனைகள் சண்டைக்கு ஆயுதங்களைத் தீட்டி நிற்கின்றன. இப்படி ஒன்றன்பின் ஒன்றாய் அநேக புகார்கள் தலையணையில் தன் உடலைச் சார்த்தி அமர்ந்திருக்கும் சுல்தான் காதுகளில் விழுந்தன—அம்புபோல்! அடர்ந்த புருவங்களின் கீழே விழித்துச் சுழன்ற கண்கள் அவர்களை எடைபோட்டுக் கொண்டிருந்தன. மருத்

ஒருவன் மட்டும்தான் மிகவும் உற்சாகத்துடன் காணப்பட்டான். கஜினி கொடுக்கும் ஒவ்வொரு புத்திமதிக்கும் குரானிலிருந்து பாக்களை எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தான். இவ்வளவில் வாயிலிலிருந்து யாரோ இருவர் சுல்தானிடம் அனுப்பப்பட்டிருக்கின்றனர் என்ற செய்தி வந்தது. இதைக் கேட்ட எல்லோர் முகங்களிலும் பலவித எண்ணங்கள் நிழலிட்டன. உற்சாகம் கொண்டவர்கள் மனம் மகிழ்ந்தனர். நம்பிக்கையற்றவர்கள் பெருமூச்சு விட்டனர். சுல்தான், 'கொண்டுவா அவர்களை உள்ளே!' என்று உத்தரவிட்டான். மசூத் உற்சாகத்துடன் எழுந்து அவர்களை அழைக்கச் சென்றான். மற்ற எல்லோரும் எதிர்பார்த்து வாயில்நோக்கி வாய் திறவாமல் அமர்ந்திருந்தனர்.

கொஞ்ச நேரம் சென்றதும் மசூத் இருவரை அழைத்துக்கொண்டு உள்ளே வந்தான், அவர்கள் இருவரும் சாமந்தனும் நந்திதத்தனுமே. பாலைவனத்தில் குஜராத்தின் குறுக்கு வழியைத் தேடி அலைந்தபோது அவர்கள் கஜினி சேனையின் தண்டைப் பார்த்தனர். சாமந்தன் 'நான் ஜாலோரிலிருந்து சுல்தானுடைய தலைவனின் தூதனாக வந்திருக்கிறேன்!' என்று சொன்னான். காவலாளிகள் இதை நாயக்கிடம் சொன்னார்கள். நாயக் தன்னுடைய அதிகாரியிடம் சொன்னான். அதிகாரிகளின் சங்கிலியைப் படிப்படியாய்த் தாண்டி அந்த விஷயம் சுல்தானுடைய காதுகளில் எட்டிற்று.

இருபத்தொரு ஆண்டுகள் கொண்ட சாமந்தன் இப்பொழுது யமன் போல் தோற்றம் அளித்தான். அவன் கண்கள் கலக்கமற்று ஜோதி நிறைந்து நின்றன. முகத்தில் இளமையின் அழகலைகள் ஒழிந்து கவலைக் கோடுகள் பின்னணியிட்டு நின்றன. எண்ணி எண்ணிக் கடைந்து எடுத்த அவன் உள்ள விஷம் அவன் கண்களில் முகத்தில் அவனுடைய குரலில் பரவி வழிந்து கொண்டிருந்தது. அவன் வாய் அதிகம் திறக்கவில்லை. திறந்தால் விஷ அம்புகள் வெளியேறின. அவனுக்குப் பின் நந்திதத்தன் மனதுக்குள்ளேயே சிவ கவசத்தைச் சொல்லிக்கொண்டே குனிந்த தலையுடன் மெதுவாக நடந்து வந்தான்.

அவன் எந்த நிலையிலும் சாமந்தனை விடுவதில்லை என்று திட சங்கல்பம் செய்துகொண்டிருந்தான்.

அவர்கள் வந்தவுடன் அங்கு உட்கார்ந்திருந்தவர்கள் எல்லோரும் காதைத் தீட்டிக்கொண்டு வாயைத் திறந்தனர். சுல்தான் உயர்ந்த குரலில் "மசூத், அவனை இங்கே கொண்டுவா! திலக்! இவனை எங்கிருந்து வருகிறான் என்று கேள்?" என்று உத்தரவிட்டான். திலகன் எழுந்து வந்தான்.

பிறகு இருவருக்கும் இடையே நடந்த சம்பாஷணை முறையே மொழிபெயர்க்கப்பட ஆரம்பித்தது.

"நீ எங்கிருந்து வந்தாய்?

"ஜாலோர், மார்வார் வழியாக"

"யாரனுப்பியது?"

"சுல்தானுடைய ஆள்தான்."

"என்ன செய்தி கொண்டுவந்திருக்கிறாய்?"

"அதைச் சுல்தானிடம் மட்டும் ரகசியமாகச் சொல்லும்படி கட்டளை." இதைச் சொன்னபோது சாமந்தன் சுல்தானை நிலைத்து நின்று ஒன்றிய மனம் காட்டும் பார்வையால் பார்த்துச் சொன்னான்.

"அந்தத் தலைவன் எங்கே இருக்கிறான்?" திலகன் கேள்வி.

"இவர்கள் எல்லோரும் இருக்கிறார்களே! சொல்லலாமா?"

"ஆம், ஜஹாம்பனாஹ் அவ்விதமே உத்தரவிடுகிறார்."

"தலைவன் இந்த உலகைவிட்டுப் பரலோகம் ஏறிவிட்டார்."

"என்ன? என்ன?" எல்லோரும் அரச மரியாதையைக்கூட மறந்து அலறினார். சுல்தான் சற்று முன் நகர்ந்து வருத்தம் தோய்ந்த குரலில் "எங்கே, எப்பொழுது, யாரால்?" என்று கேட்டான்.

ஜாலோர் வழியில்—இன்று இருபது நாட்களுக்கு முன்—ஹிந்து வீரர்கள் கையால்...!"

"நீ உண்மை சொல்லுகிறாய் என்பதற்கு அடையாளம்?"

சாமந்தன் முடிச்சிலிருந்து தலைவனுடைய ரத்னம் பதித்த இடைவாளை எடுத்துக் காட்டினான். மசூதிடம் கொடுத்து, "இதோ அடையாளம்" என்றான்.

அதை அடையாளம் கண்டுகொண்டனர். இருவரும் ஒரே சமயத்தில்—"உலக ரக்ஷகனே! இது அவனுடைய கத்திதான். நீங்கள் அவனுக்குப் பரிசளித்த அதே கத்திதான்." என்றனர். வெகுநேரம் வரையில் ஒருவரும் வாயே திறக்கவில்லை.

"நீ என்ன ஜாதி?" சுல்தான் திலகனைக் கேட்க வைத்தான்.

"ராஜபுத்திரன்"—சாமந்தன் பதிலிறுத்தான்.

"தலைவன் கத்திதந்தபோது ஏதாவது செய்தியும் சொன்னானா?"



சாமந்தன் அசையாத விழிகளுடன் தாழ்த்திய குரலில் ரம்பம் போட்டு அறுக்கும்விதமாக, "நீங்கள் ஜாலோருக்கும் மார்வாருக்கும் லஞ்சம் கொடுக்கத்தானே அனுப்பினீர்கள் ?" என்று கேட்டான்.

இந்தக் கேள்வி மிகவும் துணிச்சலான கேள்வி.

"பிறகு?"

"ஜாலோரும் மார்வாரும் அதை ஏற்க மறுத்துவிட்டனர். அதுமட்டுமல்ல. அவர்கள் இருவருடைய சேனையும் குஜராத் சேனையுடன் சேர்ந்து உங்கள் கழுததை நெறிக்க வழி பார்த்து நிற்கின்றன" அவன் ஒவ்வொரு வார்த்தையும் சிறந்த வீரன்விட்ட அம்புபோல் இதயத்தில் செருகிப் பாய்ந்தது.

மீண்டும் ஒரு முறை பயங்கர அமைதி நிலவிற்று. முழுக்கிப் பாயும் பயவேகம் அவர்கள் வாயை மூடிவிட்டிருந்தது. இந்த நிலையில் முதலில் விழித்தவன் சுல்தான்தான். அவன் கண்கள் எதிரே கையை வைத்து, 'அல்லா!' என்று கூவினான். சாமந்தனைத் தவிர மற்றவர் எல்லோரும் மனம் ஒடிந்து நின்றனர். சாமந்தன் இந்த நிலையைப் பார்த்தான். ஒரு முறை ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டான். பிறகு யாரும் அறிவதற்கு முன்னமேயே தன் இடையிலிருந்த கத்தியை உருவி எடுத்துப் பாய ஆரம்பித்தான், தன்னை மறந்து நின்ற மகுதையும் திலகனையும் தாண்டி அவன் ஒரே பாயச்சலில் சுல்தானிடம் போய்ச் சேர்ந்துவிட்டான். கத்தி மின்னிற்று. சுல்தானுடைய கழுத்தில் ஒளிபட ஆரம்பித்தது. "ஹா ஹா!" என்ற சத்தத்துடன் எல்லோரும் துடித்து நின்றனர். சுல்தான் நின்றிருந்தான். அவன் தன்னுடைய வலது கையைத் நீட்டி, சாமந்தன் வலது தோளை அழுத்திப் பிடித்தான். அந்தப் பிடியில் கை தடைபட கத்தி கழுத்துக்குள் பாய வலுவற்று நின்றுவிட்டது. மேலும் சுல்தான் தன் இடது கையால் குழந்தையைப் போல் சாமந்தனை நெட்டித் தள்ளினான். பிறகு அவனை முறுக்கி அழுக்கினான். அவனுடைய பலத்தின் பெருமை, அமுங்கி நின்ற சாமந்தன், ஹா ஹா என்று அலறும் சர்தார்கள், வாள் உருவி வரும் தோழர்கள் எல்லோரையும் தன் பக்கம் இழுத்துக் கொண்டிருந்தது. அவன் முகத்தில் செம்மை படர்ந்தது. அவன் வாயிலிருந்து வார்த்தைகள் ஆர்த்து எழுந்தன. மஹமூத்தைக் கொலை செய்வது என்பது எளிதல்ல; அல்லாஹோ அக்பர்! என்று கர்ஜித்தான் அவன். சாமந்தனை முறுக்கிய முறுக்கில் அவன் வலது கை வளைந்து கத்தி கீழே விழுந்தது. இரண்டு கைகளாலும் வாரி எடுத்துச் சுல்தான் அவனை உதறி எறிந்தான். ஒரே கணத்தில் சுல்தான் எல்லையற்ற தன் பலத்திற்கு ஒரு அபூர்வமான சாட்சியம் கொடுத்து விட்டான். அங்கு நின்றவர் மனதில் மடிந்து கொண்டிருந்த நம்பிக்கை மீண்டும் உயிர்பெற்று எழுந்தது. அவர்கள் சுல்தானைப் பக்தியுடன் வணங்கி நின்றனர்.

சாமந்தன் விழாமல் தத்தளித்துச் சமாளித்துக்கொண்டான். அவனை உயிரைக் குடிக்கும் அநேக வாள்கள் சுற்றின.

'நிறுத்து!' சுல்தான் கட்டளை இட்டான். "வாளை உறையில் இடுங்கள்" அவன் கட்டளை உடனே நிறைவேற்றப்பட்டது. சாமந்தன் நிமிர்ந்து நின்றான். சற்றும் பயக்குறிகள் காட்டாது அவன் நின்று பார்த்த நிலை சபையை ஆச்சரியத்தில் தத்தளிக்க வைத்தது. அவன் சுல்தானை ஆத்திரமும் ஆச்சரியமும் கலந்த கண்களால் பார்த்துக்கொண்டு நின்றான். சுல்தானும் பெருமை பொங்க அவனையே பார்த்தான்.

"யாரும் அவனைக் கொல்லக்கூடாது. அல்லாவுக்குத் தன் பக்தனை உயிருடன் வைத்துக் கொள்ளத் தெரியும்."

திலகன் சுல்தானிடம் விண்ணப்பம் செய்ய ஆரம்பித்தான்.

"ஜஹாம்பனாஹ்! இப்பொழுது ஞாபகம் வந்தது. இந்தப் பிராமணன் கோகா ராணாவின் குரு. நானும் எவ்வளவோ நாழிகையாக யோசித்துப் பார்க்கிறேன். இப்பொழுது தான் ஞாபகம் வந்தது. நான் முதலில் கோகா துர்க்கம் சென்றபொழுது இவனை அங்கே பார்த்தேன்."

நந்திதத்தன் தலை நிமிர்ந்து பார்த்தான். அவன் திலகனை அப்பொழுதே அறிந்து கொண்டிருந்தான்.

"கோகா ராணாவா?" மகுதுக்கு வார்த்தைகள் வெடித்து வந்தன. அவனுடைய ஒரு பையன்தான் முந்தாநாள் ஆயிரக்கணக்கில் நம்முடைய சேனைவீரர்களை ஊதிவிட்டானே!"

சுல்தான் வீரன். வீரத்தனத்தின் நாடக மேடையில் தலைவனுடைய பதவியை ஏனோ எப்படியோ பெற்றவனல்ல! சரியான சமயத்தை அறிந்து மற்றவர் உள்ளத்தைப் பறிக்க நன்றாய் அறிந்தவன் அவன். மகத்தான நேரங்களில் தானும் உயர்ந்து பெரியவனாக ஆகும் திறமை அவன் பழகிப் பழகிக் கை கொண்டது. சிரித்துக்கொண்டே புகழ் பாடும் பார்வையை ஏந்தி, அவன் முன்னே நின்றான். ஒரு கையினால் மகுதையும் திலகனையும் நகரச்சொல்லிச் சைகை காட்டினான்.

தன் வலது கையைச் சாமந்தனுடைய தோளின் மேல் வைத்தான். அவனைப் பார்த்துக் கொண்டே நின்றான்.

எல்லோரும் மௌனமாய்க் க்ண்களையும் காதுகளையும் திறந்து நின்றனர்.

“திலகா! கோகாராணாவின் பையனிடம் சொல். கோகாராணாவின் குடும்பம் மஹமூத்தின் கீர்த்தியைக்கூட விழுங்கிவிட்டது. கோகாராணாவிடம் நான் அன்பை, அவருடைய நேயத்தை வேண்டி நின்றேன். அவரே என்னுடைய ஆயிரக்கணக்கான வீரர்களை வெட்டி மாய்த்துவிட்டார், முந்தாநாள் கோகாராணாவின் பேரன் ஒருவன் எங்களைப் புயலில் இட்டுச் சென்று என் சேனையையே நிலை குலைய வைத்துவிட்டான். இன்று நீயோ மிகவும தைரியமாக என் உயிரையே வாங்க முயன்றுவிட்டாய்!”

திலகன் இந்த வார்த்தையைச் சாமந்தனிடம் மொழி பெயர்த்துச் சொன்னான். சாமந்தன் அதைக் கேட்டு, ஆர்வத்துடன் “அப்படியா! கோகாராணாவின் பேரன் இப்பொழுது எங்கே? அவர் என் தந்தையல்லவா?” என்று கேட்டான். அதைக் கேட்டவுடன் அவன் அஞ்சா உள்ளமும் கரைய ஆரம்பித்தது.

“சரி என் பாட்டனாரைக் கொன்றாய் விட்டது. என் தந்தையும் மாண்டார். இனி என்னை எப்பொழுது கொல்லப் போகிறீர்கள்?”

மஹமூத் வீரன். வீரத்தனத்தை அறிந்து அதற்கு வணக்கம் செலுத்தவும் அவன் அறிவான். “போ, உன்னை விடுவித்து விடுகிறான். ஆனால் சிறு பையா! அல்லா என் பக்ஷம் இருக்கிறார் என்பதை மட்டும் மறவாதே!”

இந்த வார்த்தைகளின் மொழி பெயர்ப்பைக் கேட்டதும் சாமந்தன் குதித்தெழுந்தான்! “அட மிலேச்சா! என் தேவாதி தேவன் சங்கரன், உலகத்தை அழிக்கும் கடவுள் இருக்கும் வரையில் உனக்கு ஓர் பேராவலா? அது நடக்குமா?”

இதைக்கேட்டுச் சுல்தான் சிரித்தான். “மசூத் அழைத்துச்செல் இந்தக் கிழவனையும் சிறுவனையும். இவர்களிடம் மிகவும் நல்ல ஒட்டகங்களைக் கொடு. பத்து நாட்களுக்காகும் சாப்பாட்டையும் கொடுத்து இவர்களைச் சுதந்திரமாய் அனுப்பிவிடு” என்று உத்தரவு கொடுத்துவிட்டு, தன் சர்தார்கள் பக்கம் திரும்பி, “என் அல்லா என் பக்கம் இருக்கும் வரையில் நான் இந்த மாதிரியான வீரர்களுடைய விரோதத்தை வேண்டிக்கொண்டே இருப்பேன்” என்று சொல்லிமுடித்தான்.

மீண்டும் ஒருமுறை மசூத் பக்கம் திரும்பி, ஒறுக்க ஒண்ணாத கௌரவம் எக்களிக்கும் குரலில்—“மசூத் இவனுக்கு மயிர்க்காம்புகூடக் கெடுதல் ஏற்படக்கூடாது. அப்படிச் செய்பவன் தலையை உடனே வாங்கிவிடு!” என்று உத்தரவிட்டான்.

(தொடரும்)


# காவேரி சந்தா விகிதம்

| | இலங்கை, பர்மா & உள் நாடு | | | மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
| ஒரு வருஷம் | 6 | 0 | 0 | 7 | 8 | 0 |
| அரை வருஷம் | 3 | 0 | 0 | 3 | 12 | 0 |
| தனிப் பிரதி ஒன்றுக்கு | 0 | 8 | 0 | 0 | 10 | 0 |

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், “காவேரி,”
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

# இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

மதராஸ்

ஸர். A. ராமஸ்வாமி முதலியார்,
K. C. S. I., D. C. L. (Oxon)
சேர்மன்

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 18,75,000
ரிஸர்வ் நிதி ரூ. 10,75,000

சென்னையிலுள்ள ஆபீஸ்கள் :

நேதாஜி ஸுபாஷ் சந்திரபோஸ் ரோட், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, தியாகராயநகர் & பெரியமெட்.

தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கிய நகரங்களிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

# DON'T WORRY!!

Try "KUMARI" (Tablets) to remove your anxieties over difficult days and fear of periodical delays at any stage, under any circumstances and prevent future troubles! Speedy and harmless!! Thousands satisfied!!! Normal potency Rs. 3. Special Rs. 5. Extra Special Rs. 8. (V. P. Extra)



## Mrs. P. DEVEE, F. D. S. (C. M.)

TOLLYGUNGE, CALCUTTA-33.

கீழ்க் கண்டவர்களிடமும் கிடைக்கும் :—

(1) இண்டோ மெடிகல் சப்ளைஸ், 29-வைத்யநாதமுதலித் தெரு, சென்னை-1., (2) ராஜா மெடிகல்ஹால், 31-தர்மராஜா தெரு, பங்களூர் கண்டோன்மெண்ட்., (3) C. கன்னைய நாயுடு & சன்ஸ், கொல்லம், (S. I.) (4) நியூ டவுன் ஏஜன்ஸீஸ், 804 B. "ஹரிநிவாஸ்" வின்ஸென்ட் ரோடு, தாதர், பம்பாய் 14., (5) ஸிந்தி, 172-A, பிரின்ஸஸ் தெரு, (ஹனுமான் மந்திர் மேல்புறம்) பம்பாய்-2., (6) ஷா கம்பெனி, மங்களூர் (S. K.) (7) ஓவர்ஸீஸ் ஜெனரல் ஏஜன்ஸி, 72, அம்பாங் தெரு, கோலாலம்பூர் (மலேயா).

*Wanted Stockists in Unrepresented Areas on Favourable Terms*

**READ WHAT SATISFIED CUSTOMERS SAY!**

K. P. Bombay-"Mo·e than four months' overdue was restored to its usual state after using only 2 phials of Special Tablets."

V. K. East Africa-"Tried many similar products. None ever worked but only one packet of your Extra-Spl tabs. brought wonderful results."

K.L.R., Ceylon—"Remember. I bought two phs. of your medicine which relieved my patients wonderfully. Send 6 phs. more per return"

Mrs. David Bangalore—'Your KUMARI is a miraculous preparation. You have saved my life. I must introduce this to my friends,'

*Almost daily, lot of unsolicited appreciations pouring in our files from differnt parts of the World.*



குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

# டோங்ரேயின் பாலாம்ருதம்



**K. T. டோங்கரே அண் கோ பம்பாய்-4.**





எமது முதல்தரமான
சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான் களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன!

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண் டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும்!

# கே. சுவாமிநாதன் & கம்பெனி

**24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.**

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

# பட்டுக் கொடி

வை. சுப்ரமண்யன்





ராஜசேகரனின் இளம் உள்ளத்தில் அந்த ஆசை ஏற்பட்டதன் மூலகாரணம் தேசிய உணர்ச்சியா, அல்லது இளம் பிராயத்தின் இயற்கையான சபலமா என்பது நிச்சயமாகத் தெரியாது. அந்த லக்ஷியம் அவன் மனத்தில் குடிகொண்டு விட்டது; அதைப் பூர்த்திசெய்துகொண்ட பின்னரே அவன் மனம் திருப்தி அடையும்.

தன் வீட்டின் முகப்பில் ஒரு பெரிய கம்பம் நட்டு, அதில் ஒரு பட்டுக்கொடியைக் கட்டிப் பறக்க விடவேண்டும் என்று ஆசைப்பட்டான் அவன். பட்டுக் கொடி ஆசை லேசில் நிறைவேறுகிற விஷயமா? ராஜசேகரன் எங்கே? அந்தக் கொடியின் பொறுமானமான ஐந்தாறு ரூபாய் பணம் எங்கே? ஆயினும் எந்தப் பாடு பட்டாவது ஒரு கொடியைச் சம்பாதித்துத் தன் வீட்டின் முகப்பில் கட்டிவிடவேண்டுமென்று நினைத்தான் அவன்.

அவனுக்குப் பட்டுக் கொடியின் ஆசை மனத்திலே தோன்றி நிலைப்பதற்கான மூல சம்பவம் இதுதான். அவன் எஜமானன் கடைக்கு விற்பனைக்காகப் பட்டுக் கொடிகளும், சாதாரண கதர் மூவர்ணக் கொடிகளுமாக ஆயிரமாயிரம் கொடிகள் ரகம் ரகமாக வந்திருந்தன.

ராஜசேகரனின் எஜமானன் என்பவர் நகரின் பிரபல நியூஸ் ஏஜண்ட் ஒருவராகும். அவருடைய கடையில் விற்பனைக்கு வராத பத்திரிகைகளே கிடையாது. பத்திரிகைகளைக் கூவி விற்பனை செய்வதற்காக அவரிடம் ஏராளமான பையன்கள் அண்டிக் கிடந்தனர். அவர்களுக்குச் சம்பளம் என்று ஒன்றும் கிடையாது. முதலாளி கொடுக்கும் பத்திரிகைகள் பூராவையும் விற்றுக்கொடுத்தால் இன்றைக்கெல்லாம் ஒவ்வொரு பையனுக்கும் சராசரி ஆறணா அல்லது ஏழணாக்காசு கிடைக்கும். அநேகமாகப் பையன்களுக்குக் கிடைக்கும் கிராக்கியெல்லாம் தினசரிப் பத்திரிகைகளிலேதான்.

ராஜசேகரன் மட்டில் கொஞ்சம் அதிகமாகவே சம்பாதித்து விடுவான். பத்திரிகைகளைக் கூவி விற்பது ஒரு பங்கென்றால், பேசாமல் நுழை நரிபோல் தனக்குத் தெரிந்த சில வீடுகளில் பத்திரிகைகளைக் கொண்டுபோய் வற்புறுத்திப் போட்டுவிட்டு மெள்ள இரவு

நேரத்தில் கடை கட்டும் சமயத்திற்குப் பணத்தையெல்லாம் வசூல்செய்து கொடுத்துக் கமிஷன் பெறுவது இரண்டு பங்காகும்.

நியூஸ் ஏஜண்டுக்கு மிகவும் மனசுக்குப் பிடித்த ஊழியனாக இருந்தான் ராஜசேகரன். எல்லோரையும்விட வயசில் சின்னவன் என்ற காரணத்துடன் சுட்டிகையாக இருந்த காரணத்தினால் வேறு அவர் மனதைக் கவர்ந்திருந்தான் அவன். எப்போதுமே சிரித்த முகத்துடன் தமாஷாகவே பேசிப் பாடிக்கொண்டிருக்கும் ராஜசேகரன், நடந்து சென்று சாவதானமாகச் செய்து முடிக்கவேண்டிய காரியங்களுக்கே ஓட்டத்தைத்தான் மேற்கொள்வான். எனவே அவனுக்கு அந்த 'நியூஸ் மார்ட்' இருந்த பிராந்தியத்திலேயே '**மெயில்**' என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டுப் பிரசித்தமாகி விட்டது.

## 2

தம் அபிமானத்திற்குப் பாத்திரமான அந்தப் பையனுக்கு அந்த நியூஸ் மார்ட் முதலாளி சுதந்திரத் திருநாளை முன்னிட்டுச் சென்ற வருஷம் ஒரு 'ஸெட்' கதர் டிரெஸ் வாங்கித் தந்திருந்தார். அவருக்குத் தேசபக்தி மிகவும் அதிகம்; பழைய காலத்துப் பிரசித்தமான மனிதர். உப்பு சத்தியாக்கிரஹம், ஒத்துழையாமை இயக்கம் முதலியவற்றில் கலந்துகொண்டு சிறைக்குச் சென்றிருந்த தியாகிகளுள் அவரும் ஒருவர், எல்லாவற்றையும் எப்போதும் தேசிய மயமாக்குவதில் அவருக்கு அலாதியான ஆர்வம்; கடையில் தேசியச் சின்னங்களைக் குறிக்கும் முறையில் அலங்காரங்கள் செய்வார்; கடையின் பெயரைத் தேசத் தலைவரின் பெயரைக் குறிக்கும் முறையில் சூட்டியிருந்தார். பத்திரிகைகளுடன் அநேக சந்தர்ப்பங்களில் இதே மாதிரியாகக் கொடிகளைத் தருவித்து விற்பனை செய்வது முதலான தேசியத் தொடர்புடைய காரியங்களைக் கவனித்து வந்தார்.

வருஷந்தோறும் பத்திரிகை விற்கும் பையன்களுக்கு ஆளுக்கொரு கொடியை இனமாகக் கொடுத்துத் தம் வீட்டிற்குச் சென்று அதைப் பறக்கவிட்டுக் கொடி வணக்கம் செலுத்தச் சொல்வார். அந்த முறையில் இந்த வருஷமும் சுதந்திரத் திருநாளன்று காலையில் ராஜசேகரனுக்கும் ஒரு கொடி கிடைக்கும். கொடி என்றால் சாதாரண மூவர்ணக் கொடிதான். ஆனால் அவனது லட்சியம் பட்டுக்கொடி! மற்றப் பையன்களெல்லாம் முதலாளி கொடுக்கும் கொடியை வேறு தெருக்களில் தலைமறைவாய்ச் சென்று விற்றுக் காசாக்கித் தம் வயிற்றை நிரப்பிக்கொண்டுவிடுவர். ஆனால், ராஜசேகரன் சென்ற மூன்று ஆண்டுகளாகச் சுதந்திரத் திருநாளன்றும், காந்தி ஜயந்தியன்றும், இப்படியாகத் தேசியத் திருநாட்கள் ஒவ்வொன்றின்போதும் தன் வீட்டுக்கெதிரே கம்பம் நட்டு, கொடியேற்றி, சுதாவாகக் கூடியிருக்கும் குழந்தைகள் பெரியோர் முன்னிலையில் தன் மெய்மறந்து 'தாயின் மணிக்கொடி பாரீர்' என்ற பாட்டை உணர்ச்சி ததும்பப் பாடிக்கொண்டிருப்பான். பன்னிரண்டு வயசுகூட நிரம்பாத சிறுவன் ஆதலால் விஷயத்தை இத்துடன்தான் முடித்துக்கொள்ள முடிந்தது அவனால்; இன்னும் பெரியவனான பிறகு பிரசங்கங்கள் செய்வதற்கெல்லாம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று திட்டமிட்டிருந்தான்.

இந்த வருஷம், சொல்லப்போனால் அவனுக்கு இரண்டு லட்சியங்கள் கூட மனத்தில் புதைந்து கிடந்தன. ஒன்று பட்டுக் கொடி; இரண்டாவது தன்னுடைய வீட்டின் முகப்பில் கொடி யேற்றத்துக்குப் பிறகு மேடையொன்றமைத்து அதன்மீது நின்று குப்பத்து மக்களடங்கிய கூட்டத்தில் பிரசங்க அரங்கேற்றம் செய்யவேண்டும் என்பது.

இந்த லக்ஷியங்களை மனசில் கொண்டவனாகவே வளைய வந்துகொண்டிருந்தான் அவன்,

## 3

இன்னும் நான்கு நாட்களில் சுதந்திர தினம் வரப்போகிறது. 'மெயில்' ராஜசேகரன், வீட்டில் தன் தாயாரிடம் பேசிக்கொண்டே அவள் போட்ட சாதத்தைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தான்.

"அம்மா நானு இன்னம் மூணு நாலு நாளு பகல் சோத்துக்கு ஊட்டுக்கு வரமாட்டேன். ராவிக்கித்தான்—அதுகூட பன்னண்ட் மணிக்கு மேலேதான் வருவேன்; இப்பவே சொல்லிப்புட்டேன்!"

"என்னடாப்பா அவ்வளவு அலுவலு வந்திடிச்சு உனக்கு இப்போ?" என்று மகனின் துடிப்புச் சற்றும் உணராத காரணத்தினால் மேற் போக்காகக் கேட்டாள்.

"நாலு நாள் போனா சுதந்திர நாள் வருதே, நெனப்பில்லயாம்மா உனக்கு?"

"வந்தா என்ன? சுதந்திரத்தை மூட்டை கட்டி உன் தலைமேலே வச்சு, 'ஊட்டுக்குக் கொண்டு போடா'ன்னு யாருனா சொல்லப் போறாங்களாடா, மவனே?" என்று விதண்டையாகக் கேட்டாள்.

"என்னம்மா, அலுத்துகினு பேசறே? சுதந்திர நாளும்போது முதலாளி கடைக்கி நெறய சுதந்திர மலருங்க வரும். ராப்பவலா கூவி விக்கவேணும்—பகல் நேரத்திலே

கூடைக்கார அம்மாகிட்ட சாப்பாடு வாங்கி சாப்பிட்டுபுடுவேன். ராவிக்கித்தான் வருவேன்" என்கிறதுக்காக சொன்னேன்!" என்று விளக்கம் கூறினான் 'மெயில்'.

"சரிதான், சரிதான்; இப்பத்தான் புரிஞ்சுக்கினேன்! அப்படியானு நல்ல துட்டு சம்பாரிப்பியேடா, கண்ணு! பாதித்துட்டு நீ வச்சுக்க; பாதித்துட்டு எனக்குக் கொடுத்திடு."

"கொடியெல்லாம் வேறே விப்பேன், அம்மா! ஆனு முதலாளி கொடிக்குக் கொடியே குடுத்திடுவார்னும் துட்டுக் குடுப்பார்னும் தெரியலே."

"கொடி விக்கிறதுக்குத் துட்டுக் குடுத்தார்னு பத்திரிகைத் துட்டையெல்லாம் என் கிட்ட முழுக்கவே கொடுத்திடுருப்பா, கண்ணு. நான் இப்பவானு கடையத்தை மார்வாடி கிட்ட யிருந்து மூட்டுக்கறேன்."

"சரி, அம்மா" என்று சொல்லி விட்டான், பெரிய மனுஷன் தோரணையில். அவன் வீட்டுக்குரிய பெரிய மனுஷன் அவனேதான்; அவனுக்குத் தகப்பனார் இல்லை. தாயாரும் நாலு வீடுகளில் பாத்திரம் தேய்த்து வீடு கூட்டிப் பணம் சம்பாதித்தாள். ராஜசேகரனும் தன் சம்பாத்தியத்தை அப்படியே வீட்டில் கொண்டுவந்து கொடுத்துவிடுவான். அந்த வயசில் பொறுப்பறிந்து நடந்துகொள்ளத்தக்க மனப்பண்பு ஏற்பட்டிருந்தது என்றால் அதற்குக் காரணம் நியூஸ் மார்ட் முதலாளிதான்.

சாப்பிட்டுக் கை கழுவியவுடனே கடைக்குச் சென்றான் 'மெயில்'. அவனைப் பார்த்துச் சிரித்தார் கடை முதலாளி. அவன் கடையை யணுகும்போதே அவன் காதைத் துளைத்த பத்திரிகைப் பையன்கள் குரல்கள் அவனுள் ஆவேசத்தை எழுப்பின.

"தூங்கின கண்ணு கடாக் கண்ணுப் போயிடுச்சேடா, 'மெயிலுப் பையா! நாலு நாளு முந்தியே ரெண்டு மூணு பத்திரிகை மலர் கொண்டாந்து கடையிலே போட்டுட்டாங்களே! நீ இனிமே எத்தனை விப்பே? துட்டுச் சேருமா உனக்கு?" என்று கேட்டார்.

"குடுங்க முதலாளி, மலர் ஷ்டாக் பூராக் குடுங்க. இந்த மட்ராஸ் சிட்டி பூராப்போயி வித்திட்டு வௌக்கு வக்கங்காட்டியும் வந்திடறேன்" என்று உற்சாகமாகப் பேசினான் 'மெயில்' ராஜசேகரன்.

கடை முதலாளி அடுக்கு அடுக்காய் அவன் கையில் புத்தகங்களை வைத்து அடுக்கினார். ராஜசேகரன் தயங்கினான்.

"என்னடா, பையா?"

"கொடிங்கள்ளாம் விக்கவேண்டாம்?"

"நாளக்கி—நாளக்கி! நாளை மொத கொடி விக்கணும். இன்னிக்கெல்லாம் நாளு நல்லா இல்லே!"

ராஜசேகரன் மெல்லத் தன் அபிலாஷையை முதலாளிக்குத் தெரியப்படுத்தினான்.

"நானு இந்த தபா மாணுவாரியாக் கொடிங்க விக்கப் போறேனுங்க!"

"வில்டா ராஜா! நான் உனக்கு இந்த தபா ரெண்டு கொடி குடுக்கறேன்."

"பட்டுக்கொடி வித்தா எப்படிங்க? கொடிக்கி கொடியா? துட்டு குடுப்பிங்களா?"

கடை முதலாளி சிரித்துவிட்டுச் சொன்னார்:

"பட்டுக்கொடி கூலி விக்கக் கொண்டார்லேடா, பையா! ஆர்டர்மேலே வந்த கொடிங்க. அதுகூட ஒண்ணுக்குப் பாதிதான் வந்திருக்கு. மிச்சமும் வந்தால் கடையிலே கட்ட ஒரு கொடி மிஞ்சுமோ அதுவும் மிஞ்சாதோ!..."

அவர் சொல்லிக்கொண்டிருந்தபோதே கடையின் முகப்பில் கம்பத்தின் உச்சியில் பட்டுக் கொடி பளபளத்துக்கொண்டே பறப்பதுபோல் ஒரு தோற்றம் அவனுள் எழுந்தது. அந்தப் பளபளப்பில் சென்ற வருஷமே அடிமையாகிப் போயிருந்த அவன் உள்ளம் அதன் நினைவால் துடித்துக்கொண்டுதானிருந்தது. இப்போது முதலாளி இப்படிச் சொன்னதும் அவன் நம்பிக்கை அசைகிறதுபோல் உணர்ந்தான். 'விலை கொடுத்தாவது ஒரு கொடி வாங்குவதற்குத் தன்னால் இயலப் போகிறதா' என்று ஆதங்கப்பட்டது அவன் மனசு.

"ஒரு கொடி என்னு ஆவுதுங்க?... எம்மாந் துட்டு?"

"அதை ஏண்டா நீ கேக்கறே? கொடி வாங்கிக் கட்டப் போறியா உன் ஊட்லே, பட்டுக் கொடி?"

"ஆமாமுங்க; போன வருஷமே புடிச்சு ஒரு பட்டுக் கொடி வாங்கிப் பறக்க விடணும்னு எனக்கு ஒரு ஆசைங்க. அதை கையினாலே தொட்டுக்கூடப் பாத்ததில்லிங்க......"

"நீ என்னடா அதிசயம்? எத்தினியோ பணக்காரங்ககூடத்தான் காயிதத்தினாலே கொடி கட்டிச் சுதந்திர விளாக் கொண்டாடிப் புடறாங்க......இல்லாத போனா போன வருசம் ஆறு ரூவா வித்த கொடியை இந்த வருசம் எட்டு ரூவா குடுத்தா வாங்குவாங்க?"

விலையைத் தெரிந்துகொண்டதும் அந்த இடத்தைவிட்டு நழுவினான் ராஜசேகரன்.

அவன் மனத்தில் ஆயிரம் எண்ணங்கள்; கடைசியில் தன் ஆசையைப் பணம் கொடுத்துத் தான் பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்று நினைத்தான்.

## 4

மூன்று நாட்கள் சென்றன; மூன்றும் நாள் பாதி இரவு; விடிந்தால் சுதந்திரத்திரு நாள். நகர் 'ஜே ஜே' என்று முழங்கியது. ஆங்காங்கே தீபாலங்காரக் காட்சிகள் கண் கொள்ளாக் காட்சியாயிருந்தன. ஒரு கட்டிடத்தின்மேல் வைத்த கண்ணை வேறு கட்டிடத்திற்கு மாற்றுவதெனில் இயலாத நிலை ஏற்பட்டிருந்தது. நகர்க் கட்டிடங்கள் அப்படிக் கவர்ந்தன எல்லோரையும்.

கண்ணைச் சிமிட்டுவதுபோல் சிமிட்டிக் கொண்டிருந்த ஒரு வரிசை விளக்குகளின்மேல் கண்களைச் செலுத்திக்கொண்டிருந்தான் ராஜசேகரன். அவன் மனத்திலும் அப்படியே தான் சில நினைவுகள் விட்டு விட்டுத் தோன்றின. அவன் கையில் எழுபத்துநாலு ரூபாயும் சில்லறையுமிருந்தன. அந்தப் பணமெல்லாம் சுதந்திர மலர்கள் விற்ற பணம். அதுதவிர அன்று பத்து மணியுடன் கொடி விற்பனையில் வந்த பணம் பூராவையும் முன்னமேயே கொண்டுவந்து கட்டிவிட்டான் முதலாளியிடம். இப்போது அவன் முதலாளியிடம் தன் கமிஷன் நாலு ரூபாயும் சில்லறையும்போக அறுபது ரூபாய்தான் கட்டவேண்டும். அவர் மலர்களை எண்ணிக் கொடுக்கையில் ஞாபகப் பிசகாக—அவர் ஆயுளிலேயே முதன்முறையாக—பத்துப் புத்தகங்களை 'மெயில்' பையனிடம் அதிகமாகவே கொடுத்துவிட்டார். ஒவ்வொரு மலரின் விலையும் ஒரு ரூபாய். ஆக, பதினாலு ரூபாய்க்கும் அவன் உரிமையாளனாயிருந்தான்.

இந்தப் பிரச்னையில்தான் வெகு நேரமாக மூளையைப் போட்டுக் குழப்பிக்கொண்டிருந்தான் ராஜசேகரன். அதற்கு முந்தின நாளைய சம்பாத்தியத்தையெல்லாம் அவ்வப்போது அவன் தாயாரிடம் கொடுத்திருந்தான். இப்போது பேசாமல் அறுபது ரூபாய் பணத்தையும் கொண்டுபோய் முதலாளியிடம் கட்டிவிட்டு மீதியுள்ள பதினாலு ரூபாயில் பக்கத்துத் தெருவிலிருந்து எட்டு ரூபாய் கொடுத்து ஒரு பட்டுக்கொடி வாங்கிக்கொண்டுவிடுவது என்று தீர்மானித்துக்கொண்டான். அது தவிர, சாதாரணக்கொடி விற்றுக்கொடுத்ததற்காக முதலாளி கொடுக்கக்கூடிய சாதாக் கொடியையும் பேருக்கு வாங்கிக்கொண்டுபோய் விடுவது என்று தீர்மானித்தான். அதிகப்படியாகப் புத்தகம் கொடுத்ததை முதலாளியிடம் பிரஸ்தாபிக்கவே கூடாது என்று எண்ணிக் கொண்டான்.

முதலாளியிடம் பணத்தைக் கொண்டு கட்டினான் ராஜசேகரன். அவன் மனம் ஒவ்வொரு கணமும் உண்மையைக் கூறி விடுவோமா என்று துடித்துக் கொண்டிருந்தது. மிகவும் கஷ்டப்பட்டு மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு விட்டான் அவன்.

கணக்குகளையெல்லாம் பார்த்து முடித்த முதலாளி என்னவோ நினைத்துக்கொண்டு மனத்தைப் புண்படுத்திக் கொண்டிருந்தது முக பாவத்தில் நன்கு தெரிந்தது. முதலில் ராஜசேகரன் கணக்குகளைத் தீர்த்தனுப்புவதற்காக அவன் பக்கம் திரும்பினார். மற்றப் பையன்கள் சென்று விட்டனர்; அவன் தான் கடைசி. பணத்தையெல்லாம் எண்ணி வாங்கிக் கொண்டார். அவனுக்குரிய கமிஷன் நாலு ரூபாயையும், சில்லறையையும் எண்ணிக் கொடுத்தார்.

“சரி; பத்திரிகைக் கணக்கெல்லாம் தீந்து போச்சு. கொடி கணக்கு என்னா? எத்தனை கொடிடா வித்தே?” என்று கேட்டார் முதலாளி.

“இருநூத்திமூணு கொடி வித்தேன் மொத்தம்! அப்பப்ப பணம் கட்டிட்டேன்.”

“உனக்கு என்ன வேணும்?”

“ஒரு கொடி குடுங்க போதும்!” என்றான் ராஜசேகரன். அதற்குமேல் அவரை எதற்குமே வற்புறுத்த அவன் மனம் விரும்பவில்லை—அவன் செய்திருந்த அந்தக் காரியத்தினால்!

பின்புறத்து ஷெல்பிலிருந்து முதலாளி ஒரு பொட்டணத்தை எடுத்துக் கொடுத்தார் ராஜசேகரனிடம். கொடுத்து வீட்டு, “பிரித்துப பாருடா, மெயிலு” என்றார் சந்தோஷம் பொங்க.

ராஜசேகரன் பிரித்தான்; அதனுள்ளே ஒரு பட்டுக் கொடி மடித்து வைக்கப்பட்டிருந்தது. கொடியில் வீசிய பளபளப்பு அவன் முகத்திலே 'டால்' அடித்தது.

“திருப்தியாயிடிச்சாடா?” என்று கம்பீரமாய்க் கேட்டார் முதலாளி.

ராஜசேகரன் நெஞ்சு அடைத்துக்கொண்டிருந்தது. அவன் தேகம் மயிர்க்கூச்செறிந்துகிடந்தது. சந்தோஷத்தினால் ஏற்பட்ட ஆனந்த பாஷ்பமும், தன் துரோகச் செயலால் தன் உள்ளத்திலிருந்து பொங்கிப் பொங்கி வந்த அழுகையும் அவன் கண்களில் கங்கையாய் வர்ஷித்துக்கொண்டிருந்தன.

“ஊம்” என்று தலையசைத்துக்கொண்டே கடை வாசலை விட்டு நகர்ந்தான். கூனிக்

குறுகிக்கிடந்த அவன் தேகம் அந்த உத்தமர் முன்பு தரித்து நிற்க இஷ்டப்படவில்லை.

5

வழி நெடுகச் சிரித்துக்கொண்டு போன ராஜசேகரனுக்கு இன்னது செய்வதென்றே புரியவில்லை. தன் காரியத்துக்காகத் தன்னையே மிகவும் நொந்துகொண்டான். அவர் முன்பு அந்தப் பணத்தை வைத்து அவர் காலில் விழுந்து கதறாமற் போனோமே என்று எண்ணினான். இப்போதுகூட ஒன்றும் மோசமில்லை; போய் அப்படியே செய்யலாமா என்று எண்ணினான். அவன் மனம் துணியவில்லை; நடுநடுங்கியது உடல் பூராவுமே. தன் லக்ஷியம் கைகூடியும் தன் மனம் சமாதானமடையவில்லையே என்று நினைத்தான். 'மறுநாள் எப்படி இந்த மனக்கறையுடன் கொடி வணக்கம் செலுத்துவது? திருட்டுத்தனம் செய்வதுதானா சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்குரிய வழி' என்று எண்ணிப் பார்த்தபோது அவனுக்கு அவமானமாக இருந்தது.

தூரத்தில் ஏதோ 'கியாஸ்' லைட்டுகளுடன் ஒரு கூட்டம் முன்னேறிவருவது தெரிந்தது. என்னவென்று நிதானித்துப் பார்த்தான். கூட்டத்தை அவன் அடைந்தபோது, விஷயம் விளங்கியது. மறுநாள் சுதந்திரதினத்தையொட்டி ஏழை ஜனங்களுக்கு வஸ்திரம் வாங்கிக் கொடுத்து அன்னமிடுவதற்காக நிதி திரட்டும் நோக்கத்தில் இருபது முப்பது காங்கிரஸ்



தொண்டர்க்ள் தேசிய கீதம் பாடிக்கொண்டு பஜனை பண்ணிக்கொண்டே வந்தனர். கூட்டத்தின் இரு புறங்களிலும் நாலைந்துபேர் உண்டிகளை வைத்துக் குலுக்கிக்கொண்டே, "அன்னதான தருமம்" என்று கூவிக்கொண்டே போவோர் வருவோரிடம் பணம் வசூலித்துக்கொண்டிருந்தனர்.

ராஜசேகரனின் கண்கள் ஒரு கணம் தன் முடிவை எண்ணி மலர்ந்தன. அடுத்த கணம், தன்னைப் பார்த்தும் அலட்சியமாய்த் திரும்பிப் போய்க்கொண்டிருந்த உண்டிக்காரரை அருகில் அழைத்து, அந்தப் பத்துரூபாய் நோட்டை அந்த உண்டியினுள் சிரமப்பட்டுத் திணித்தான், தன் முதலாளியின் பெயரைச் சொல்லிக்கொண்டே.

சற்றுத் தூரம் சென்று கூட்டத்தைக் திரும்பிப் பார்த்தான். அவன் நெஞ்சில் சற்றுமுன் அடைத்துக் கொண்டிருந்தது இப்போது நெகிழ்ந்து கொடுத்தது. நிம்மதியாக மூச்சு விடத்தொடங்கினான் அவன்.

* * * *

மறுநாள் சூரியோதய சமயத்தில் குப்பத்து ஜனங்கள் செய்த சந்தோஷ ஆரவாரத்தினிடையே 'மெயில்' ராஜசேகரன் மகாத்மா காந்தியின் பெயரைச் சொல்லிக்கொண்டு கம்பத்தின் உச்சிக்குக் கொடியை ஏற்றினான்.

பட்டுக்கொடி பறந்து பளபளத்துக் கொண்டிருந்தது. பட்டுப்போன்ற மனமும் கொடியின் கூட ஆகாயத்தில் சந்தோஷத்துடன் பறப்பதுபோன்று உணர்ந்தான் ராஜசேகரன்.

● ● ●


# MEHTA'S SPECIALITIES

***Well-known for their efficacy and Medicinal values***

1. ***SUNDARI ELIXIR***
   **For all kinds of female irregularities in menses and a great uterine tonic.**
2. ***PHOSPHORUS OIL***
   **A great pain relieving oil ever prepared in annals of medicine.**
3. ***MASTANA PILLS***
   **Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.**
4. ***DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA***
   **A great Blood Purifier & digestive & Potential Tonic.**

*Stocked by all important Chemists & Druggists of South India*

## K. S. MEHTA & CO.

**250, China Bazaar, MADRAS.**

# பெண்களுக்கு மட்டும்

*ஷிபாலி செளத்ரி — சாரி*

## தபால் பெட்டி—,

சுசிலாவின் பதில்களை மொத்தமாய் இங்கே கொடுக்கிருள்; சகோதரிகளுக்குப் பிரயோஜனமாயிருக்கு மென்பதில் சந்தேகமில்லை!

(1) பழுப்புநிற — **Brown** ஜோடுகள் நுனியில் கீறல்கள் கோடுகள் விழுந்து பழசாய்த் தெரிந்தால், சிறிது அயோடின் **Iodine** திராவகத்தை ஒரு தட்டில் ஊற்றி, சிறிய பிரஷிஞல் கோடுகள்மீது தடவிக் காயவையுங்கள். பிறகு மறுபடி ஒரு தடவை இதேமாதிரி பூசி அதுவும் காய்ந்தவுடன் வழக்கம்போல் பாலிஷ் போடவும்.

(2) தபாலுக்குப் பார்சல் கட்டி அனுப்பும் கயிற்றை முன்ஞடியே நனைத்து ஈரமாக்கிப் பார்சலைக் கட்டவும். கயிறு காய்ந்ததும் பார்சலை இறுக்கிப் பிடித்துக்கொள்ளும். இந்த யோசனை எனக்கு மிகவும் உபயோகமாயிருக்கிறது.

(3) துணியில் படும் எண்ணெய்க் கறைகளை நீக்க எவ்வளவோ உபாயங்களில் இதுவும் ஒன்று. செய்து பார்க்கவும். நீலகிரித் தைலத்தை—யூகலிப்டஸ் ஆயில்—சுத்தமான பிளானல் துணியில் எடுத்து அழுக்கான இடத்தில் தடவித் தேய்க்கவும். கறை நீங்கிப்போகும்.

(4) சீஸாக்களின் கல் கார்க்குகள்—**Glass Stoppor**—சில வேளைகளில் நீக்க முடியாமல் பிடித்துக்கொள்ளும்பொழுது கையாளும் உபாயங்களில் இதுவும் ஒன்று! இன்னொருவர் கையில் சீஸாவைப் பிடித்து கொள்ளச்செய்து, ஒரு கயிற்றை அதன் கழுத்தில் சுற்றி, தயிர் கடைவதுபோல் முன்னும் பின்னும் இழுக்கவும். இதனுல் ஏற்படும் உஷ்ணம் கண்ணுடியை விரியச் செய்து, அடைப்பும் எடுபட்டுப்போகிறது.

(5) நிலாவில் படுத்து உறங்குவதால் என்ன கெடுதல் உண்டாகும் என்று ஒரு சகோதரி கேட்கிருள்; எனக்குத் தெரிந்த வரையில் பிரமாதமாக ஒன்றுமில்லையென்றுதான் சொல்லுவேன். யாராவது இம்மாதிரி சொல்வதைக் கேட்பது வேண்டுமானுல் கெடுதல் செய்யும்; நிலாவினுல் தீங்கு ஏற்படாது! ஒவ்வொரு இரவும் லக்ஷக்கணக்கான பிராணிகள் நிலவில் உறங்கவில்லையோ? மனிதனுக்குமட்டுமா பரந்த வெளியில் படுத்துத் தூங்குவது கெடுதல் செய்யும்? சூரியனிடமிருந்து பெறும் சந்திரனின் குளிர்ச்சியான வெளிச்சமல்லவோ நிலா?

சுசீலா

## சில சீனப் பழமொழிகள்

மரம் வாங்கக் காட்டுக்குப் போகவேண்டாம்.

மீன் வாங்கவும் குளத்தங்கரைக்குப் போகவேண்டாம்.

தந்தம் ஒரு எலியின் வாயில் இருந்து வரவில்லை.



மிகைப்படுத்துவது என்றால் ஒரு பாம்பின் படம் வரைந்து அதற்குக் கால்கள் போடுவது.

போக்கிலியைத் தீமை செய்யத் தூண்டுவது குரங்குக்கு மரம் ஏறப்பழக்குவது போல்.

சொந்த சௌகர்யத்துக்காகக் காரியங்கள் செய்து கொள்வதில், பிறருக்கு அசௌகர்யம் விளைவிக்காதே.

பணம் நிறைய இருந்தாலும் விலைக்குக் கொள்ளமுடியாத பொருள்களை எப்படி வாங்குவாய்?

மன்னனுக்கும் ஏழை உறவுகள் உண்டு.

சொத்துள்ளவனுக்கு அழக்காரணம் உண்டு; ஏழை நிம்மதியாய்த் தூங்குவான்.

ஏழை குறை கூறக்கூடாது. பணக்காரன் பெருமை அடித்துக்கொள்ளக் கூடாது.

நன்மை செய்யும்போது விளைவை எண்ணாதே; உன்னை ஒருவன் பேச்சால் கெடுத்தால் பயப்படாதே; நீ கெடுதி செய்யப் பயப்படு.

உன்னை முதலில் திருத்திக்கொள்ளு; பிறகு மற்றவரைக் கவனி!







## சமையல் பகுதி.

(1) சர்க்கரைவள்ளிக் கிழங்கினால் செய்த இந்தத் தித்திப்புச் சோமாசிகள் ஒரு தனி ருசியாக இருக்கும். கிழங்கை வேகவைத்து, தோல் நீக்கி மசித்து, சுமார் ½-வீசை கிழங்குக்கு ஒரு டேபிள் ஸ்பூன் என்கிற அளவில் அரிசி மாவுடன், ஏலப்பொடி போட்டுச் சேர்த்துப் பிசைந்து கொள்ளவும். சிறிய உருண்டைகள் உருட்டி, பூரிபோல் பரத்திக்கொண்டு, மத்தியில் தேங்காய்ப் பூர்ணம் வைத்து, சோமாசி வடிவத்தில் நன்றாக மூடிவிடவும். நெய்யில் இவைகளைப் பொரித்துச் சர்க்கரைப் பாகில் தோய்த்து எடுக்கவும்.

பூர்ணம்:– தேங்காய் துருவி, சர்க்கரை அல்லது வெல்லம் சேர்த்துக் கெட்டியாய் கிளறவும்.

பாகு:– கால் வீசை சர்க்கரைக்குக் கால்படி ஜலம் சேர்த்துக் கெட்டிப் பாகு ஆகும் வரை காய்ச்சிக்கொள்ளவும்.

(2) **சிக்கனம்!**

வெயில் காலத்தில் இதைச் செய்யலாம். உடைந்து, மிருதுவாய்ப்போய், டப்பாவின் அடியில் தங்கிவிடும் பிஸ்கோத்துத் துண்டங்களை வீணாக்காதீர்கள். ஒரு கண்ணாடிக் கிண்ணத்தில் பிஸ்கோத்துத் துண்டங்களைத் தூளாக்கிப் போட்டு, மேலே பழத்துண்டங்கள், ஜாம் இவற்றினால் நிரப்பவும். வாழைப்பழத்

துண்டங்களை அப்படியேயும், ஆப்பில், பேரி இவைகளைத் துண்டித்துச் சிறிது வேகவிட்டும், கிஸ்மிஸ் ஏப்ரிகாட் முதலிய உலர்ந்த பழங்களையும் இதில் சேர்க்கலாம். கிண்ணத்தை ஐஸில் வைத்துக் குளிரச் செய்து, சாப்பிடும் சமயத்தில் மேலே கெட்டிப்பால் ஊற்றி உபயோகிக்கவும்; தேவாமிர்தம் போல் இருக்கும்.

¼ படி பாலை இரண்டு டீஸ்பூன் சர்க்கரை சேர்த்து ½ படி ஆகக் கெட்டியாக்கிக்கொள்ளவும்; இதுதான கெட்டிப் பால்!

(3) **போஜனக்குறடா!** (தயிர் சாதத்தைக் குறடுபோட்டு இழுப்பதுபோல் உள்ளே செலுத்தும் இந்தத் துவையலுக்குப் பெயர் பொருத்தமில்லையா?) மிளகாய்த் தொக்கு என்று நாங்கள் சொல்லும் இதைப் பச்சைமிளகாய் மலிவாய்க் கிடைக்கும் நாளில் செய்யவேண்டும். ஒரு வருஷம் வேண்டுமானாலும் வைத்திருக்கலாம்; கெட்டுப்போகாது. அவ்வப்போது தோசை இட்டிலி இவைகளுக்குத் தனியாகச் சட்ணிசெய்ய வேண்டியதில்லை.

½ வீசை பச்சைமிளகாய்.

ஒரு நார்த்தங்காய் அளவு புளி.

வெல்லம் 10 அச்சு.

பெருங்காயம் ½ பலம்.

நல்லெண்ணெய்.

உப்பு.

பச்சைமிளகாயைச் சுத்தம்செய்து காம்புகளை நீக்கிக்கொள்ளவும். ஒரு பாணலியில் ஒரு கரண்டி நல்லெண்ணெய் ஊற்றி மிளகாயை அதில் நன்ருய் வதக்கவும். ஆறின பிறகு ஆட்டுக்கல்லில் மிளகாய், உப்பு, புளி, வெல்லம் பெருங்காயம் இவைகளைப் போட்டு வெண்ணெய் போல் அரைத்து ஒரு கரண்டியின் உதவியால் எடுத்து, தொக்கை ஒரு ஜாடியில் போட்டுவைக்கவும். தேவையானபோது, சிறிதளவு எடுத்து, கடுகு தாளித்து, தொக்கைக் கொஞ்சம் வதக்கி உபயோகிக்கவும். **மிகக் குறைந்த** அளவே சாப்பிடவேண்டும் என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

நவராத்திரி பண்டிகையை முன்னிட்டு
பட்டுப் புடவைகள் பாவடைகள்,
&
நூல் ஜவுளிகள்.
ஏராளமாக குறைந்த விலையில்
தருவித்துள்ளோம்.
இன்றே விஜயம் செய்யவும்
ருக்மணி ஸில்க்
எம்போரியம்
Phone: 58
பெரிய தெரு, கும்பகோணம்.
H. O. மயிலாப்பூர் ராதா ஸில்க் எம்போரியம்
14, சன்னதி தெரு மதராஸ் 4.
PHONE: 84188



## அழகும் ஆரோக்கியமும்!

இப்பொழுதெல்லாம் நவீனப் பெண்கள் 'க்ரீம்'களுககுப் பதிலாகக் காய்கறிச் சத்துக்களை உபயோகிக்கின்றனர். இதனால் கிட்டும் பலன் சிறிதும் குறைவானதில்லை.




கக்கிரிக்காய்த் துண்டத்தை முகத்தின்மீதும், கழுத்திலும் தேயுங்கள்; காய்ந்த பிறகு அலம்பி விடலாம். இந்தச் சிகித்சை முகத்தின் சர்மத்தைத் தளர விடாமல் இறுக்கிப் பிடிக்கவும், பளபளப்பாக்கவும் சிறந்தது. கக்கிரிக்காய் உண்பதற்குப் பிடித்தவர்கள் தோலுடன் இந்தப் பதார்த்தத்தைச் சாப்பிடலாம். தலைமயிர் கருகருவென்று வளரும்; முகத்தில் பருக்கள் நீங்கி வசீகரம் தோன்றும்!

## தையல் பகுதி.

(1) ஒன்பது வயதுள்ள விமலாவுக்கேற்ற பிராக்கு. இந்த அழகிய பூக்களையும், இலைகளையும் பிராக்கில் இந்தப் புது மாதிரியில் தையுங்கள். தனியாக ஒரு துணியில் தைத்து, பிராக்கில் சேர்க்கலாம். அதிலேயே இரண்டு சிறிய பாக்கெட்டுகள் ஏற்படுவதைக் கவனியுங்கள். பூக்களுக்கு இரண்டுவித மஞ்சள் நூல்களும், மத்திக்குக் கறுப்பும், இரண்டு நிறத்தில் பச்சை நூல்கள் இலைகளுக்கும் தேவை.

(2) இந்த அழகிய சிறிய ஜம்பர் பூப் போட்ட துணியால் ஆனது. பூக்களின் நிறத்திற்கு ஏற்ற நிறத்தில் ரிப்பன்களைப் பொறுக்கிக் கொண்டு லேசாக **tack** செய்து தோள்பட்டையிலோ அல்லது கைக்குக் கீழேயோ முடியவும். படத்தில் உள்ள சட்டை அழகாயில்லை?



# தி ஸ்ரீ வெங்கடேசா மில்ஸ் லிமிடெட்

**வெங்கடேசா மில்ஸ் போஸ்ட்**

**உடுமலைப்பேட்டை**

•

100 நெ. வரை மெல்லிய ரக நூல்கள்,
மல், காடா ரகங்கள் உற்பத்தி
செய்வதில் பிரசித்தி பெற்ற
**இந்திய ஸ்தாபனம்**

•

மானேஜிங் ஏஜண்டுகள் :—

## G. V. கோவிந்தசாமி நாயுடு அண்ட் கம்பனி



# நல்முத்துமாலை

கோமதிசுப்ரமணியம்



"கீதா போட்டிருக்கிற மாலையை எனக்கு வாங்கித்தாம்மா" என்று முரண்டியழுத பானுவின் குரல் உச்சஸ்தாயியில் புரண்டெழுந்தது. அந்த வார்த்தை உள்ளே நின்றுகொண்டிருந்த சாவித்திரியின் இதய வெளியில் நாராசமாய்ப் புகுந்து பலத்த போராட்டத்தைக், கிளப்பிவிட்டதோடு நிற்காமல் வாசலிலும் பெரிய போராட்டத்தைக் கிளப்பிவிட்டிருந்தது. இப்போராட்டம் எந்நிலையில் முடியுமோ என்கிற திகிலுடன் வெளியே எட்டிப் பார்த்தாள் சாவித்திரி.

கழுத்தில் கிடந்த நல்முத்து மாலையை இரு கைகளாலும் கெட்டியாகப் பற்றிக்கொண்டு தட்டுத் தடுமாறி ஓடிவந்த கீதாவைக் கண்டு பதறிப்போய்த் தூக்கிக் கொண்டாள் சாவித்திரி.

அத்தை கீதாவைத் தூக்கிவிடவும் பானுவின் ஓட்டம் தேங்கிவிடவே அவளது ஆவேச வெறியும் சற்றுத் தேங்கி நிற்க வேண்டிவந்தது. பானு குழந்தைதான் ஆனாலும் தன்னைச் சமாளித்துக்கொண்டாள். எப்படியாவது தான் விரும்பிய மாலை வேண்டும். அந்த மாலையைப் பெறும் யோசனை குறுக்கு வழியில் ஓடியது. சட்டென அத்தையின் புடவை முன்தானையைப் பிடித்துக்கொண்டு கொஞ்சத் தொடங்கினாள் பானு.

"அத்தை, எனக்கு கீதாவின் மாலையை வாங்கித்தா." பானுவின் கெஞ்சும் விழிகள் சாவித்திரியின் மனதைக் கலங்கச் செய்தன. இந்த மாலை தவிர வேறு எந்தப் பொருளைக் கேட்டிருந்தாலும்கூட இதற்குள் பெற்று, திருப்தியுற்றிருப்பாள். ஆனால் இந்த மாலை விஷயம் அப்படிப்பட்டதல்லவே. இந்த மாலையை எடுக்கவோ பிறருக்குக் கொடுக்கவோ எந்த அதிகாரமுமற்ற சாவித்திரியால் எப்படி அந்தக் குழந்தையைச் சமாதானப் படுத்த முடியும். அது அவள் பாத்யதைக்கு அப்பாற்பட்ட விஷயம். அவள் யோசனைக்குக் குழந்தைகள் காத்துநிற்கவில்லை. 'மாலை எனக்குத்தான்.'

'இல்லை எனக்குத்தான்' என்று அவர்களுக்குள் சொல் யுத்தம் தொடங்கிவிட்டார்கள்.

தன் குழந்தை விரும்பிக் கேட்டும் கொடுக்க மனமில்லாமல் பாசாங்கு செய்யும் மதனியிடம் வெறுப்புத் தோன்றியது, வாசலில் நின்று கொண்டிருந்த லலிதாவுக்கு. அவள் வெறுப்பு பானுவின் முதுகுக்கு நெருப்பாக மாறியது.

"அற்ப நாயே, பிச்சைக்கார நாயே, மாலை யாடி வேண்டுமுனக்கு" என்று முதுகில் பளீர் பளீரென்று இரண்டு அறை வைத்து, குழந்தை யைக் கையைப் பிடித்துக் கரகரவென்று இழுத் தாள்.

லலிதாவின் வெறிகொண்ட செய்கையால் திடுக்கிட்ட சாவித்திரி பதறிப்போய், இடுப்பி லிருந்த குழந்தையைக் கீழே இறக்கிவிட்டு, அடி படும் குழந்தையை ஆச்வாசப்படுத்த நோக்கி னள்.

"ஏன் லலிதா, இப்படி வெறிகொண்டவள் போல் குழந்தையைத் தாக்குகிறாய்; இப்படிக் கொடு குழந்தையை" என்று அவள் கைக்குள் ளிருந்த குழந்தையின் கரம் பற்றினள்.

"உன் ஜோலியைப் பார்த்துக்கொண்டு அப் பால் போ மதனி. என் குழந்தையை அடிக் கவோ உதைக்கவோ எனக்குப் பாத்யதை உண்டு."

ஆம், அவளுக்குப் பாத்யதை இருக்கிறது. குழந்தையை அடிக்கிறாள். எனக்கு மாலையைக் கொடுக்கப் பாத்யதை இல்லை. அதனல் குழந்தை அடிபடுகிறாள்.

இரண்டுக்கும் என்ன சம்பந்தம்? சம்பந்தம் இருக்கிறதோ இல்லையோ, பாத்தியதை என்ற ஒரே காரணத்தால் குழந்தை அடி படுகிறாள்.

குழந்தையைத் தெய்வத்துக்குச் சமம் என்கிறார்கள். இங்கே தெய் வம் அடிபடுகிறது. அடிபடும் தெய் வத்தைக் காக்க அவள் மனம் துணிகிறது, ஆனல் செயல் பலிக் கவில்லை.

சாவித்திரியின் பரிவு எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போலிருந்தது. நன்மையை நாடித் தரவேண்டிய பரிவு அதிக துன்பத் தைத் தேடி வந்தது. அவள் பரிவு கொண்டதைச் சாக்காகக் கொண்டு பின்னும் ஐந்தாறு அடிகள் அந்தப் பிஞ்சு முதுகைப் பதம் பார்த்தன. பானுவை அறைந்த ஒவ்வொரு அறையும் சாவித்திரியின் நெஞ்சில் அடிக்காமல் அடித்தது என்பதைச் சாவித்திரி உணர்ந்துகொண்டுதா னிருந்தாள்.

இதுவரை எதுகேட்டாலும் இல்லையென்று சொல்லாமல் கொடுத்துவந்த உனக்கு இன்று மட்டும் என்ன வந்துவிட்டது. திடீரென்று மாறுபட்ட மனத்திற்குக் காரணமென்ன என்று கேட்டது போலிருந்தது லலிதா நின்ற ஆக்ரோஷ நிலை.

மதிப்பற்ற தனமாகத் தரமறுத்ததற்குத்தண் டனையாக இந்தக் குழந்தை அடிபட்டு அலறு வதைப் பார்த்து மனம் துடித்துப் போ என்று சொல்லாமல் சொல்லியபடி மேலும் மேலும் அறைந்துகொண்டே குழந்தையைக் கையைப் பிடித்து, கரகரவென்று இழுத்துச் சென்றாள் சாவித்திரியின் நாத்தனர்.

துடித்துச் செல்லும் குழந்தையின் குரல், தெருமுனை திரும்பியும் காற்றோடு கலந்து வந்து செவிகளில் பேயறைவதுபோல் அறைந்து கொண்டிருந்தது. அணு அணுவாய் மங்கி மறையும் ஓலத்தை உற்று நோக்கிய வாறே வாசற்படியிலேயே நின்றபடி நின்று கொண்டிருந்தாள் சாவித்திரி.



2

"என்னவழி மேல் விழி வைத்து யாரை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறாய். நான் வந்ததுகூடத் தெரியாமல்" என்ற அவள் கணவனின் குரலைக்கேட்டு, சுயநினைவு பெற்றாள்.

பேயறைந்தது போல் நின்ற அவள் வதனத்தைக் கண்டு திடுக்கிட்ட ராமன், "ஏன், சாவித்திரி, உன் முகம் ஏன் இப்படி இருக்கிறது" என்று பதறினான்.

"ஒன்றுமில்லை" தலையைத் தாழ்த்திக்கொண்டாள், கலங்கிய விழிகளை அவன் கண்டுவிடப் போகிறானே என்கிற பயம்.

"ஒன்றுமில்லையா. என்னிடம் மறைக்கப் பார்க்கிறாய்" அவள் முகத்தை நிமிர்த்தினான். வாசலில் தந்தையின் குரலைக்கேட்டுத் துள்ளிக் குதித்து ஓடிவந்தாள் கீதா. அவள் வெற்றியின் மகிழ்ச்சியைத் தந்தையிடம் தெரிவிக்கும் ஆவலில் ஒவ்வொரு நிமிஷமும் துடித்துக் கொண்டிருந்த கீதா 'அப்பா அப்பா' என்று ஓடிவந்து காலைக் கட்டிக் கொண்டாள்.

ஆவலுடன் குழந்தையைத் தூக்கிக்கொண்ட ராமன் என்ன நடந்தது என்பதின் அறிகுறியாகத் தலையசைத்தான் கீதாவிடம்.

அவன் தலையசைப்பின் அர்த்தத்தை அறிந்தோ அறியாமலோ தனது மனப்பொருமலை வெளியிட்டாள் கீதா.

"பானு இந்த மாலையை கேக்கறுப்பா..."

விஷயம் புரிந்துவிட்டது.

"ஓகோ இதற்குத்தான் இத்தனை கலக்கமாக்கும்!' என்று விஷமமாகச் சிரித்தான்.

"அத்தை திட்டு திட்டென்று திட்டினுப்பா..."

"திட்டினளா, உன் அம்மா சீதனச் சொத்தென்று கொடுக்கமாட்டேனென்றாளாக்கும்..." இந்த வார்த்தை பொருமிக்கொண்டிருந்த சாவித்திரிக்குச் சிற்றத்தை உண்டுபண்ணிற்று.

"என்னுடைய சீதனச் சொத்து ஒன்றுமே உங்க தங்கைக்கு கொடுக்கல்லையாக்கும்."

விக்கலும் விம்மலுமாக வார்த்தைகள் வெளிப்பட்டன. "இல்லையென்று யார் சொன்னது? இது உன் அம்மா அருமையாகக் கொடுத்தது. அதுவும் சாகுந்தறுவாயில் பேத்திக்கென ஆசையாகக் கொடுத்தது." அவன் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் அவள் மாலையைத் தர மறுத்த உண்மைக் காரணத்தைத் தேடிக்கொடுத்தது.

பொங்கிப் பெருகிய அழுகையை அடக்க முடியாமல் உள்ளே ஓடிவிட்டாள் சாவித்திரி. அவளது நினைவுகள் எங்கெங்கோ சென்று கலந்தன.

3

சாவித்திரி மீனாக்ஷியம்மாளின் செல்வப் புதல்வி. சிமந்த புத்திரி, அருந்தவப் புதல்வி எல்லாம் அவள் ஒருத்தியேதான். சற்றே பணக்காரர் கோஷ்டியைச் சேர்ந்த மீனாக்ஷியம்மாளுக்கு நெடுநாளாக ஏற்பட்டிருந்த பிள்ளையில்லாக் குறையைத் தீர்த்த சாவித்திரிக்கு எவ்விதக் குறையும் ஏற்படக்கூடாதென்று கங்கணம் கட்டிக்கொண்டவள் போல் எவ்விதக் குறையுமின்றி வளர்த்து விட்டாள் மீனாக்ஷி? பள்ளிப் படிப்பு முடிந்து வாழ்க்கைப் பாடம் ஆரம்பமாகவேண்டிய காலம்.

அந்தப் பருவம்தான் மீனாக்ஷியம்மாளைச் சற்றுக் கவலைக்குள் ஆழ்த்துவதாயிருந்தது. தன் மகளை வளர்த்த அருமை தெரிந்து போற்றிப் பேணுகிற மாமியாரும் கணவனும் அமைய வேண்டுமே என்று பரிதவித்துக்கொண்டிருந்தாள். அவள் தவிப்பை அறிந்துதானோ என்னவோ புருஷன் வழி வர்க்கம் என்று எவ்வித பிக்கல் பிடுங்கல் ஒன்றுமே யில்லாத ராமன் மாப்பிள்ளையாகவந்து வாய்த்தான், மாப்பிள்ளை கண்ணுக்கு அழகுதான். ஏதோ சுமாரான உத்யோகமும் பார்க்கிறான். அவன் உத்யோகம் பார்க்கும் பணத்திற்குத் தன் மகளைத் தவிர வேறு செலவுக்கு ஒருவருமில்லை. ஒரே ஒரு தங்கை இருக்கிறவளும் பம்பாயோ பூனாவோ பேர்தெரியாத ஊரில் இருக்கிறாள். அடிக்கடி வந்து தன் மகளை ஹிம்சைப் படுத்தமாட்டாள் என்கிற இரட்டிப்புச் சந்தோஷத்தில் கலியாணத்திற்குக் கொஞ்சம் அதிகமாகவே பணம் செலவிட்டு வீட்டு வாசலிலேயே நடத்திவைத்தாள்.

உலகத்தில் நாம் நினைப்பதுபோலவே எல்லாம் சந்தோஷமாகவே முடிந்துவிட்டால் அப்புறம் வாழ்க்கையேது. வாழ்க்கையின் ரஸாபாஸங்களேது. உலகத்தைத்தான் உணரமுடிவதேது. எதிர்பார்த்தது நடவாமல் ஏமாறுவதுதானே வாழ்க்கை. ஏமாற்றத்தின் முடிவுதானே இன்பத்திற்கு அடி. அவள் கொண்ட சந்தோஷத்தை அதிக நாள் நிலை நாட்டவொட்டாமல் இது நாள்வரை அயல் தேசங்களில் வேலையாகி இருந்த சாவித்திரியின் நாத்தனார் புருஷனை ராமன் வசிக்குமிடத்திற்கே மாற்றிவிட்டார்கள். இந்த விஷயம் மீனாக்ஷியம்மாளின் வயிற்றில்

லேசாக வேதனையில் நஞ்சைக் கலந்தது போலிருந்தது. என்றாலும் ஆரம்பத்தில் அதுபற்றிப் பெரிதும் கவலைப்படவில்லை. 'வந்தால் வந்துவிட்டுப் போகிறாள். நம் மகளும் அவளும் ஒன்றாகவா இருக்கப் போகிறார்கள்?' என்று அசட்டையாக இருந்துவிட்டாள். ஆனால் அவள் நெஞ்சில் கலந்த நஞ்சு இருந்திருந்து வேலை செய்யத் தொடங்கியது.

மீனாக்ஷியம்மாளின் பெண்தான் சாவித்திரி என்றாலும் குணபாகங்களில் இருவருக்குமிடையே வெகு வித்தியாசம் தோன்றும். பிறந்த வீட்டு மனிதர்கள் என்று அம்மா ஒருத்தியாவது வந்து போய்க்கொண்டிருந்தாள். ஆனால் புகுந்த வீட்டு மனிதர்கள் அப்படி ஒருவருமில்லையே என்ற ஆதங்கம், லலிதாவின் வரவினால் தனது வெகுநாளைய குறை தீரப்போவதாக நம்பினாள். அந் நம்பிக்கையின் அஸ்திவாரமாய் அவளைத் தன்னுடனே இருக்கச் செய்யத் திட்டமும் போட்டுக்கொண்டிருந்தாள்.

சாவித்திரியின் கணவன் மீனாக்ஷி அம்மாளின் குண விசேஷத்தில் நன்கு பழகியவனாதலால் முன்னேற்பாடாகத் தனி வீடு ஏற்பாடு செய்துவிட்டான்.

இந்த விஷயம் சாவித்திரியின் மனதில் பெரும் ஏமாற்றத்தை உண்டுபண்ணியதென்றாலும் ஒருவருக்கொருவர் அடிக்கடி போக்குவரத்து வைத்துக்கொண்டு அந்த ஏமாற்றத்திற்கு ஈடு செய்துகொண்டாள்.

சாவித்திரியின் வீட்டிற்கு வந்திருந்த மீனாக்ஷியம்மாள் மகளின் பயித்தியக்கார நிலையைக் கண்டு மனதிற்குள் திகில் கொண்டாள். ஆனாலும் வெளியில் சிரித்துப் பூச முயன்றாள்.

"சாவித்திரி, இது என்ன பயித்தியக்காரப் போக்கு? உன் குழந்தைக்கு எது வாங்கினாலும் பானுவுக்கும் வாங்குவது, உன் வீட்டுக்கு எது வாங்கினாலும் உன் நாத்தனாருக்கு வாங்குவது. இந்தப் பைத்தியம் முற்றினால் எத்தனை கோரத்தில் முடியுமென்பதை உணர்ந்திருக்கிறாயா?" என்று அதட்டினாள்.

வழக்கம்போல் கலகலவென்ற சிரிப்புடன் லலிதா கையில் குழந்தையுடன் மன்னியின் வீடு வந்து சேர்ந்தாள். அவள் சிரிப்பின் ஒளியைவிட அவள் கழுத்தில் அணிந்திருந்த நெக்லஸின் ஒளி மீனாக்ஷியம்மாளின் கண்ணைக் குத்தியது.

அது அவள் தன் மகளுக்கு ஆசையுடன் பார்த்துப் பார்த்துச் செய்து போட்டது. அதை மற்றொரு பெண் போட்டுக்கொண்டிருப்பதா? ஒரு வேளை அது அவளுடையதாக இருக்குமோ?

இருக்க முடியாது. போனதடவை வந்திருந்தபோது மாலை அவள் கழுத்தில் மின்னவில்லையே. மேலும் நடுவில் இருக்கும் பச்சை 'நீ பார்த்து செலக்ட் பண்ணிய கல்லாக்கும் நான்' என்று அவளைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டுவது போலிருந்தது. இருக்கட்டும், இந்தப் பெண்ணின் புத்திக்குச் சுவரில் முட்டிக் கொண்டால்கூடத் தீராதுபோலிருக்கே என்று மனம் வெதும்பினாள்.

தனது பொருமலைத் தீர்த்துக்கொள்ளப் புழுவாய்த் துடித்தாள். ஒருவழியாய் வெகு நேரத்துக்கப்பால் வந்தவள் புறப்பட்டுப் போய் விட்டாள். அவள் போவதற்காகத் துடித்துக் கொண்டிருந்தவள்போல் அவள் தலை மறையவும் மகளிடம் சீறினாள்.

"இங்கே பாரம்மா. என் மாலையைக் கொடுத்த மறுதினமே அதைவிட உயர்ந்த ரகத்தில் உன் மருமகன் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து விட்டார்களம்மா?" கணவனின் பெருமையைப் பூரிப்புடன் வெளியிட்டுக் கொண்டாள் சாவித்திரி.

அதனால் மீனாக்ஷியம்மாவின் கொதிப்பு அடங்கிய பாடில்லை; கொந்தளித்துக் குமிழியிட்டது. "ஆம் சாவித்திரி அது, உனக்கு உயர்வாகப் போய்விட்டது. பணத்தில் வேண்டுமானால் அது உயர்வாக இருக்கலாம் ஆனால் அன்பில்..."

தன் அன்பளிப்பை மகள் செய்த அலக்ஷியம் அவள் மனதைப் பாராங்கல்லாய் அழுத்தியது. அழுத்தும் வேதனையுடனே அதிக நாள் தாமதிக்க மனமில்லாதவளாய் ஊரைப் பார்க்கப் புறப்பட்டு விட்டாள். அதன்பின் அவள் தன் மகள் வீட்டைத் தேடி வரவேயில்லை.

சாவித்திரிதான் அவளைத் தேடிக்கொண்டு சென்றாள். எத்தனை போகத்துடன் புருஷன் வீட்டில் வாழ்ந்தாலும் பிறந்த வீட்டு வாழ்க்கை இடையிடையே அனுபவிக்காவிட்டால் பெண்களின் வாழ்க்கையில் ரஸனையைக் காண முடிவதில்லை. சாவித்திரி மட்டும் பெண்ணினத்திற்கு விதிவிலக்கல்லவே.

பிறந்த வீட்டிற்குச் சென்று ஒரு மாதம் தங்கி மனத்தை நிறைத்துக்கொண்டாள்.

திரும்பும்பொழுது பல அன்பளிப்புப் பொருள்களையும் ஏற்றுக்கொண்டு, முக்யமாக மீனாக்ஷியம்மாளின் அன்புப் போதனைகள் வெகுவாகப் பெற்றுக்கொண்டு வீடு வந்து சேர்ந்தாள்.

தாயாரின் அன்பளிப்பு வீடுவரை வந்து சேர்ந்தது. அவள் அன்புப் போதனையோ ரயி

லடியிலேயே தங்கிவிட்ட தென்றுதான் சொல்லவேண்டும். இல்லையென்றால் தாயார் புதிதாகச் செய்து கொடுத்திருந்த வெள்ளிப் பவுடர் டப்பாவை நாத்தனார் கேட்டபோது தயங்காமல் எடுத்துக் கொடுத்திருப்பாளா?

கைநீட்டிக் கொடுக்கும்பொழுது லேசாகத் தாயாரின் போதனைகளின் நினைவு தோன்றிச் சற்றே தயக்கமுறச் செய்தது. மறுகணமே டப்பாவின்மேல் ஆசையுடன் நோக்கி நிற்கும் நாத்தனாரின் முகம் அவள்தயக்கத்தைப் புறங்காட்டச்செய்தது. அதேபோல் வேறு வாங்கித் தருவதாகச் சொன்னால் நாத்தனார் உள்ளம் ஒடிந்துவிடுவாள். தான் கொண்டுவந்த டப்பாவைத் தன் தாயாரின் அன்பளிப்பை லலிதாவுக்குக் கொடுத்துவிட்டுத் தாயார் அறியுமுன் கணவனிடம் கேட்டு அதுமாதிரி வாங்கி வைத்து விடலாமென்று நம்பிக்கைத் துரோகம் செய்யத் தூண்டியது.

சோதனை வரும் காலத்தில் நம் முயற்சிகளுக்கோ சாமர்த்தியத்திற்கோ இடம் வைத்திருப்பதில்லை.

சொல்லி வைத்தாற்போல மறுநாள் புறப்பட்டு வந்து விட்டாள் மீனாக்ஷியம்மாள் பெண் வீட்டிற்கு.

"நீயும் குழந்தைகளும் புறப்பட்டு வந்த பிறகு வீடு வெறிச்சோடிப் போய்விட்டது. தனிமை என்னைப் பைத்தியமாக்கி உன்னிடம் கொண்டு சேர்த்துவிட்டது" என்று கூறிக் கொண்டே வந்து சேர்ந்துவிட்டாள். அம்மாவும் வந்ததும் வராததுமாய்த் தன் அன்பளிப்புச் சாமான்களைக் கண்காணிக்கப் போகிறாளென்பதைக் கனவிலும் கருதவில்லை சாவித்திரி. ஆனால் அதுவே கண்ணும் கருத்துமாய் வந்திருக்கும் மீனாக்ஷியம்மாளின் கண்ணுக்கு மறைந்த பவுடர் டப்பா மாறிவிட முடியுமா?

எங்கே அந்த பவுடர் டப்பா. உன் நாத்தனாருக்குக் கொடுத்து விட்டாயோ! என்று கேட்கும் ஸ்ரீ அம்மாவிடம் 'ஆமா' என்று சொல்வதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும். அம்மா வருவதற்குள் வேறு வாங்கி விடலாமென்ற நம்பிக்கை இருந்தது. அந்நம்பிக்கையைத் தகர்த்தெறிந்துவிட்டது அம்மாவின் வருகை. ஆமாம், என்ற வார்த்தை மீனாக்ஷியம்மாவின் இதயத்தில் ஓங்கி ஒரு உதை விட்டது போன்றிருந்தது. ஆமாம், எத்தனை அலக்ஷியம் எவ்வளவு ஏளனம். நான்தான் அன்பு அன்பு என்று அடித்துக்கொள்கிறேன். அவள் அன்பை அலக்ஷியம் செய்கிறாள். இதயத்தில் அன்புக் கிடமிருந்தால் அன்பின் சின்னமாகிய நான் கொடுக்கும் ஒவ்வொரு அன்பளிப்பையும் உதாசீனம் செய்ய முடியுமா? அன்பற்ற அவளுக்காக அன்புருகிச் சாகும் தன் மடத்தனத்தினின்றும் விழித்தெழுந்துவிட்டதாகக் கருதி அவ் வீட்டைவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டாள். தன்னைப் புறக்கணித்ததாகக் கருதும் மகளைப் புறக்கணித்துப் புறப்பட்ட பிறகுதான் அவள் மனம் நிம்மதி அடைந்தது.

அன்று போனவள். அதன்பின் மரணப் படுக்கையில்தான் தாயும் சேயும் சந்தித்தனர். தன் நிலை முட்டிப் போகும்வரை மகளுக்கு அறிவிக்காமலே இருந்துவிட்டாள். தன் அன்பை அலட்சியம் செய்தவள் என்று அவள் அங்கம் ஒவ்வொன்றும் உருகிக்கொண்டேயிருந்தது.

தாயாரின் நிலையைக் கேள்விப்பட்ட சாவித்திரி மரணப்படுக்கையிலிருந்த தாயாரைச் சந்திக்கும் பாக்கியத்தைத் தேடி ஓடோடியும் வந்தாள். பலவந்தமாய் அடக்கி வைத்திருந்த அன்பு ஊற்று மகளைக்கண்ட வேகத்தில் அணைகடந்து பெருக்கெடுத்தோடத் தொடங்கியது. இருவர் மனமும் அன்பில் பொங்கி, கண்ணீராகப் பெருகி வழிந்துகொண்டிருந்தது. ஒரு கணம் இன்னும் ஒரே கணம்தான்.

'சாவித்திரி' அவளது ஒவ்வொரு வார்த்தையும் அன்பின் ஆழத்தில் தோண்டி எடுத்து வந்தது.

'அம்மா' அவள் நெஞ்சை விம்மி வெடித்துவிடும் போலழுதாள். தன் மெலிந்த கரங்களால் தட்டுத்தடுமாறி தலையணைக்கடியிலிருந்து எதையோ எடுத்தாள் மீனாக்ஷியம்மாள்.

அவள் துவண்ட கரங்களில் நல் முத்துமாலை பல கலரில் பளிச்சிட்டுத் தொங்கிக்கொண்டிருந்தது.

பக்கத்தில் நின்ற பேத்தி கீதாவை நடுங்கும் கரங்களால் அருகிலிழுத்துத் தட்டுத் தடுமாறி மாலையை அவள் கழுத்திலணிந்தாள். வேதனையுடன் தன் முகத்தை நோக்கும் தாயாரின் வேண்டுகோளை அவள் கூறாமலே அறிந்துகொண்டாள் சாவித்திரி. தேங்கி நின்ற அவள் விழிகள் என் கடைசி அன்பளிப்பையாவது அலட்சியம் செய்துவிடாதே என்று கேட்பதுபோலிருந்தது.

"எந்தக் காரணத்தைக்கொண்டும் கீதாவின் கழுத்தைவிட்டு இந்த மாலை இடம் பிறழாதம்மா" என்று சாவித்திரி கூறவும் அவள்

வார்த்தையைக் கேட்டுத் திருப்தியடைந்தவள் போலக் கண்ணை மூடிவிட்டாள் மீனாக்ஷியம்மாள்.

4

கடைசி காலத்தில் தன் தாயாருக்குக் கொடுத்த வாக்கைத் தட்டமாட்டாமல் பானு மாலை வேண்டிக் கேட்டபோது தர மறுத்து நின்றாள். ஆனால்...மாலைக்கா, அந்தக் குழந்தை பட்ட அடி...அத்தனை அடியிலும் மாலை கிடைத்திருந்தால் அக் குழந்தையின் மனம் எத்தனை பூரித்திருக்கும். மாலையும் கிடைக்காமல் அடியும் வாங்கிச் செத்த அக் குழந்தை எப்படி மனம் வெதும்பித் துடிக்கும். அதை நினைத்தபோது அவள் தீர்மானம் லேசாக இடம் பிறழத் தொடங்கியது. குறுக்கே அம்மாவின் சாந்தியுற்ற முகம்.

இறந்துபோன அம்மாவின் ஆத்ம திருப்திக்கும். உயிருடன் மன்றாடும் அக்குழந்தையின் ஆத்ம திருப்திக்குமிடையே தவித்துத் திண்டாடினாள் சாவித்திரி.

அவள் மனதிற்கும் மனச்சாட்சிக்குமிடையே நீண்டநேரப் போராட்டத்திற்குப் பின் உயிருடனுள்ள குழந்தையின் ஆத்ம திருப்தியே வெற்றிபெற்றது.

கீதாவின் கழுத்தில் கிடந்த மாலையைக் கையில் கழற்றிப் பிடித்தவண்ணம், நாத்தனாரின் வீட்டை நோக்கி நடை போட்டாள் சாவித்திரி.





# அமரகவி

சே. எஸ். நாகராஜன்

உண்மைக் கவிஞன் என்றால் அவனுக்கு முதலாவதாகப் பரந்தநோக்கு, இரண்டாவதாக மனிதனின் இயல்பை நன்றாக அறிந்து பாடுந்திறன், மூன்றாவதாக ஊனக்கண், கற்பனைக்கண், கருத்துக்கண் ஆகிய மூன்று கண்களையுங் கொண்டுபொருள்களினூடே கூர்ந்து ஆராயும் ஆற்றல், நான்காவதாக மனிதனையும் கடவுளையும் இணைக்கும் உண்மைக் கவிதை—இவை. இன்றியமையாதவை. ஒரு கவிஞன் இங்ஙனம் பண்பட்டிருப்பானேல் அவன்கவிதை என்றும் அழியாது; கற்போர் மனத்தை விட்டு அகலாது; அன்புப் பெருக்கால் பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழி பெற்றுப் பதவிகொள்ளச் செய்யும் தகைமையதாகும்.

கவிதையென்றால் பரந்த நோக்கு அதற்கு அவசியம். தமிழ் நாட்டையும் மொழியையும் உய்விக்க வந்த பாரதியின் கவிதைகளைச் சற்று ஆராய்வோம். பிற மதத் துவேஷம் சிறிதும் இல்லாதவர் பாரதி.

"தீயினைக் கும்பிடும் பார்ப்பார்—நித்தந்
திக்கை வணங்குந் துருக்கர்,
கோயிற் சிலுவையின் முன்னே நின்று
கும்பிடும் ஏசு மதத்தோர்
யாரும் பணிந்திடும் தெய்வம்—பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வமொன்று"

என்று கூறியதோடு நில்லாமல் "இதில் பற்பல சண்டைகள் வேண்டாம்" என்று இடித்துரைத்தார் பாரதி.

பிறமொழிகளிடத்து அவர் கொண்டிருந்த மரியாதையும் மதிப்பும் 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்து சேர்ப்பீர்' என்று கூவியழைக்குமிடத்தும், 'சுந்தரத்தெலுங்கினிற் பாட்டிசைத்து,' 'சிங்கமராட்டியர்தம் கவிதை கொண்டு,' 'வேதம் புதுமை செய்' என்பன போன்ற குறிப்புகளிலும் காணக்கிடக்கும். நிறவேறுபாட்டினைக் குறித்து.

எந்த நிறமிருந்தாலும்—அவை
யாவும் ஒரேதரமன்றோ ?
இந்த நிறம் சிறிதென்றும்—இஃது
ஏற்றமென்றும் சொல்லலாமோ
வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமையில்லை
எண்ணங்கள் செய்கையெல்லாம்—இங்கு
யாவர்க்கு மொன்று எனல் காணீர்

எனப் பாடியுள்ளார் பாரதி. சாதிக்கொடுமைகளை நீக்கி இந்தியர் அனைவரையும் ஒன்றுபடுத்தல் என்பதே பாரதியின் பாடல்களில் எல்லாம் தொனித்து நிற்கும் பெரும் ஆர்வம்.

"சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தன்னிற் செழுத்திடும் வையம்
ஆதரவுற்றிங்கு வாழ்வோம்—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்"

என்று பன்முறை கூறி, இந்திய சமுதாயத்தைப் பண்படுத்த முயன்றார் பாரதி. நாட்டு வேற்றுமையை ஒழித்தாலன்றி மனித சமுதாயம் நல்வாழ்வு பெறமுடியாதென்பதை நன்குணர்ந்த கவிஞர் சுதந்திர இந்தியாவைக் கனவு காண்கிறார். அதில் மக்கள் அடையும் நல்வாழ்வைச் சிந்தித்துப் பார்க்கிறார். உடனே அவர் கற்பனைக் கண்முன் நிற்பனயாவை? சிந்து நதியின் மிசை நிலவு, சேர நன்னாட்டு இளம்பெண்கள், கங்கை நதிப்புறத்துக் கோதுமை, காவிரி வெற்றிலை, சிங்க மராட்டியர் தம் கவிதை, சேரத்துத் தந்தங்கள், காசி நகர்ப் புலவர், ராசபுத்தானத்து வீரர், நல்லியற் கன்னடத்துத் தங்கம்—இங்ஙனமாக எந் நாட்டினதாயினும் உயர்ந்ததை உயர்ந்ததென ஒப்புக்கொண்டு அதை அடைந்து பயன்பெற முயற்சி செய்ய வேண்டும் என்ற பரந்த நோக்கம் கொண்டவர் பாரதி. குறுகிய மனப்பான்மை சிறிதும் இன்றி "எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் குலம்—இடம் பெரிதுண்டு வையத்தில், சண்டைகள் எதற்கு?" என்று முரசு கொட்டினார் பாரதி.

நம் தமிழ் நாட்டிற்குக் கவிஞர்கள் புதியவரல்லர். பாரதிக்குமுன் பல பெரிய கவிஞர்கள் வந்து போயுள்ளனர். ஆனால் வெறும் சிலேடைகளிலும் இலக்கண விதிகளிலும் பழங்கதைகளிலும் காலத்தை வீணாக்காது, மனிதனின் இயல்பை நன்குணர்ந்து, மனிதன் எந்நிலையிலிருக்கிறான்? அவனுக்குச் செய்யவேண்டிய அவசர உதவி எது? என்று ஆராயப்புகுந்த கவிஞர் வரிசையில் பாரதியே முதல்வர் என்னலாம். அகன்ற, ஆழமான, அன்பு ததும்பும் எண்ணங்கள்; அவற்றை வெளிப்படுத்த எளிய, பாமர நடை, இங்ஙனம் தாம் மாத்திரம் மேன்மேலும் பறந்து சென்று மேலேயுள்ள காட்சிகளைக் காணுவதில் திருப்திபெறாது, தம்முடன் வாழும் மக்கள் அனைவரையும் தம்முடன் மேலே எடுத்துச்சென்று, தாம் பெற்ற பேரின்பத்தைத் தம் சகோதரர்களுடன் பகிர்ந்துகொள்ளும் மனப்பான்மை கொண்டவர் பாரதி. இவைமட்டுமன்று. தம் சூழ்நிலையில் தாம் காணும் ஊழல்கள் தீர மருந்தை அரைத்துக் கொடுத்த பெருமை பாரதிக்கே உரியது. பாரதநாடு பழம் பெருநாடு, உன்னத ஆரிய நாடெங்கள் நாடு, தெய்வீகச் சாகுந்தலம் எனும் நாடகம் செய்தது எவர் கவிதை, என்றெல்லாம் நம் நாட்டின் பழைய பெருமைகளைப் பற்றிப் பலபடப் புகழ்ந்ததோடு நில்லாமல் 'நம்மை ஏய்ப்போருக்கேவல் செய்யும் காலம் போச்சு,' 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்,' 'பூமியில் எவர்க்குமினி அடிமை செய்யோம்,' 'பட்டினில் ஆடையும பஞ்சில் உடையும் பண்ணி மலைகளென வீதி குவிப்போம்,' 'ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம், ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைபபோம்' என இவை போன்ற காலத்துக்கேற்ற நிர்மாணதிட்டத்தை, வகுத்தார் பாரதி.

நம் நாட்டில் மக்கள் படுந்துயரை மறந்து, தம் கவிதை யுலகில் ஈடுபட்டிருந்திருபபாரேயானால் இன்று பாரதி தேசிய கவி எனப் புகழப்படமாட்டார். "தம்மைச் சூது செய்யும் நீசர்களைப் பணிந்திடுவார்—ஆத்திரங்கொண்டே இவன் சைவன், இவன் அரி பக்தன் என்று பெருஞ் சண்டையிடுவார்—கஞ்சி குடிப்பதற்கில்லார் அதன் காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்—எண்ணிலா நோயுடையார்—பிறர் காட்டிய வழியில் சென்று மாட்டிக்கொள்வார்" என்றெல்லாம் நம் நாட்டு மக்களின் பரிதாப நிலையைத் தம் ஊனக் கண் கொண்டு நுணுகிப பார்த்தார். பிறகு கற்பனைக் கண்கொண்டு பர்த்தார் சுதந்திர இந்தியனை. "ஒளிபடைத்த கண்ணினன், உறுதிகொண்ட நெஞ்சினன், எளிமைகொண்டு இரங்குவான், பொயமை கூறல் அஞ்சுவான், நோயகளற்ற உடலினன், வெற்றி கொண்ட கையினன், நாடெலாம் ஒற்றுமைகள் செய்யப்பெருஞ் செயல் செய்வான"—இங்ஙனமாக நின்ற சுதந்திர இந்தியனைத் தம் கற்பனைக் கண்கொண்டு பார்த்தார். இதுவும் போதவில்லை கவிஞருக்கு. தமது கருத்துக் கண்ணைத் திறந்து பார்த்தார். எங்கும் ஒரே சோதி, காக்கைச் சிறகினிலும், பார்க்கும் மரங்களிலும், கேட்குமொலியிலும் அதுவே. வேண்டுவோர் வேட்கையாய், வேட்பாராய், வேட்பாருக்கீண்டு பொருளாய், அதனை யீட்டுவதாய் நிற்கும் பரம்பொருளைக் காணும் பேறு பெற்றார் பாரதி. இங்ஙனம், தம் ஊனக் கண்ணால் மட்டுமன்றி, கற்பனைக் கண்ணாலும் கருத்துக் கண்ணா

லும் இவ்வுலகினைக் கண்டு வியந்து தாம் பெற்ற தண்ணமுதைத் தம் சகோதரர்கள் அனைவருள்ளத்தும் பாயும்படி செய்து காண விரும்பிப் பாடியவர் பாரதி.

கவிதையென்பது மனிதனையும் பரம்பொருளையும் இணைக்கும் ஒரு பாலம். கவிஞர்களில் சிலர் அப் பரம்பொருளைக் கடவுளென்பார்; மற்றையோர் அதை இயற்கையென்றோ, சக்தியென்றோ இயலென்றோ கூறுவர். எங்ஙனமாயினும், மனிதன் ஒவ்வொருவனும் அறிந்தோ அறியாமலோ அப்பரம்பொருளை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான். உண்மையை அறிந்து செல்வோர் தம் வழியிலுள்ள இன்னல்களை மதியாது முன்செல்வர்; உண்மையை அறியாது செல்வோர் வழியில் வரும் இன்னல்களால் மனமுடைந்து அங்கேயே தங்கி விடுவர்; தவறான பாதையிற் சென்று மேன்மேலும் துன்பத்திற்குள்ளாவர். இங்ஙனம் தடுமாறுவோருக்கு வழிகாட்டியாக நிற்பவரே உண்மைக் கவிஞர். கடவுளை மறந்து, அன்பை மறந்து பாடமாட்டார் பாரதி. உண்மைக் கவிதையென்றால் அது மனிதர்களுக்குக் கடவுளைக் காட்டும் சக்தி பெற்றிருக்க வேண்டும்; துன்பக்கடலைத் தாண்டுவிக்கும் அன்புத் தோணியாக இருக்கவேண்டும். இதற்கு முதலாவதாக, கவிஞனே அச்சக்தியைப் பெற்றிருக்கவேண்டும். பாரதி காண்கிறார் கண்ணனை. தூரத்தே நின்று தாம் செய்யும் குற்றங்களுக்காகத் தம்மைத் தண்டிக்கும் ஒரு கொடிய அரசனாகவா? அன்று. "மழைக்குக் குடை, பசி நேரத்துணவு, என்றன் வாழ்வினுக்கு எங்கள் கண்ணன்" என்கிறார் பாரதி. உண்ண உண்ணத் தெவிட்டாத உயிரெனும் முலையினின்றெடுத்த உணர்வெனும் பாலை வண்ணமுற வைத்துத் தமக்கு ஊட்டுமோர் தாயாகவும் காண்கிறார். மற்றுந் தம் சேவகனுக்வும் காதலனாகவும் காதலியாகவும் தம் இன்னருளை நாடிய நாடு அவலம் நீங்கிப் புகழில் உயரச் செய்விக்கும் அரசனாகவும் காண்கிறார் அக்கண்ணனை. இதுவே அமரகவியின் தனிப் பெருமை. தம் பாடல்களின் மூலம் கண்ணன் திருமுகத்தைக் கண்டு ஆனந்திக்கும் பேற்றை, மனிதருக்கெல்லாம் தந்துபோனார் பாரதி.

தம்மைச் சுற்றியுள்ளவரை நன்கறிந்து அவர்களுக்கு வேண்டுவன செய்து, தாம் நுகரும் இன்பங்களையெல்லாம் அவர்களும் நுகருமாறு செய்வித்து, உண்மைக் கவிதையென்னும் பாலத்தின்மீது அவர்களையழைத்துச் சென்று, கடவுளின் திருமுகத்தைக் காட்ட முனைந்த கவியே உண்மைக் கவி—ஆனந்தத்திற்கு வழிகாட்டும் நித்திய தோழன்—சமுதாயத்தை உய்விக்கும் பெரியோன். உள்ளத்தின் ஒளியை வெளியிடும் கவியே தெய்வக் கவி, தேசக் கவி, அன்புக் கவி, அமர கவி.


## பப்ளிஷர்களுக்கு

உங்களுடைய புத்தகவேலைகளைக் குறித்த டயத்தில் அழகாகவும், மனதிற்குத் திருப்தியாகவும் பிரிண்டிங் & பைண்டிங் செய்து கொடுக்கின்றோம். விபரங்களைத் தபாலிலோ நேரிலோ தெரிந்துகொள்ளலாம்.

**காவேரி கலர் பிரஸ்**

பெஸண்ட் ரோடு கும்பகோணம்

போன் 88



# பரிசு ரூ. 1000

(ஒரு நூதன கண்டு பிடிப்பு)

## மாய மோதிரம்

இந்த மோதிரம் அபூர்வ மந்திர சக்தியுடன் தயாரிக்கப்பட்டது. இது ஆச்சரியகரமான வேலைகளைச் செய்கிறது. எவரேனும் இம்மோதிரத்தை அணிந்துகொண்டால் எவ்வளவு கஷ்டமான காரியமாக இருந்தாலும் அல்லது தடுக்க முடியாத விபத்தாகஇருந்தாலும் வெற்றி பெறுவர். அது உங்களை எல்லாவிதமான ஆபத்துகளினின்றும் வியாதிகளிலிருந்தும் காப்பாற்றும். துர்கிரஹங்களின் தொந்தரவு நீங்கும். இம்மோதிரத்தை அணிபவர் தன் காதலரை (அவராலும் அவளாலும் சரி) சுலபமாக வசப்படுத்தலாம். அவரானாலும் அவளானாலும் உங்களுக்குக் கட்டுப்பட்டு, தன் செய்கைக்காகப் பச்சாதாபப்படுவார். நீங்கள் காதல் உத்தியோகத்தில் வெற்றிபெற்று ஏராளமான சம்பத்தையும் அடைவீர்கள். இம்மோதிரம் உங்களுக்கு ஒரு மெய்க்காப்பாளனாக உதவும். இதை ஒரு முறை பரீட்சித்து இதன் ஆச்சரியகரமான பலன்களை முதல்இரவே காணுங்கள். விலை ரூ. 1—15—0 ஸ்பெஷல் ரூ. 3—0—0 மிக்க சக்தி வாய்ந்தது ரூ. 3—15—0, போஸ்டேஜ் தனி. பலனளிக்காவிடில் விலை திருப்பியளிக்கப்படும்.

Principal,
**SHINING MESMERISM HOUSE (C. K.)**
**Kartarpur (E. P.)**



## பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானும் உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டு விட்டது. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளி வருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக் கொண்டு வந்தது. முகம் வெளுத்து விட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்தும் வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு] தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

**Shrimati. BIBI CHARAN PIARI**

**Sant Nagar (C. K.)** **Jullundur City.**

# காம சாஸ்திரம்

உலகத்தில் மிக்க அத்தியாவசியமான ஆண்—பெண் சேர்க்கையைப் பற்றிய 84 ஆசனங்களை உடைய, ரகசியக் குறிப்புகளுடன் கூடிய மிகவும் உயர்ந்த புத்தகம். 84 ஆசனங்களின் 200 வகை நிற போட்டோ படங்கள், தனித்தும், சேர்ந்தும் பல்வகை முறையில் போகம் துய்ப்பது போன்ற நீங்கள் இதுவரை அறிந்திராத பல ரகசியங்களை யெல்லாம் இப்புத்தகம் வெளிப்படுத்துகிறது. கல்யாணமாகாதவர்கள் இப்புத்தகத்திற்கு எழுதற்க. 1 புத்தகம் விலை ரூ. 2-12-0. ரகசிய போட்டோ பலவகை தோற்றத்தில் கிடைக்கும். 25 கார்டுகள் தனித்திருப்பது ரூ. 2—12—0. 50 கார்டுகள் சேர்ந்திருப்பது விலை ரூ. 5—0—0. ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்

**M|s. French Photo Supply Company**

**(C. K.) JULLUNDUR CITY**



## ரொக்கப்பரிசு ரூ. 1000

(அபூர்வ சக்தியுடையது)

# மாய மோதிரம்

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும் மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்துகொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்த்தேவதைகள் உங்களிடம் அணுகா. இந்த மாய மோதிரத்தை அணிந்துகொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக்கேட்டாலே நடுங்குவர். காணமற்போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும் உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றியடைவீர்கள். சுருங்கச்சொன்னால் இம்மோதிரம் ஒரு பாதுகாப்பாளரைப் போன்றது. ஒருமுறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் ரூ. 3—0—0. ஸ்பெஷல் அதிக சக்திவாய்ந்தது ரூ. 3—15—0. தபாற்செலவு தனி. பலனில்லை யென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

**Principal, Bengal Mesmerism House (C. K.)**

**JULLUNDUR CITY. Pb.**



Edited & Published by N R Ramanujan & Printed by S. Rangaswami at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.



## அறிவாளி

அறிவு விஷயஞானத்திலிருந்தும்
விஷயஞானம் அனுபவத்திலிருந்தும் உண்டாகிறது.

இந்தியாவிலுள்ள மற்ற பல்லாயிரக்கணக்கான ஜனங்களைப்போல் இவனும் மலேரியாவைக் குணப்படுத்துவதற்குச் சுலபமான வழி 'பாலுட்ரின்' மாத்திரைகளைச் சாப்பிடுவதல்தான் என்று அறிந்திருக்கிறான்.

'பாலுட்ரின்' மலேரியா ஜுரத்தைக் குணப்படுத்துவதுமன்றி தவறும் சாப்பிட்டு வந்தால் தடுக்கவும் செய்கிறது. மலேரியா பிடிக்கும் காலத்தில் உங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பு அளியுங்கள்—பெரியோர்களுக்கு ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்ட நாளில் ஒரு மாத்திரை விகிதமும் குழந்தைகளுக்கு கால் அல்லது அரை மாத்திரை விகிதமும் கொடுக்கவும்.




முன்புறம் பின்புறம்

நீங்கள் 'பாலுட்ரின்' வாங்கும் போது 8 மாத்திரைகள் கொண்ட பிரத்யேக, பளிங்கு காகித உறையில் கொடுக்கப்படுகிறதா என்று கவனிக்கவும். உண்மையான 'பாலுட்ரின்' மாத்திரைகள் மேற்கண்டவாறு குறிக்கப்பட்டிருக்கும்.

# 'பாலுட்ரின்'

Trade Mark

மலேரியாவை ஒழிக்கிறது

ஒரு வாரத்திற்கு வேண்டிய ஒரு மாத்திரை
விலை ஒரு அணா




ஒரு காகித உறை
விலை 8 அணா

ICI

குணத்தின் சின்னம்

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்.

PH-34


மூளைக்கு
குளிர்ச்சியையும்
கேசத்துக்கு
வளர்ச்சியையும்
கொடுப்பதில்
நிகரற்றவை
டி.எஸ்.ஆர்.
கோகுல் ஹேர் ஆயில்
சந்தனாதி தைலம்
அரைக்கீரைவிதை தைலம்
கோகுல் அம்பர் வத்தி
டி.எஸ்.ஆர். & கோ,
கும்பகோணம்.
இணையிலா வாசனை
தயாரிப்புகளுக்கு
டி.எஸ்.ஆர்.
FAS-390.